Vol.5, Issue 9 | Annual Subscription ₹480

@NewsRotary

/RotaryNewsIndia

பிப்ரவரி 2023

# ரோட்டரி நியூஸ்

INDIA

www.rotarynewsonline.org



Rotary

# சர்வதேச மாநாட்டின் துளிகள்



**மேலே:** *அமிதா கோட்பாகி, வினிதா வெங்கடேஷ் மற்றும் ஷிப்ரா ராய்சௌத்ரி அர்லாண்டோவில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் பிற பங்கேற்பாளர்களுடன்.*



**இடமிருந்து:** *RI இயக்குநர் மகேஷ் கோட்பாகி, அமிதா, வினிதா மற்றும் RI இயக்குநர் A S வெங்கடேஷ்.*



*RIPE கார்டன் மெக்கினல்லியின் மனைவி ஹீதர் அவர்களுடன் இந்திய ரோட்டரியினர். RIDE T N சுப்ரமணியன் மற்றும் வித்யா, TRF அறங்காவலர் பரத் பாண்ட்யா மற்றும் வினிதா வெங்கடேஷ் ஆகியோரும் உள்ளனர்.*

# உள்ளே


12
ஆர்வம், அர்ப்பணிப்பு, தொடர் முயற்சி பழங்குடியினர் கிராம மக்களின் வாழ்வில் மாற்றம் ஏற்படுத்திய வர்லி ரோட்டரி சங்கம்!

20
ரோட்டரியை தவிர்க்க முடியாததாக மாற்றுங்கள்

22
போலியோவின் இறுதி கட்டத்திற்கு ஆதரவளிக்க இந்திய ரோட்டேரியன்களுக்கு வேண்டுகோள்

26
தங்கள் சேவைத் திட்டங்கள் மூலம் இந்தியாவை பெருமைப்படுத்தியுள்ள DGக்கள்

28
அறக்கட்டளை, உறுப்பினர் - ரோட்டரியின் வலிமைக்கான தூண்கள்

30
LGBTQ பற்றிய உரையாடல்

34
ரோட்டரி பலவீனமாக இருக்கிறதா?

38
ரோட்ராக்டர்களுக்கு மேம்படுத்தப்பட்ட வாய்ப்புகள் காத்திருக்கின்றன

40
தொழில்முனைவோரை உருவாக்கும் RID 3212

44
போரில் பாதிக்கப்பட்ட உக்ரைன் குழந்தைகளுக்கு “நகரும் வீடு”

52
இந்திய ராணுவத்தினருக்கான ரோட்டரி மாரத்தான்


60
கவர்ச்சிக்குரல் மன்னன் ஹேமந்த்குமார்!

68
இந்திய உணவின் பன்முகத்தன்மையைக் கொண்டாடுதல்

74
நல்ல ஆரோக்கியத்திற்கான சிறிய அடிகள்




## *விசாகா விஸ்டாபற்றி மிக நல்ல பதிவுகள்*




*விசாகா விஸ்டா சந்திப்பில் நடைபெற்ற நடன நிகழ்ச்சி ஒன்றைப் பதிவு செய்த ஜனவரி இதழின் அட்டைப் படம் மிகச் சிறப்பாக இருந்தது. உறுப்பினர்களைத் தக்க வைத்துக் கொள்வது பற்றிய RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸின் கருத்துகள் ஆர்வம் ஊட்டுகின்றன. RID மகேஷ் கோட்பாகி மதிப்பு கூட்டப்பட்ட ரோட்டரி சந்திப்புபற்றி எழுதியிருந்ததைப் படித்து மகிழ்ந்தோம். RID A S வெங்கடேஷ் ஒன்றாதலின் ஆற்றலை நன்கு விளக்குகிறார், புத்தாண்டில் அதைப் பயன்படுத்தும் படி வலியுறுத்துகிறார். விசாகப்பட்டினத்தில் ஆர்வத்தைத் தூண்டிய மிகப் பெரிய திட்டங்கள் என்பது மிகப் பயனுள்ள கட்டுரை, அதன் புகைப்படங்கள் சிறப்பாக அமைந்திருந்தன. கவாஸ்கருடைய மூன்றாவது இன்னிங்க்ஸ், இந்தியா பெறும் நாடு என்ற நிலையிலிருந்து வழங்கும் நாடாக மாறுகிறது மற்றும் சுற்றுச்சூழலுக்கு இதமான கிராமங்களை உருவாக்கும் புணே ரோட்டரியன்கள் போன்ற கட்டுரைகளும் ஷம்சத் பேகத்தின் வாழ்க்கைக் கதையும் மிக நன்றாக அமைந்திருந்தன. அனைத்துப் புகைப்படங்களும் எப்போதும்போல் வண்ணமயமாக இருந்தன.*

*ஃபிலிப் முலப்பொனெ* M T
RC *திருவனந்தபுரம் சப்அர்பன்* — D 3211

*ஒவ்வொரு துளி நீரையும் சேமிக்கவேண்டும் என்கிற ராஜேந்திர சிங்கின் அறிவுரையை ரோட்டரியன்கள் பின்பற்றவேண்டும். "பூமியில் நீர் இல்லாமல் போய்விட்டால்,* RBI*ன் பணத்துக்கு எந்த மதிப்பும் இருக்காது" என்றும், விவசாயம் பெரும் அளவு நீரைப் பயன்படுத்துகிறது என்றும் அவர் சொல்வது மிகச் சரி. இந்த அச்சுறுத்தும் சூழலைச் சமாளிக்கச் சில வழிகள்தான் உள்ளன: நீர்ச் சேமிப்பு, தரையடி நீரைப் புதுப்பித்தல். கார்களைக் கழுவுவது, புல்வெளிகளுக்கு நீர் பாய்ச்சுவது போன்றவற்றில் நாம் நிறைய நீரை வீணடிப்பதைத் தவிர்க்கவேண்டும். குளிக்கும்போது ஷவருக்குப் பதில் வாளியைப் பயன் படுத்தினால் ஒவ்வொரு நபரும் குறைந்தது 5 லிட்டர் நீரைச் சேமிக்கலாம்.*

*ராஜ் குமார் கபூர்,* RC *ரூப்நகர்* — D 3080

*எல்லா ரோட்டரியன்களாலும் சந்திப்பில் கலந்துகொள்ள இயலாது. அதனால், அதை நமக்குக் கொண்டுவருவதில் ரோட்டரி நியூஸ் குறிப்பிடக்கூடிய பங்கை ஆற்றுகிறது. இந்த இதழை முழுமையாகப் படித்தால் நாம் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டதுபோன்ற உணர்வைப் பெறுகிறோம்.*

R *ஸ்ரீனிவாசன்,* RC *பெங்களூரு* J P *நகர்* — D 3190

டிசம்பர் இதழ் சிறப்பாக இருந்தது. RID 3110ன் செயல்பாடுகள் பாராட்டவேண்டியவை. சூரிய ஒளி உலர்விப்பான்கள், இன்டராக்டர்கள், வோர்ட்ஸ்வேர்ல்ட், சுற்றுச்சூழல் சார்ந்த பொறுப்புபற்றிய கட்டுரைகளும் நலப்பத்தியும் சிறப்பாக அமைந்திருந்தன. எனக்குத் திரைப்படங்களும் இசையும் மிகவும் பிடிக்கும். S R மது எழுதிய முகேஷ்: சோக ரசத்தின் பேரரசர் கட்டுரை என்னைப் பொன்னிசையின் அழகிய சகாப்தத்துக்குள் திரும்ப அழைத்துச் சென்றது.

சந்தோஷ் திவாரி, RC ஜல்னா
ரெயின்போ — D 3132

டிசம்பர் இதழில் RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் ஜாம்பியாவில் பரவலாக உள்ள கொடுமையான நோயாகிய மலேரியாவின் மீது கவனம் செலுத்தியுள்ளார். காலநிலை மாற்றத்தால் உண்டாகும் சவால் களை ஆசிரியர் பக்கம் நன்கு விவரித் துள்ளது, மியாவாகிக் காடுகளை உருவாக்குதல், சுற்றுச்சூழலுக்கு இதமான மற்ற திட்டங்களின் மூலம் சுற்றுச் சூழல் சேதத்தை நிறுத்து வதற்கு ரோட்டரி சங்கங்கள் செய்து வரும் பணியைச் சரியாகச் சுட்டிக் காண்பித்துள்ளது.

S முனியாண்டி, RC திண்டுக்கல்
ஃபோர்ட் — D 3000

ரோட்டரியன்களிடையில் கால்ஃப் தோழமை பற்றிப் படித்து மகிழ்ந் தேன். கால்ஃப் விளையாடு வதை மிகவும் விரும்பும் நான் இக்குழுவின் உறுப்பினராக விரும்பு கிறேன், அதற்கான தொடர்புத் தகவல்களை நாடுகிறேன்.

கேப்டன் சதீஷ் யாதவ்
RC போபால் ஹில்ஸ் — D 3261

PDG பராக் சேத் அவர்களை *parag@ambicasalt.com* என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நல திட்டங்கள் புகைப்படங்களுடன் **rushbhagat@gmail.com** அல்லது **rotarynewsmagazine@gmail.com** என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். **WHATSAPP** செய்திகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் **www.rotarynewsonline.org** என்னும் இணைய தளத்தில் **Rotary News Plus** என்னும் இதழில் காணலாம்.

**அட்டைபடம்:** RC *பாம்பே வர்லி* (RID 3141) *ஒரு கிராம பள்ளியில் அமைத்துள்ள பூங்காவில் பள்ளி குழந்தைகளுடன் பள்ளி தலைவர் ரவி கஜாலே.*




New members from different groups in our communities bring fresh perspectives and ideas to our clubs and expand Rotary's presence. Invite prospective members from all backgrounds to experience Rotary.

**REFER A NEW MEMBER**
my.rotary.org/member-center

Rotary

FIND A CLUB
ANYWHERE IN THE WORLD!



Use Rotary's free Club Locator and find a meeting wherever you go!

www.rotary.org/clublocator


## District Wise TRF Contributions as on December 2022

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Other Funds | Total Contribution |
|---|---|---|---|---|---|
| **India** | | | | | |
| 2981 | 17,312 | 512 | 0 | 1,125 | 18,949 |
| 2982 | 8,971 | 1,694 | 4,001 | 33,116 | 47,782 |
| 3000 | 21,110 | 2,772 | 0 | 0 | 23,882 |
| 3011 | 33,370 | 8,063 | 25,127 | 209,234 | 275,794 |
| 3012 | 11,867 | 752 | 65,235 | 113,918 | 191,772 |
| 3020 | 105,351 | 7,902 | 40,000 | 0 | 153,253 |
| 3030 | 33,399 | 286 | 0 | 1,275 | 34,961 |
| 3040 | 17,886 | 1,992 | 0 | 21,925 | 41,803 |
| 3053 | 40,761 | 136 | 0 | 0 | 40,897 |
| 3054 | 8,485 | 507 | 0 | 31,500 | 40,492 |
| 3060 | 62,737 | 425 | 0 | 64,635 | 127,797 |
| 3070 | 51,692 | 2,570 | 35,966 | 9,209 | 99,438 |
| 3080 | 15,640 | 2,482 | 0 | 38,163 | 56,285 |
| 3090 | 7,640 | 0 | 4,951 | 0 | 12,592 |
| 3100 | 49,032 | 400 | 25,012 | 0 | 74,445 |
| 3110 | 14,151 | 454 | 24,304 | 624,953 | 663,862 |
| 3120 | 23,460 | 411 | 0 | 0 | 23,871 |
| 3131 | 263,542 | 7,540 | 35,303 | 215,555 | 521,940 |
| 3132 | 16,824 | 2,391 | 50,000 | 1,000 | 70,215 |
| 3141 | 642,401 | 31,200 | 102,003 | 1,250,561 | 2,026,165 |
| 3142 | 157,281 | 3,691 | 24,866 | 77,045 | 262,883 |
| 3150 | 69,040 | 27,172 | 42,000 | 417 | 138,629 |
| 3160 | 2,996 | 2,363 | 0 | 3,675 | 9,034 |
| 3170 | 70,150 | 30,595 | 15,506 | 380 | 116,631 |
| 3181 | 60,073 | 590 | 25 | 912 | 61,601 |
| 3182 | 32,446 | 2,789 | 100 | 0 | 35,335 |
| 3190 | 38,214 | 4,859 | 0 | 22,236 | 65,309 |
| 3201 | 85,341 | 22,692 | 12,195 | 385,088 | 505,316 |
| 3203 | 4,057 | 12,783 | 1,000 | 26,479 | 44,318 |
| 3204 | 5,103 | 565 | 0 | 152 | 5,820 |
| 3211 | 65,818 | 5,000 | 10,000 | 1,049 | 81,867 |
| 3212 | 156,402 | 35,615 | 305 | 42,146 | 234,467 |
| 3231 | 58,795 | 22,797 | 32,278 | 1,569 | 115,439 |
| 3232 | 49,072 | 55,863 | 19,358 | 157,596 | 281,888 |
| 3240 | 72,049 | 14,729 | 1,000 | 3,622 | 91,399 |
| 3250 | 11,509 | 200 | 0 | 12,805 | 24,514 |
| 3261 | 11,218 | 917 | 0 | 5,277 | 17,412 |
| 3262 | 41,193 | 463 | 700 | 32,771 | 75,127 |
| 3291 | 49,125 | 1,162 | 40,533 | 8,190 | 99,010 |
| **India Total** | **2,485,511** | **317,336** | **611,769** | **3,397,577** | **6,812,194** |
| 3220 **Sri Lanka** | 43,562 | 8,333 | 3,000 | 226 | 55,122 |
| 3271 **Pakistan** | 25 | 22,125 | 0 | 250 | 22,400 |
| 3272 **Pakistan** | 455 | 87 | 0 | 5,000 | 5,542 |
| 3281 **Bangladesh** | 50,551 | 1,446 | 21,125 | 91,745 | 164,867 |
| 3282 **Bangladesh** | 45,440 | 6,701 | 2,000 | 10,320 | 64,462 |
| 3292 **Nepal** | 231,592 | 20,236 | 49,167 | 28,830 | 329,824 |
| **South Asia Total** | **2,857,137** | **376,264** | **687,060** | **3,533,948** | **7,454,410** |

Annual Fund (AF) includes SHARE, Areas of Focus, World Fund and Disaster Response.

**Source:** RI South Asia Office

# பெண்களுக்கு ஆற்றல் அளிப்பது என்பது, சமநிலையை உருவாக்குவதைத் தாண்டி நீள்கிறது




எஸ்தர் ரூத் எம்பாபாசி

*நாகிவலே குடியிருப்பில் கால்பந்து போட்டியை ரசிக்கும் RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் மற்றும் ஜிம்பாபே நடிகை சிபோங்கிலே ம்லாம்போ.*

சமீபத்தில், உகாண்டாவில் உள்ள நாகிவலெ தஞ்சமடைந்தோர் குடியிருப்புக்குச் சென்றிருந்தேன். ''குடியிருப்பு'' என்ற பெயருக்கு ஏற்றபடி இங்கு வாழும் மக்கள் விருப்பம்போல் எங்கும் செல்லலாம், இந்தச் சூழலுடன் ஒருங்கிணையலாம், இது இந்த இடத்தின் தனித்துவங்களில் ஒன்று.

சுமார் ஒரு டஜன் நாடுகளைச் சேர்ந்த பையன்கள், பெண்களுடன் கால்பந்து விளையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது, முரண் நிறைந்த பகுதிகளில் இருந்து தப்பி வந்த பெண்களுடன் நான் பேசினேன். சிரிப்பு, கண்ணீர் ஆகிய இரண்டின் வழியாகவும் பகிர்ந்துகொள்ளப்பட்ட மனித அனுபவங்களின் கலவையாக அது அமைந்தது.

இந்தக் குடியிருப்பில் உள்ள ஒரு பள்ளியில், ஆசிரியர் ஒருவர் பெண்கள் கல்வியைப்பற்றிய தீவிரமான சில புள்ளிவிவரங்களை என்னிடம் பகிர்ந்துகொண்டார். பெரும்பாலான பெண்கள் பள்ளி நிலையைத் தாண்டுவதில்லை. இவர்களில் பலருக்குச் சிறுவயதில் திருமணம் செய்துவைக்கப்பட்டு விடுகிறது, அதன் மூலம், இவர்களுடைய குடும்பங்களுக்கு உணவு அளிப்பதற்கு இவர்கள் விற்கப்படுகிறார்கள். அந்த இளம் பெண்களைப் பார்த்தபோது, நான் கவலையில் ஆழ்ந்தேன்.

சிறுமிகளுக்கும் பெண்களுக்கும் ஆற்றல் அளிக்கிற நம்முடைய பணி, சமநிலையை உருவாக்குவதைத் தாண்டி நீள்கிறது: சில நேரங்களில், அது நலன் அல்லது கல்வியைப்பற்றியதாக உள்ளது. மற்ற நேரங்களில், அது பாதுகாப்பு வழங்குவதைப்பற்றியதாக உள்ளது. வழி எதுவானாலும் சரி, அது எப்போதும் அடிப்படை மனித உரிமைகளைப்பற்றியது.

சிறுமிகள், பெண்களுக்கு ஆற்றல் அளிக்க நாம் இன்னும் நிறையச் செய்யலாம். நைஜீரியாவில் பெண்களுக்கு நுண்கடன் அளித்தல், இந்தியாவில் சிறுமிகளுக்கு மாதச் சுழற்சித் தூய்மைப் பொருட்களை வழங்குதல் என்று நாம் செய்து வருகிற ஊக்கம் தரும் பணிகளுக்கு எடுத்துக் காட்டுகள் ஏராளம். ரோட்டரி கவனப் பகுதிகள் அனைத்திலும் நூற்றுக்கணக்கான திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

நாம் ஒன்றாகச் சேர்ந்து பணியாற்றினால், உலகெங்கும் உள்ள பெண்கள் நாள்தோறும் சந்திக்கிற தேவைகள், சமநிலை யின்மைகளை நாம் சரி செய்யலாம். ஆனால், இந்தத் திட்டங்களின் தாக்கத்தையும் நாம் கண்காணிக்கவேண்டும், ரோட்டரி செயல் குழுக்கள், ரோட்டரி அறக் கட்டளையின் தொழில்நுட்ப அறிவுறுத்துனர்களுடைய குழு, ரோட்டரி அமைதித் தோழர்கள் உள்ளிட்ட ரோட்டரி வளங்கள், தலைப்பு வல்லுனர்களைப்பற்றிய விழிப்புணர்வை உண்டாக்க வேண்டும்.

குறிப்பாக, பெண்கள் மற்றும் சிறுமிகளுடைய வாழ்க்கைகளில் நேர்விதமான தாக்கம் கொண்டுள்ள நம் முன்னெடுப்புகளுடைய கதைகளை நாம் சொல்வது மிகவும் முக்கியமாகும். நான் கடைசியாகச் சொன்ன அம்சம் என் நெஞ்சுக்கு நெருக்கமானது. இதன் பொருள், சமூக ஊடகங்களில், உள்ளூர்ச் செய்தி ஊடகங்களின் வழியாக, இந்த இதழில், நாம் பிறருக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய எல்லா இடங்களிலும் நம் கதைகளைப் பகிர்ந்துகொள்வது.

நீங்கள் அப்படிச் செய்யும்போது, நம் ரோட்டரி குடும்பமும் வெவ்வேறு பகுதிகளிலும் உலகெங்கும் செயல்பாடுகளை நடத்திவருகிற பிறரும் ஒருங்கிணைய உதவுகிற தக வல்களை வழங்குவது முக்கியம். நாம் நம்முடைய வெற்றிகளைப் பகிர்ந்து கொள்வோம், ஒருவரிடமிருந்து மற்றவர் கற்றுக்கொள்வோம், அதன்பிறகு, நம் கதைகளை இன்னும் பெரிய கூட்டத்துக்குப் பெருமையுடன் சொல்வோம்.

**ஜெனிஃபர் ஜோன்ஸ்**
RI தலைவர்



# சுற்றுச்சூழல் பேரழிவிற்காக காத்திருக்கிறதா ஜோஷிமத்

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் ரோட்டரி அதிக கவனம் செலுத்தி வரும் ஓராண்டிற்குள் இமயமலைப் பகுதியில் அமைந்துள்ள ஜோஷிமத்தில் மனிதர்களால் உருவாக்கப் பட்ட பேரழிவை நாம் எதிர் கொண்டுள்ளோம். நல்லவேளையாக அரசு உத்தரவுக்கு முன்னரே இஸ்ரோவின் (இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின்) தேசிய தொலையுணர்வு மையம் மூலம் சமோலி மாவட்டத்தில் அமைந்துள்ள இந்த கோவில் நகரமும், புனித ஸ்தலமான பத்ரிநாத் செல்வதற்கான நுழைவுவாயிலான, மலை அடிவார முகாம் கடந்த டிசம்பர் 27ம் தேதி தொடங்கி 12 நாட்களுக்குள் மண்ணில் 5.4 செ.மீ. அளவுக்கு புதையுண்டுள்ளதாக அறிந்தோம். கடந்த ஜனவரி 2ம் தேதி வீடுகளில் ஏற்பட்ட விரிசல்கள் ஜோஷிமத் நகரில் குடியிருப்பவர்களுக்கு அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. இவை சமீபத்தில் தான் மண் அரிமானம் ஏற்பட்டுள்ளதற்கு சான்றாகும். கடந்த சில மாதங்களைவிட மண்ணில் நகரம் புதைவது சற்று குறைந்துள்ளது எனலாம். ஏனெனில் கடந்த ஆண்டு ஏப்ரல் மற்றும் நவம்பர் மாதங்களுக்கு இடையில் ஜோஷிமத் நகரம் 9 செ.மீ. அளவுக்கு மண்ணில் புதைந்துள்ளது.

அதனால் தான் அழகிய கோவில் நகரமான ஜோஷிமத் இப்போது மெல்ல மெல்ல புதையுண்டு பேரழிவை சந்தித்து வருவதாக வரும் செய்திகளை படிக்கும்போது நெஞ்சம் குமுறுகிறது. செயற்கைக்கோள் மூலம் கிடைத்த ஆய்வுத் தகவலுக்குப் பின் இதுவரை 4,000 பேர் பாதுகாப்பாக நிவாரண முகாம்களில் தங்கவைக்கப் பட்டுள்ளனர். ஹோட்டல்கள், வர்த்தக நிறுவனங்கள் தவிர சுமார் 700 வீடுகள் விரிசல்கள் காரணமாக அபாய நிலையில் உள்ளதை உத்தரகண்ட் அரசே ஒப்புக் கொண்டுள்ளது. இந்த சுற்றுச்சூழல் பேரழிவுக்கு மனிதர்கள் தான் காரணம் என்று நிபுணர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். திட்டமிடாமல் மேற் கொள்ளப்பட்ட உள்கட்டமைப்புத் திட்டங்கள், குறிப்பாக மலைப் பகுதியில் குண்டுவைத்து தகர்க்கும், துளையிடும் மின் திட்டங்கள் போன்றவைதான் இதற்கு காரணம் என்று சொல்லப்படுகிறது. ஆனாலும் இப்போது நிலைமையை ஆராய ஒரு குழு அமைக்கப் பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர் களுக்கு நிவாரணம் வழங்கவும், மறுவாழ்வு அளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது சற்று ஆறுதல் அளிக்கிறது.

இந்த பேரழிவு எப்படி ஏற்பட்டது? முதலில் ஜோஷிமத் நகரம் கடினமான பாறைகளில் அல்லாமல் மென்மையான பாறைகள் மற்றும் மணல் கற்களால் அமைந்துள்ளது. அதுவும் நில அதிர்வு மண்டலம் ஐந்தில் அமைந்துள்ளது. அதாவது அடிக்கடி பூகம்பம் ஏற்படும் இடம். இதுபோதாது என்று அங்கு திட்டமிடாத வளர்ச்சிப் பணிகள் வேறு நிலைமையை மோசமாக்கிவிட்டது. கடந்த 1976 ஆண்டில் அப்போது ஜோஷிமத் மாவட்டத்தின் ஆட்சியராக இருந்த M C மிஸ்ரா என்பவர், மிகவும் ஆபத்தான ஜோஷிமத் நகரத்தில் நிலத்தை தோண்டும் பணிகளோ அல்லது தகர்க்கும் பணிகளோ அரசு மேற்கொள்ளக்கூடாது என்று எச்சரித் திருந்தார். முறையான வடிகால் வசதி இல்லாதது, சுற்றுலாப் பயணிகள் மற்றும் யாத்ரீகர்கள் எண்ணிக்கை அதிகரிப்பால் ஹோட்டல்கள் உணவகங்கள் அமைக்க திட்ட மிடாமல் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டது பேரழிவு ஏற்பட வழிவகுத்துவிட்டது.

எனவே இதிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் என்ன? சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டுள்ள இமயமலைப் பகுதியில் மலைகளை கண்மூடித்தனமாக குண்டுவைத்து தகர்ப்பது, சுரங்கங்கள் வெட்டுவது, சாலைப் பணிகளை மேற்கொள்வது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இமயமலை, அந்தமான் நிகோபார், லட்சத்தீவு போன்ற சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் பகுதிகளில் அவசர கதியில் வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளும் அரசுகளுக்கு இது ஒரு எச்சரிக்கையாகும். மேலும் வனப்பகுதி நிலங்களை தனியார் தொழில்நிறுவனங்களுக்கு தாரை வார்த்து கொடுக்கும் செயலும் (விற்பதும்) நிறுத்தப்பட வேண்டும். நீதிமன்றங்களைப் பொறுத்தவரை உத்தரகண்ட் உயர்நீதிமன்றம் கடந்த 2021ம் ஆண்டு சமோலி மாவட்டத்தில் நீர்மின் திட்டங்களுக்கு வழங்கப் பட்ட அனுமதிகளுக்கு எதிராக தொடுக்கப்பட்ட ஐந்து வழக்குகளை தள்ளுபடி செய்து, மனுதார்ரகளுக்கு தலா ரூ.10,000 அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கியது. ஆனால், அங்கு 2021 பிப்ரவரி மாதம் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் சிக்கி 200 பேர் உயிரிழந்த சம்பவம் நடந்தது. அப்படியானால், நீதிமன்றங்கள் அரசின் ஊதுகுழலா? என்ற சந்தேகம் எழுகிறது. பூமியில் சுற்றுச்சூழலை பாதுகாக்க ஆதரவுக் குரல் எழுப்புபவர்களை சுற்றுச்சூழல் பயங்கரவாதிகள் போல் சித்தரிப்பதை நிறுத்துவிட்டு, இயற்கை அன்னையை மதிக்க கற்றுக்கொள்ளும் நேரம் வந்து விட்டது.

நீதிமன்றங்களைப் பொறுத்தவரை, இந்த சோகம் உத்தராஞ்சல் உயர் நீதிமன்றத் தீர்ப்பை எவ்வாறு சரியாக உருவாக்குகிறது, இது ஜூலை 2021ல் சாமோலி மாவட்டத்தில் சில ஹைடல் திட்டங்களுக்கு வழங்கப்பட்ட பசுமை அனுமதிகளை ரத்து செய்யக் கோரிய ஐந்து மனுதாரர்களை விவரித்தது. இயற்கை அன்னைக்கு அதிக மரியாதை கொடுக்க கற்றுக்கொள்ள வேண்டிய நேரம் இது.

ரஷீதா பகத்

**ஆளுநர் குழு**

RID 2981 செல்வநாதன் V
RID 2982 சரவணன் P
RID 3000 ஜெரால்ட் I
RID 3011 அசோக் கண்டூர்
RID 3012 Dr லலித் கன்னா
RID 3020 பாஸ்கர் ராம் V
RID 3030 Dr ஆனந்த் ஜுன்ஜுனுவாலா
RID 3040 ஜினேன்தர ஜெயின்
RID 3053 ராஜேஷ்குமார் சூரா
RID 3054 பல்வந்த் S சிரானா
RID 3060 ஶ்ரீகாந்த் இந்தானி
RID 3070 Dr துஷ்யந்த் சௌத்ரி
RID 3080 கல்டா V P
RID 3090 குல்பர் சிங் சௌத்ரி ரெடோல்
RID 3100 தினேஷ் குமார் சர்மா
RID 3110 பவன் அகர்வால்
RID 3120 அனில் அகர்வால்
RID 3131 Dr அனில் லால்சந்த் பார்மர்
RID 3132 ருக்மேஷ் ஜகோட்டியா
RID 3141 சந்தீப் அகர்வல்லா
RID 3142 கைலாஷ் ஜித்தானி
RID 3150 டல்லா ராஜசேகர் ரெட்டி
RID 3160 வொமினா நாக சதீஷ்பாபு
RID 3170 வெங்கடேஷ் H டேஷ்பாண்டே
RID 3181 N பிரகாஷ் காரன்த்
RID 3182 Dr ஜெயகௌரி ஹடிகல்
RID 3190 ஜிதேந்திரா அனேஜா
RID 3201 ராஜ்மோகன் நாயர் S
RID 3203 இளங்குமரன் B
RID 3204 ப்ரமோத் நாயனார் V V
RID 3211 பாபுமோன் K
RID 3212 முத்து V R
RID 3231 பழனி J K N
RID 3232 Dr நந்தகுமார் N
RID 3240 குஷாநாவா பாபி
RID 3250 சஞ்ஜீவ்குமார் தாகூர்
RID 3261 ஷஷங்க் ரஸ்டோகி
RID 3262 பிரவுதத்தா சுபதி
RID 3291 அஜய்குமார் லா

துகார் டவர்ஸ், 3-வது தளம், மார்ஷல் சாலை, எழும்பூர், சென்னை-8. முகவரியில் இயங்கும் ரோட்டரி நியூஸ் டிரஸ்டுக்காக, P T பிரபாகரால், “ராசி கிராபிக்ஸ் P Ltd., 40, பீட்டர்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை-14” என்ற முகவரியில் அச்சிடப் பட்டு வெளியிடப்படுகிறது.
**ஆசிரியர்:** ரஷீதா பகத்.

ரோட்டரி மாத இதழில், பங்களிப்பாளர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் ஆசிரியர் அல்லது ரோட்டரி நியூஸ் டிரஸ்டின் (RNT) அறங்காவலர்கள், RI ஆகியோரின் கருத்துக்கள் அல்ல. தலையங்கம்/விளம் பரத்தில் வெளியிடப்படும் கருத்துக் களினால் ஏற்படும் இழப்புகளுக்கு எந்த பொறுப்பும் ஏற்க முடியாது. கட்டுரை களை திருத்தவோ / சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

இணையதளம்



# உங்களைச் சுற்றியுள்ள உலகத்தை நேசிக்கவும்



ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 14ம் தேதி சந்தோஷமான நாள், வந்தனை, வழிபாடு மற்றும் நட்புறவு தினமாக கொண்டாடப்படுகிறது. உங்கள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு பாராட்டுகளைத் தெரிவிக்கும் நாளாகும். அன்பை உலகுக்கு கற்றுக்கொடுத்த செயின்ட் வாலன்டைனை கௌரவிக்கும் வகையில் அந்த நாள் கொண்டாடப்படுகிறது.

அன்பு சுவாசத்தைப் போல் இருக்க வேண்டும். அது உங்களின் குணமாக இருக்க வேண்டும். நீங்கள் எங்கிருந்தாலும், யாருடன் இருந்தாலும் அல்லது நீங்கள் தனிமையில் இருந்தாலும் அன்பு உங்களிடமிருந்து பொங்கி வழிய வேண்டும். இது யாரோ ஒருவரை காதலிப்பது போன்றது அல்ல. அதற்கும் மேலானது அன்பு. ஒருவரிடம் அன்பு செலுத்துவது. அது ஒரு பொருளைச் சார்ந்தது அல்ல. ஆனால், அது உங்களின் ஆன்மாவிலிருந்து வெளிப்படுவது. அன்பை நீங்கள் அதிகம் வெளிப்படுத் தினால், உங்கள் ஆன்மா விசாலமாக இருக்கிறது என்று அர்த்தமாகும். அன்பு என்னும் சிறகுகளை நீங்கள் எவ்வளவு தூரம் விரிக்கிறீர்களோ, அது வானத்தை போல விரிவடையும் தன்மை கொண்டது.

நமது கூட்டுக் குடும்ப கலாசாரம், அன்பை நேசிக்கவும், பகிர்ந்துகொள்ளவும் கற்றுக்கொடுத்துள்ளது. நாம் செய்யும் சேவை, நாம் எல்லாவற்றையும் பகிர்ந்து கொண்டு மகிழ்ச்சியடைய வைக்கிறது. உலகிற்கு நன்மை செய்வதுதான் நமது அமைப்பின் குறிக்கோளாகும். உலகை ஒரு குடும்பமாக நேசிக்க கற்றுக்கொடுக்கிறது. இதைத்தான் வசுதைவ குடும்பம் என்கிறோம்.

அமைதியை மேம்படுத்து வதும், அன்பை மீட்டெடுப்பதும் அழிவுகரமான மோதல்களிலிருந்து உலகத்தை அமைதிப் படுத்து வதும்தான் நமது நோக்கமாகும். கோவிட் தொற்றால் அல்லது இயற்கை பேரழிவால் அல்லது போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரோட்டேரியன்கள் அன்பையும் நம்பிக்கையையும் வழங்கவேண்டும். இதுபோன்ற சமயங்களில் மக்கள் தங்கள் உடன்பிறந்தவர்களை இழந்திருக்கலாம். பலர் தங்களது தொடர்புகளை இழந்திருக்கலாம். இளைஞர்களின் கல்வி, வளர்ச்சி தடை பட்டிருக்கலாம். இதன் விளைவாக உலகெங்கிலும் உள்ள மக்கள் மனநலன் பிரச்னைகளை எதிர்கொள்ளலாம். ஆனாலும், உதவியை நாடுவது பெரும்பாலும் பலவீனத்தின் அறிகுறியாகவே பார்க்கப்படுகிறது.

மருத்துவம் மற்றும் தியானம் இரண்டும் ஒரு வழியில் வந்தவைதான். அன்புக்கு தியானம் என்னும் மருந்தின் உதவிதேவை. அப்போதுதான் மனது சுத்தமாகும். தியானம் அதிகரிக்க அதிகரிக்க வாழ்க்கை பரவசமாகும்.

எனவே நீங்கள் முதலில் உங்களை நேசியுங்கள், அதன் பின் உங்களைச் சுற்றியுள்ளவர்களையும் நேசியுங்கள்.

மகேஷ் கோட்பாகி
RI இயக்குநர், 2021–23

# களின் செய்திகள்

## கற்றலும் கற்பித்தலும்



ஒவ்வொரு மட்டத்திலும் தொடர்ந்து கற்றல் மற்றும் மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுப்பது ரோட்டரியின் பலங்களில் ஒன்றாகும். அடுத்த ரோட்டரி ஆண்டுக்கான மாவட்ட ஆளுநர்கள் அனைவரும் ஆர்லாண்டோவில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் தீவிர பயிற்சி பெற்றுள்ளனர். வரும் மாதங்களில் தங்களது மாவட்டங்களைச் சேர்ந்த சங்கங்களில் அதை அப்படியே செயல்படுத்த திட்டமிடுவார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உதவி ஆளுநர்கள், மாவட்ட அதிகாரிகள், தலைவர்கள் மற்றும் சங்க அலுவலக நிர்வாகிகளுக்கு என தனித்தனியான பயிற்சி திட்டங்கள் உள்ளன. வருடா வருடம் இதுபோன்ற பயிற்சி களை நடத்துவதன் நோக்கம் என்ன என்று சிலர் என்னிடம் கேட்பதுண்டு. இந்த நிகழ்வுகளை நான் பயிற்சியாக கருதுவதைவிட கற்றல் வாய்ப்பாக கருதுகிறேன். பல ஆண்டுகளாக ரோட்டரி ஒரு அமைப்பாகவே செயல்பட்டு வருகிறது. அதே நேரத்தில் தனது கொள்கைகளை விட்டு விடாமல் காலத்தின் தேவைக்கு ஏற்றவாறு சில மாற்றங்களை மேற்கொண்டு செயல்பட்டு வருகிறது. தகவமைப்புத் தன்மை தான் நம் செயல்திட்டத்தின் முக்கிய கூறுகளில் ஒன்றாகும். சமீபத்திய தொற்றுக் காலத்தில் இது போதுமான ஆதாரமாக இருந்தது. உறுப்பினர்கள் சேர்க்கை, சங்கங்கள் செயல்பாடு, மானிய உதவி, தொழில்நுட்பம் என இதன் பட்டியல் நீள்கிறது. இவை அனைத்தும் நாம் தொடர்ந்து இருப்பதையும் வளர்ச்சியில் கவனம் செலுத்துவதையும் உறுதி செய்கிறது.

பல்வேறு நிலைகளில் பல்வேறு பணிகளை மேற்கொள்வதற்கு முன்வந்துள்ள அனைத்து ரோட்டேரியன்களும் இந்த முன்னேற்றங் களை நன்கு தெரிந்து கொண்டால் தங்கள் பொறுப்புகளை சிறப்பாகச் செய்ய முடியும் என்பதையே இது காட்டுகிறது. இந்த பயிற்சி திட்டங்கள் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்று யாராவது கருதினால், பிரச்னை நோக்கத்தைவிட செயல்படுத்துவதில்தான் இருக்கும்.

அடுத்த ரோட்டரி ஆண்டுக்கான தயாரிப்பாக அடுத்த சில மாதங்களில் நடத்தப்படும் இந்த பயிற்சி நிகழ்வு களுக்கு சங்கம் மற்றும் மாவட்ட அளவிலான தலைமை முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்து கிறேன். சமீபத்திய வளர்ச்சி, நடை முறைகளை பற்றி தெரிந்துகொள்ள ஒரு நல்ல வாய்ப்பை அவர்கள் நமக்கு கொடுத்திருக்கிறார்கள். முறையான பயிற்சி நாம் ஒரே குரலில் பேசுவதை உறுதி செய்யும். பல்வேறு நிலைகளில் உள்ள ரோட்டேரியன்களுக்கு கல்வி, தகவல் மற்றும் ஊக்கம் அளிக்க இந்த பயிற்சி நிகழ்வுகளை நாம் எவ்வளவு சிறப்பாக பயன்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்தே நமது எதிர்காலம் அடங்கியுள்ளது.

சிறந்த தகவல் அறிந்த, கற்றறிந்த ரோட்டேரியன்களை நாம் உருவாக்குவோம்!



A S வெங்கடேஷ்
RI இயக்குநர், 2021–23


**அறங்காவலர் குழுவினர்**

| | |
|---|---|
| A S வெங்கடேஷ் | RID 3232 |
| **RI இயக்குநர் மற்றும் RNT தலைவர்** | |
| Dr மகேஷ் கோட்பாகி | RID 3131 |
| **RI இயக்குநர்** | |
| Dr பரத் பாண்ட்யா | RID 3141 |
| **TRF அறங்காவலர்** | |
| ராஜேந்திர K சாபூ | RID 3080 |
| கல்யாண் பானர்ஜி | RID 3060 |
| சேகர் மேத்தா | RID 3291 |
| அசோக் மஹாஜன் | RID 3141 |
| PT பிரபாகர் | RID 3232 |
| Dr மனோஜ் D தேசாய் | RID 3060 |
| C பாஸ்கர் | RID 3000 |
| கமல் சங்வி | RID 3250 |
| குலாம் A வஹன்வதி | RID 3141 |
| **RI இயக்குநர் தேர்வு** | |
| அனிருதா ராய்சௌத்ரி | RID 3291 |
| TN சுப்ரமணியன் | RID 3141 |

**செயற்குழு உறுப்பினர்கள் (2022–23)**

| | |
|---|---|
| Dr துஷ்யந்த் சௌத்ரி | RID 3070 |
| **தலைவர், ஆளுநர் குழு** | |
| வெங்கடேஷ் H தேஷ்பாண்டே | RID 3170 |
| **செயலாளர், ஆளுநர் குழு** | |
| Dr N நந்தகுமார் | RID 3232 |
| **பொருளாளர், ஆளுநர் குழு** | |
| தினேஷ்குமார் சர்மா | RID 3100 |
| **ஆலோசகர், ஆளுநர் குழு** | |



**ஆசிரியர்**
ரஷீதா பகத்


**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும் விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

இதழ்

# அமைதிக்கான பன்னாட்டுப் படை



ரோட்டரியைப்பற்றிய வியப்பூட்டும் விஷயங்களில் ஒன்று, நாம் ஒரே நேரத்தில் பலவாக உள்ளோம். நாம் செயல் அடிப்படையிலான ஒரு சேவை அமைப்பு. அதே நேரம், நாம் தொழில் மற்றும் சமூக வலைப்பின்னல் குழுவாகவும் உள்ளோம், நட்பு, மகிழ்ச்சிக்கான இடமாகவும் உள்ளோம்.

யோசித்துப்பார்த்தால், நீங்களும் நானும் ஓர் அமைதி அமைப்பின் பகுதியாகவும் உள்ளோம். 2013ல் மியான்மருக்கான அமைதியான மக்களாட்சி மாற்றத்தை முன்னெடுத்துச்செல்லும் பன்னாட்டுக் கருத்தரங்கு ஒன்றில் ரோட்டரியின் பிரதிநிதியாக நான் பங்கேற்றபோது இதை உணர்ந்தேன். சமீபத்தில் சில பின்னடைவுகள் வந்திருந்தபோதும், அமைதிப் பேச்சுவார்த்தைக்கு ரோட்டரி அழைக்கப்பட்டிருந்தது என்கிற உண்மை உலகம் நம்மை மிகக் கடினமான பிரச்சனைகளாலும் தடுமாறாதவர்களாக, அமைதியைக் கட்டமைப்போராகப் பார்க்கிறது என்பதைக் காண்பிக்கிறது.

அநேகமாக, இதன் மிகப் புகழ் பெற்ற முகம், இப்போது 21வது ஆண்டில் இருக்கும் ரோட்டரி அமைதி மையங்கள் திட்டம். இன்றைக்கு, 140க்கும் மேற்பட்ட நாடுகளில் 1,600க்கும் மேற்பட்ட ரோட்டரி அமைதித் தோழர்கள் அமைதியை நோக்கிப் பணிபுரிந்துகொண்டிருக்கிறார்கள். 1 பிப்ரவரி அன்று, அடுத்த தலைமுறை அமைதித் தோழர்களுக்கான விண்ணப்பங்கள் கிடைக்கத் தொடங்கும்.

இந்த ஆண்டு, சமீபத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டாளர் பல்கலைக்கழகத்துடன் சேர்ந்து மத்திய கிழக்கு மற்றும் வட ஆப்பிரிக்கப் பகுதியில் ஒரு புதிய அமைதி மையத்துக்கான பணிகளை நாம் தொடங்குவோம். ஒட்டோ மற்றும் ஃபிரான் வால்டர் அறக்கட்டளை ரோட்டரி அறக்கட்டளைக்கு வழங்கிய தாராளமான பரிசான $15.5 மில்லியன்மூலம் இந்த மையம் சாத்தியமாகியுள்ளது. இதன்மூலம் ரோட்டரியின் அமைதி உருவாக்கும் பார்வை இன்னும் முன்னேறும்.

ரோட்டரியின் 118வது ஆண்டுவிழாவையும் அமைதி உருவாக்கல் மற்றும் முரணைத் தடுத்தல் மாதத்தையும் நாம் கொண்டாடுகிற நேரத்தில், ரோட்டரி அமைதியை முன்னிறுத்தும் பல வழிகளை எண்ணி நாம் பெருமைப்படலாம். ரோட்டரி அறக்கட்டளையும் அதற்கு உங்கள் ஆதரவும் இல்லாவிட்டால், இவற்றில் எவையும் சாத்தியமாகாது.

அறக்கட்டளையின் வழியாக நடைபெறும் இந்தப் பணியை நீங்கள் *rotary.org/donate* என்ற இணையப் பக்கத்துக்குச் சென்று, அமைதியை உருவாக்குதல் மற்றும் முரணைத் தடுத்தல் என்ற கவனப் பகுதியைத் தேர்ந்தெடுப்பதன்மூலம் நேரடியாக ஆதரிக்கலாம். நீங்கள் அமைதித் திட்டங்களை ஆதரிப்பதற்கு ரோட்டரி அறக்கட்டளையில் இயான் மற்றும் ஜூலியட் ரைஸ்லெ நன்கொடை நிறுவல் நிதிக்குப் பங்களிக்கவேண்டும் என்றும் நான் ஊக்குவிக்கிறேன்.

**இயன் ரிஸ்லி**
TRF அறங்காவலர் தலைவர்



# குடும்பத் திருவிழா

## EVA ரெமிஜன்-டோபா



*மெல்பர்ன் அருங்காட்சியகம்*

மெல்பர்னில் மே 27 முதல் 31 வரை நடைபெறும் RI மாநாட்டை உங்களுடைய அடுத்த குடும்பப் பயணமாக ஆக்கிக்கொள்ளுங்கள். இந்த மாநாட்டிற்கு நீங்கள் ஆஸ்திரேலியா வரும்போது, எல்லா வயதைச் சேர்ந்தவர்கள், எல்லா ஆர்வம் கொண்டவர்களுக்குமான செயல்பாடுகளைக் காண்பீர்கள். குறிப்பாக, அருங்காட்சியகங்கள், நீர்வாழ் உயிரின அரங்கம், தகவல்கள் நிறைந்த கப்பல் பயணம், விலங்குக் காட்சியகத்தில் தனிப்பயணம்.

சென்ற ஆண்டு தொடங்கப்பட்ட *Museum of Play and Art*ல் வண்ணம் பூசுவதற்கு உண்மையான கார், உயரமான நகரக் கட்டடங்களைப் போல் தோன்றும் விளையாட்டு மைதானம்போன்ற 1 முதல் 7 வயது கொண்டவர்கள் விரும்பும் காட்சிப்பொருள்கள் நிறைந்துள்ளன.

Sea Life Melbourne Aquarium-ல் நீங்கள் மீன், முதலை உணவுகளைப் பார்க்கலாம், சுறாக்கள், திருக்கை மீன்களை அருகில் பார்க்கலாம், பனி உடை அணிந்துகொண்டு பனி உலகில் நுழைந்து, பெங்குவின்களுடன் ஊடாடலாம்.

உயரமான கப்பல்கள் அனுபவத்துக்கு, 12 வயது கொண்ட விருந்தினர்கள்கூட One and All என்ற கப்பலில் பயணம் செய்யலாம். மாவட்டம் 9510 நடத்தும் இளைஞர் படகோட்டச் சவாலின் போது ஆஸ்திரேலியப் பதின்பருவத்தினர் கற்கும் கலை இது. நீங்கள் Melbourne Convention and Exhibition Centre-க்கு அருகில் இருக்கும் ஒரு கப்பல் துறை மேடையில் இருந்து புறப்பட்டு, யர்ரா (Yarra) ஆற்றில் Port Phillip மற்றும் பிற முக்கியமான இடங்களைப்பற்றித் தெரிந்துகொள்வீர்கள்.

மெல்பர்ன் விலங்குக் காட்சியகத்தின் பின்னணி அனுபவத்தையும் பெறலாம். பயணங்களைப்பற்றி அறியவும் பதிவு செய்யவும் இங்கு வாருங்கள்: *rotarymelbourne2023.org/tours.*

# Rotarians!

Visiting Chennai
for business?

Looking for a
compact meeting hall?



Use our air-conditioned Board Room with a seating capacity of 16 persons at the office of the Rotary News Trust.

**Tariff:**

**₹2,500 for 2 hours**
**₹5,000 for 4 hours**
**₹1,000 for every additional hour**

Phone: 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org


## ரோட்டரி உறுப்பினர் எண்ணிக்கை

As on January 1, 2023

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Rotaract Members | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 2981 | 136 | 6,425 | 7.41 | 67 | 402 | 55 | 243 |
| 2982 | 80 | 3,642 | 6.92 | 50 | 1,123 | 115 | 76 |
| 3000 | 131 | 5,376 | 10.36 | 101 | 1,763 | 324 | 215 |
| 3011 | 123 | 4,682 | 28.53 | 82 | 2,759 | 140 | 37 |
| 3012 | 149 | 3,673 | 23.31 | 73 | 1,632 | 93 | 61 |
| 3020 | 83 | 4,869 | 7.25 | 37 | 1,028 | 168 | 350 |
| 3030 | 100 | 5,361 | 14.77 | 126 | 2,154 | 369 | 382 |
| 3040 | 111 | 2,550 | 14.67 | 59 | 792 | 94 | 190 |
| 3053 | 64 | 2,705 | 16.67 | 35 | 558 | 54 | 128 |
| 3054 | 166 | 6,873 | 19.60 | 115 | 7,259 | 204 | 574 |
| 3060 | 102 | 4,880 | 14.88 | 66 | 2,410 | 81 | 152 |
| 3070 | 127 | 3,360 | 16.49 | 47 | 551 | 64 | 59 |
| 3080 | 107 | 4,280 | 12.76 | 149 | 2,845 | 213 | 118 |
| 3090 | 104 | 2,449 | 5.63 | 46 | 636 | 118 | 164 |
| 3100 | 97 | 2,041 | 9.85 | 14 | 104 | 39 | 151 |
| 3110 | 142 | 3,833 | 12.44 | 15 | 112 | 33 | 106 |
| 3120 | 90 | 3,596 | 15.57 | 35 | 383 | 36 | 55 |
| 3131 | 142 | 5,662 | 24.39 | 134 | 2,920 | 260 | 144 |
| 3132 | 90 | 3,583 | 12.50 | 36 | 499 | 126 | 168 |
| 3141 | 109 | 6,093 | 26.83 | 147 | 6,131 | 207 | 151 |
| 3142 | 103 | 3,821 | 21.30 | 90 | 3,010 | 148 | 89 |
| 3150 | 109 | 4,273 | 12.22 | 149 | 2,022 | 158 | 124 |
| 3160 | 78 | 2,616 | 9.14 | 32 | 207 | 20 | 82 |
| 3170 | 145 | 6,594 | 15.86 | 100 | 1,785 | 269 | 177 |
| 3181 | 86 | 3,561 | 9.97 | 36 | 422 | 223 | 117 |
| 3182 | 88 | 3,625 | 10.23 | 44 | 165 | 132 | 106 |
| 3190 | 168 | 6,888 | 20.03 | 215 | 5,079 | 287 | 74 |
| 3201 | 165 | 6,447 | 9.91 | 128 | 1,992 | 113 | 90 |
| 3203 | 93 | 4,949 | 7.78 | 74 | 798 | 241 | 39 |
| 3204 | 71 | 2,463 | 7.51 | 23 | 201 | 33 | 13 |
| 3211 | 153 | 4,989 | 8.58 | 8 | 108 | 31 | 133 |
| 3212 | 126 | 4,660 | 11.12 | 84 | 3,490 | 303 | 153 |
| 3231 | 95 | 3,423 | 8.30 | 37 | 411 | 99 | 417 |
| 3232 | 171 | 6,864 | 19.84 | 133 | 7,328 | 245 | 101 |
| 3240 | 106 | 3,596 | 16.88 | 69 | 1,446 | 414 | 226 |
| 3250 | 103 | 3,899 | 21.11 | 68 | 1,082 | 85 | 188 |
| 3261 | 84 | 3,188 | 19.70 | 17 | 50 | 26 | 44 |
| 3262 | 125 | 3,814 | 14.55 | 74 | 782 | 659 | 277 |
| 3291 | 151 | 3,930 | 24.99 | 137 | 2,024 | 111 | 696 |
| **India Total** | **4,473** | **169,533** | | **2,952** | **68,463** | **6,390** | **6,670** |
| 3220 | 71 | 2,123 | 16.34 | 98 | 5,083 | 147 | 76 |
| 3271 | 144 | 2,907 | 17.92 | 159 | 2,444 | 255 | 28 |
| 3272 | 162 | 2,764 | 12.92 | 70 | 943 | 22 | 47 |
| 3281 | 310 | 7,282 | 18.33 | 281 | 2,413 | 157 | 207 |
| 3282 | 179 | 3,465 | 10.36 | 202 | 1,700 | 49 | 47 |
| 3292 | 153 | 5,701 | 18.79 | 182 | 4,843 | 145 | 133 |
| **S Asia Total** | **5,492** | **193,775** | | **3,944** | **85,889** | **7,165** | **7,208** |

*Source: RI South Asia Office*

## உலக ரோட்டரி எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| ரோட்டரி சங்கங்கள் | : | 36,855 |
| ரோட்டராக்ட் சங்கங்கள் | : | 11,138 |
| இன்டராக்ட் சங்கங்கள் | : | 19,149 |
| ரோட்டரி கம்யூனிட்டி கார்ப்ஸ் (RCCs) | : | 12,698 |
| ரோட்டரியினர் | : | 1,182,063 |
| ரோட்டராக்டர்கள் | : | 173,840 |
| இன்டராக்டர்கள் | : | 440,427 |

*As on January 17, 2023*

## ஆர்வம், அர்ப்பணிப்பு, தொடர்முயற்சி

# பழங்குடியினர் கிராம மக்களின் வாழ்வில் மாற்றம் ஏற்படுத்திய வர்லி ரோட்டரி சங்கம்!

ரஷீதா பகத்

மும்பை வர்லி ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த ரோட்டேரியன்கள் மிகுந்த ஆர்வத்துடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் ஜுக்ரேவாடி கிராமத்தை மாற்றியமைக்கும் தங்கள் கனவுத் திட்டத்தை கடந்த அக்டோபர் மாதம் தொடங்கி வைத்த போது RID 3141 மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து மூத்த தலைவர்களும் அதை வரவேற்று கொண்டாடினர். மும்பையிலிருந்து 3 மணி நேர பயணத்தில் அந்த கிராமம் அமைந்துள்ளது. சுமார் 1,650 குடும்பங்கள் வசிக்கும் அந்த பழங்குடியினர் குக்கிராமத்தில் மக்களின் வாழ்க்கை தரத்தில் மாற்றம் கொண்டு வர வேண்டும், குழந்தைகள் படிப்பதற்கு பள்ளிக்கூட வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று 2016ம் ஆண்டில் மும்பை வர்லி ரோட்டரி சங்கம் முடிவு செய்தது.



ஜுக்ரேவாடி பள்ளி தலைவர் ரவி கஜாலே மாணவியருடன்.




*RC பாம்பே வர்லி தலைவர் சச்சின் சிங்வி மற்றும் DG சந்தீப் அகர்வல்லா பள்ளி குழந்தைகளுக்கு பை மற்றும் காலணி அளித்துள்ளனர்.*

மகாராஷ்டிர மாநிலம், ராய்காட் மாவட்டத்தில் உள்ள இந்த பழங்குடியினர் கிராமம் இன்று புதிய பள்ளிக் கட்டடங்கள், நவீன வசதிகளுடனான ஆய்வகம், நூலகம், பளபளக்கும் வகுப்பறைகள், ஆடவர், மகளிருக்கு என தனித்தனியான குடிநீர் மற்றும் கழிப்பறை வசதி என அனைத்து சுகாதார வசதிகளுடன் திகழ்கிறது. குழந்தைகள் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதால், அதைக் காரணம் காட்டி பள்ளிக்கு வராமல் இருப்பவர்களின் எண்ணிக்கையும் கணிசமாகக் குறைந்துள்ளது. இதற்கு பள்ளி முதல்வர் ரவி கஜாலே மற்றும் ரோட்டரி சங்க உறுப்பினர்களின் அர்ப்பணிப்பு நடவடிக்கைகளே காரணமாகும்.

கஜாலே தமது 24 ஆண்டு கால ஆசிரியர் தொழிலில் முதலில் ஆனந்தவாடி கிராமத்தில் பணி செய்துள்ளார். கடந்த ஏழு வருடங்களாக ஜுக்ரேவாடி பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். கடந்த 2016ம் ஆண்டு, அவர் மும்பைக்கு அருகில் உள்ள இந்த பழங்குடியினர் கிராமத்துக்கு பணியிடமாற்றம் செய்யப்பட்டார். அப்போது பள்ளி இருந்த நிலையைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார். பள்ளி கட்டடங்கள் இடிந்துவிழும் நிலையில், உடனடியாக பழுதுபார்க்க வேண்டிய நிலையில் இருந்தன. பள்ளிக் குழந்தைகள் முகத்தில் பொலிவு இல்லை. அவர்களின் பலர் நோயாளிகளாகவும் இருந்தனர். அதனால் பள்ளிக்கு வருகை தரும் குழந்தைகளின் எண்ணிக்கையும் குறைவாகவே இருந்தது.

அந்தப் பள்ளியில் பிரச்னைகள் ஒன்றா அல்லது இரண்டா? பல்வேறு பிரச்னைகள். அதில் மிகப்பெரிய பிரச்னை இடிந்து விழும் நிலையிலான பள்ளி கட்டடங்கள். அவை உடனடியாக பழுதுபார்க்க வேண்டிய நிலையில் இருந்தன. அந்த கிராமத்தில் உள்ளூர் அரசியல் காரணமாக பள்ளி கட்டடத்தை உடனடியாக பழுதுபார்த்து சீரமைக்க முடியவில்லை. எனவே நான் இப்பள்ளியை சீரமைக்க தனியார் மற்றும் நிறுவனங்களின் உதவியை நண்பர்கள் மூலம் கேட்டிருந்தேன் என்றார் கஜாலே. அவர் கல்வி பயின்ற பின்னணியே சுவாரஸ்யமானது. பல மாணவர்கள் உயர்கல்வியை முடிக்க அவர் உதவியிருப்பதும் தெரியவந்தது. மும்பையில் மராத்தி மொழி கற்பிக்கும் பள்ளியில் அவர் படித்து வந்தார். பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது அவரது தந்தை மரணமடைந்தார். தந்தை இறந்த நிலையில் எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. என்னிடம் பள்ளி கல்விக் கட்டணத்தை செலுத்தவோ அல்லது புத்தகங்கள் அல்லது சீருடைகள் வாங்கவோ பணம் இல்லை. ஆனால், பள்ளிக் கல்வியைத் தொடர வேண்டும் என்பதிலும், பின் கல்லூரி சென்று ஆங்கில வழிக் கல்வியைத் தொடர வேண்டும் என்பதிலும் உறுதியாக இருந்தேன். இந்த இலக்கை நோக்கிச் சென்ற நான், பள்ளிக் கட்டணத்தைச் செலுத்த வேலைக்குச் சென்று பணத்தை சேமித்தேன் என்று தெரிவித்தார்.

### சிறந்த ஆசிரியர்

இறுதியாக, கடும் உழைப்பால் அவர் எம்.ஏ. படித்துவிட்டு, பி.எட் படிப்பபையும் பூர்த்தி செய்தார். பின்னர் அவருக்கு ஆசிரியர் வேலை கிடைத்தது. ஆனந்தவாடியில் உள்ள அரசுப் பள்ளி ஆசிரியராக நியமிக்கப்பட்டார். மிகுந்த

அர்ப்பணிப்பு உணர்வுடன் செயலாற்றிய அவர், அந்த பள்ளியின் முதல்வரானார். ஏன் மகாராஷ்டிர மாநில அரசின் சிறந்த ஆசிரியருக் கான விருதையும் வென்றார். அவருக்கு விருதுடன் ரூ.1 லட்சம் ரொக்கப் பரிசும் வழங்கப்பட்டது. அதை அவர், பழங்குடியினர் கிராம குழந்தைகளின் உயர்கல்விக்கு செலவிட்டார்.

எட்டாம் வகுப்புவரை உள்ள எங்கள் பள்ளியில் படித்த நான்கு மாணவர்கள், எனது தனிப்பட்ட முயற்சியின் காரணமாக உயர்நிலைக் கல்வியை முடித்து பின்னர் கல்லூரியில் சேர்ந்து பொறியாளர் பட்டம் பெற்றுள்ளனர் என்ற செய்தியை கஜாலே, ரோட்டரி செய்திக்குழுமத்திடம் பெருமையுடன் குறிப்பிட்டார். அவர் வழிகாட்டியாக இருந்து உதவியதால் பொறியாளரான நான்கு பேரில் ஒருவரான விஜய் மஹாஸே என்பவர், ரோட்டேரியன்கள் கடந்த 7 ஆண்டுகளாக மேற்கொண்டு வரும் கிராம மேம்பாட்டுத் திட்டத்துக்கு பணியமர்த்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

குழந்தைகளின் கற்றல் திறனை மேம்படுத்துவதில் கஜாலேவின் வெற்றிக்கு முக்கிய காரணம், பழங் குடியினர் கிராமத்துக்கு பணியிடமாற்றம் செய்யப் பட்ட உடனேயே உள்ளூர் மக்கள் பேசும் மொழியை அவர் விரைவில் கற்றதுதான். குழந்தைகள் ஒரு விஷயத்தை அல்லது ஒரு கருத்தை புரிந்து கொள்வதில் சிரமப்பட்டால், நான் அதை அவர்களுக்கு அவர்கள் மொழியிலேயே விளக்குவேன். உடனே அவர்கள் எளிதில் புரிந்து கொள்வார்கள். கடந்த சில ஆண்டுகளாக அவர்களின் கல்வித் திறன் மெதுவாக, அதே நேரத்தில் நிச்சயமாக மேம்பட்டுள்ளது என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார் கஜாலே.

பள்ளிக்கு நான்கு புதிய வகுப்பறைகள் கட்டியது, ஆடவர், மகளிர்க்கு தனித் தனியாக கழிப்பறைகள் கட்டியது, கிராமத்து கிணறு களை தூர்வாரி ஆழப்படுத் தியது, தடுப்பணைகள் கட்டியது, மருத்துவ முகாம்கள் நடத்தியது, குழந்தைகளுக் கான ஊட்டச்சத்து வழங்குதல், கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வது என இதுவரை ரூ.1.5 கோடியை மும்பை வோர்லி ரோட்டரி சங்கம் செலவிட்டுள்ளதாக அதன் தலைவர் சச்சின் சிங்வி தெரிவித்தார்.

மீண்டும் 2016-க்கு திரும்புவோம். தமது பள்ளிக்கு சிறிய மற்றும் பரவலாக இருந்த தொண்டு நிறுவனங்களிடம் உதவி கேட்டு அணுகினார். அப்போது தனக்கு நிதி ஆலோசகராக இருந்த பள்ளித் தோழரிடம் தமது நோக்கத்தை குறிப்பிட்டார். அவர், கஜாலேவை மும்பை வோர்லி ரோட்டரி சங்க உறுப்பினரும் நண்பருமான பிரபாகர் நகாஷியிடம் அனுப்பிவைத்தார். அவர், கஜாலேவை சங்கத்தில்,

**கீழே:** *சங்கத் தினர் மற்றும் DG அகர்வல்லா சங்கம் நிறுவிய புதிய பள்ளி கட்டட வளாகத்தில்.*



மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தை கவனித்து வந்த கவிதா காட்போலேவிடம் அனுப்பிவைத்தார். பின்னர் கவிதா, சங்கத்தின் தலைவரானார்.

தனக்கு முன்னால் அமர்ந்திருந்த ஆசிரியர் கஜாலேவின் நேர்மை, கடமை உணர்வு, ஆர்வத்தால் ஈர்க்கப்பட்ட கவிதா, பழங்குடியினர் கிராமத்துக்கு வருகை தர விருப்பம் தெரிவித்தார். இதையடுத்து கஜாலே அவரது வருகைக்கு ஏற்பாடு செய்தார். சங்கத்தின் வேறு இரு உறுப்பினர்களுடன் கிராமத்துக்குச் சென்ற கவிதா, அந்த கிராமத்தை மேம்படுத்துவதன் அவசியத்தையும் அங்கு சேவைத் திட்டத்தை மேற்கொள்வது சரியானதுதான் என்பதையும் உணர்ந்தார். கடந்த ஏழு வருடங்களாக கிராம மேம்பாட்டில் கவனம் செலுத்தி வருகிறேன் என்றார் கவிதா.

### ஊட்டச்சத்து குறைபாடு

2016ம் ஆண்டில் ஜூக்ரேவாடி குக்கிராமத்தில் 110 குடும்பங்கள் மற்றும் அங்கு வாழும் 650 மக்களைப் பார்த்தது இன்றும் அவரது மனதில் பசுமையாக பதிந்திருக்கிறது. அங்குள்ள குழந்தைகளின்



ஆரோக்கியம் வெகுவாக பாதிக்கப் பட்டிருந்தது. ஊட்டச்சத்து குறைபாடுகளால் அவர்களால் படிப்பில் கவனம் செலுத்த முடியவில்லை. அவர்களுக்கு உடல் ரீதியாக பல்வேறு பிரச்னைகள் இருந்தன. மும்பையிலிருந்து 3 மணி நேர பயணத்தில் உள்ள இந்த குக்கிராமத்தில் பசியும் வறுமையும் இருப்பதை அவரால் நம்பமுடியவில்லை.

முதலில் KEM மருத்துவ மனையைச் சேர்ந்த ஒரு குழந்தை மருத்துவரை அந்த குக்கிராமத்துக்கு அனுப்பிவைத்து குழந்தைகளின் ஊட்டசத்து அளவை கணக்கிட மருத்துவப் பரிசோதனை முகாமுக்கு ஏற்பாடு செய்தார். அந்த கிராமம் காடுகள் அடர்ந்த, மலைப்பகுதியில் அமைந்திருந்ததால் குழந்தைகள் பெரும்பாலும் பூமிக்கு அடியில் விளையும் கிழங்கு வகைகளையே உணவாகச் சாப்பிட்டு வந்துள்ளனர். இதனால், குழந்தைகளில் பலருக்கு நாடாப்புழு உள்ளிட்ட உடல்நலக் கோளாறுகள் ஏற்பட்டு வந்துள்ளதும் உடனடியாக ஊட்டச்சத்து அளவை சீரமைக்க வேண்டியதன் அவசியம் ஏற்பட்டுள்ளதும் தெரியவந்தது.

தொடக்கத்தில் ரோட்டேரியன்கள் உடனடியாக தங்கள் சங்க உறுப் பினர்களிடம் நிதி திரட்டி, பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவாக "கிச்சடி" வழங்கினர். சில வாரங் களுக்குப் பிறகு அவர்களுக்கு முட்டை மற்றும் கடலைமிட்டாய் வழங்கப்பட்டது. குழந்தைகளுக்கு குடற்புழு சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும் அவ்வப்போது அவர்களின் உடல் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச் சத்து நிலையை அளவிட மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன.

அடுத்த கட்டமாக டாடா சமூக அறிவியல் கழகத்தில் படித்து பட்டம் பெற்ற நான்கு மாணவர்களை அந்த கிராமத்திற்கு அனுப்பிவைத்து, குறுகிய கால, நீண்டகாலத் தேவைகள் என்ன? அவர்களின் பிரச்னைகள் என்ன? கிராம மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்கு ரோட்டேரியன்கள் எந்த வகையில் உதவ முடியும் என்பது குறித்து ஆய்வு செய்து அறிக்கை தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. மாணவர்கள் ஐந்தாண்டுகளில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து அறிக்கை சமர்ப்பித்தனர்.

### சத்தான உணவுகள்

கடந்த ஏழு ஆண்டுகளாக பள்ளி குழந்தைகளுக்கு தொடர்ந்து கிச்சடி, முட்டை மற்றும் கடலை மிட்டாய் உணவாக கொடுக்கப்பட்டு வருகின்றன. குழந்தைகளின் உடல்நலத்தில் அசாத்திய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இப்போது குழந்தைகளுக்கு நோய் ஏற்படுவதே இல்லை. குழந்தைகளின் வருகையும் 100 சதவீதமாக உள்ளது. ஏனெனில் அவர்களுக்கு சத்தான உணவுகள் வழங்கப்படுகின்றன. முன்பு அவர்கள் எப்போதாவதுதான் குளிப்பார்கள், கை, கால்களை சரிவர கழுவுவதில்லை. ஆனால், ரோட்டேரியன்கள் அடிக்கடி மருத்துவ முகாம்கள் நடத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தியதால் தூய்மையை கடைபிடிக்கிறார்கள். எனவே அவர்கள் உடல் ஆரோக்கியத் தில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இப்போது இந்த பள்ளி, ராய்காட் மாவட்டத்திலேயே சிறந்த பள்ளியாகவும், மாதிரிப் பள்ளியாகவும் விளங்குகிறது.

இப்போது சங்கத்தில் குழந்தை மருத்துவரான பவுலா கோயல் உறுப்பினராக இருப்பதால் அவர் தொடர்ந்து சுகாதார முகாம்களுக்குச் செல்கிறார். பொது மருத்துவ முகாம்களும் தொடர்ந்து நடத்தப் பட்டு வருகின்றன. கிராம மக்களுக்கு பல் மருத்துவம், கண் மருத்துவச் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. தேவைப்படுவோருக்கு மும்பையில் கண்புரை அறுவைச்சிகிச்சையும் செய்யப்படுகிறது. வைட்டமின் மற்றும் இரும்புச் சத்து குறைபாடு உள்ள பெண்களுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு மருந்து, மாத்திரைகள் வழங்கப்படுகின்றன.

### பள்ளிக் கட்டடம் சீரமைப்பு

அடுத்து பாழடைந்த பள்ளிக் கட்டடங்கள் மீது ரோட்டேரியன்களின் கவனம் திரும்பியது. பலத்த மழை மற்றும் பலத்த காற்று வீசும் போதெல்லாம்

பள்ளி கட்டடத்தின் மேற்கூரை பறந்து கீழே விழுந்துவிடும். ஒவ்வொரு ஆண்டும் அதை பழுது பார்த்து மீண்டும் பொருத்த வேண்டிய நிலை இருந்தது என்கிறார் கவிதா. ஆனால், கான்கிரீட் மேற்கூரையுடன் நன்கு கட்டப்பட்ட வகுப்பறை தேவை என்பதை நாங்கள் உணர்ந்தோம். அதற்கு அதிக பணம் தேவைப்பட்டது. இதற்காக சங்க உறுப்பினர்களிடம் நிதி திரட்டப் பட்டது. மேலும் சங்கத்தின் சேவைகளை விரிவுபடுத்தியதால் கார்ப்பொரேட் நிறுவனங்களின் உதவியையும் நாடினோம்.

சங்க உறுப்பினர் ஆஷிஷ் மெகானியின் நண்பர் ஒருவர் கழிப்பறை தொகுதி கட்டுவதற்காக ரூ.12 லட்சம் நன்கொடையாக வழங்கினார்.

கவிதா மேலும் கூறுகையில், நவீன முறையில் சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் புதிய கான்கிரீட் கட்டடம், திறந்த நிலையிலான செங்கல் வேலைப்பாடுகளுடனும் கட்டப்பட்டுள்ளன. நாங்கள் எதையும் கைவிடவில்லை. ஒரு தனியார் பள்ளியில் உள்ள அனைத்து வசதிகளும் இங்கு உள்ளன. நவீன வசதிகளுடன் நூலகமும், ஆய்வகமும் அமைக்கப்பட்டுள்ளது. பள்ளியின் பழைய கட்டடமும் பழுதுபார்க்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டு பொலிவுடன் திகழ்கிறது. வகுப்பறைகளில் புதிதாக மேஜையுடனுடன் கூடிய பெஞ்சுகள் போடப்பட்டுள்ளன. இப்போது மொத்தம் 8 வகுப்பறைகள், ஒரு நூலகம், ஒரு ஆய்வகம் அமைக்கப் பட்டுள்ளது. முன்பு மாடிப்படியின் கீழ் தான் உணவு சமைக்கப்பட்டு வந்தது. இப்போது தனியாக சமையலறை மற்றும் சாப்பாட்டு அறை கட்டித்தரப்பட்டுள்ளது என்றார்.

நூலகம், ஆய்வகம் தவிர பள்ளி மாணவர்களுக்கு பயன்படும் வகையில் கணினி அறையும் தேவையான உபகரணங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. மாணவர் களுக்கு விளையாட்டு மைதானம் உருவாக்கப்பட்டு, அவர்களின் வயதுக்கு ஏற்ப விளையாடுவதற்கான உபகரணங்களும் வழங்கப் பட்டுள்ளன. தற்போது 120 மாணவர்கள் இங்கு படித்து வருகின்றனர். ஆனால், 200-க்கும் மேலான மாணவர்கள் படிக்கும் வசதி ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது என்று சிங்வி மேலும் கூறினார்.

### தண்ணீர் பிரச்னைக்குத் தீர்வு

மலைப்பாங்கான பிரதேசத்தில் மழைக்காலங்களில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடினாலும் அதை தேக்கி வைத்து பயன்படுத்த முடியாத சூழலில் வீட்டு உபயோகத்திற்கும் துணிகளைத் துவைக்கவும் தண்ணீர் இல்லாதது பெரும் பிரச்னையாக இருந்தது. பெண்கள் 8 கி.மீ. தொலைவு நடந்து சென்று தண்ணீர் எடுத்துவர வேண்டியிருந்தது. மழைக்காலத்தில் தண்ணீர் வீணாக வெளியேறுவதை தடுக்க இரண்டு இடங்களை கண்டறிந்து தண்ணீரை தேக்கிவைக்க தடுப்பணைகள் கட்டியதோடு, ஆழ்துளை கிணறு களையும் நிறுவினோம். இதன் விளைவாக இப்போது கிராம



மக்களுக்கு ஆண்டு முழுவதும் நல்ல குடிநீரும், வீட்டுத் தேவைக்கு தண்ணீரும் கிடைக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளாக அணையில் தண்ணீர் போதுமான அளவு இருந்தது. மேலும் மே- ஜூன் மாதங்களில் மழைநீரும் கிடைத்து வருகிறது என்று அவர் கூறினார்.

வளர் இளம் பெண்களுக்கு சானிட்டரி நாப்கின்களும் வழங்கப்படுகின்றன. நவீன வசதிகளுடன்கூடிய பள்ளியின் திறப்பு விழாவுக்காக, ரோட்டரி மாவட்டம் 3141ன் மூத்த உறுப்பினர்கள், மற்ற உறுப்பினர்களுடனும், ராய்காட் மாவட்ட வருவாத்துறை அதிகாரிகளுடனம் கடந்த அக்டோபர் மாதம் 29ஆம் தேதி ஜுக்ரோவாடிக்கு சென்றோம். DGE அருண்பார்கவாவும் எங்களுடன் வந்தார். புதிய பள்ளி கட்டடத்தை பார்த்தும் அவரால் நம்பமுடியவில்லை. நான் சில ஆண்டுகளுக்கு முன்பு இங்கு வந்து பார்த்ததற்கும் இப்போது பார்வையிடுவதற்கும் அதிக வித்தியாசம் உள்ளது. ரோட்டேரியன் களான நீங்கள் இந்த கிராமத்தை என்னால் நம்பமுடியாத அளவு முற்றிலுமாக மாற்றியமைத்துள்ளீர்கள் என்று கூறினார்.

என்னால் மகிழ்ச்சியை மறைக்க முடியவில்லை. ரோட்டரிக்கு மிகுந்த நன்றி. எனது பள்ளி இப்போது மாநிலத்திலேயே சிறந்த பள்ளிகளில் ஒன்றாக உள்ளது. நீங்கள் சொன்னால் நம்பமாட்டீர்கள். அன்றைய தினம் முழுவதும் நான் மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் இருந்தேன் என்று மகிழ்ச்சி பொங்க நினைவுகூர்ந்தார் கஜாலே.


புன்சிரிப்புடன் சிங்வி கூறுகையில், உண்மையில் திறப்பு விழா நிகழ்ச்சியில் கஜாலே பேசு கையில் மிகவும் உணர்ச்சிவசப் பட்டார். ஆனந்த கண்ணீர்விட்டார். நிகழ்ச்சிக்கு வந்திருந்த கல்வித்துறை துணை இயக்குநரிடம், இங்குள்ள குழந்தைகள் இப்போது நன்றாகப் படிக்கிறார்கள். தயவு செய்து என்னை இந்தப் பள்ளியிலிருந்து இடமாற்றம் செய்துவிடாதீர்கள் என்று கேட்டுக் கொண்டார் என்றார்.

இந்த திட்டத்தின் சிறப்பு அம்சம் என்னவெனில் நீண்டகால திட்டமாக, நிலைத்தன்மையுடன் இருந்தது தான். கடந்த 7 ஆண்டுகளில் பலர் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றியுள்ளனர். புதிய தலைவர் களும் சங்கத்தின் இதர அதிகாரிகளும் இத்திட்டத்தின் அதிக அக்கறை காட்டி அதை முன்னெடுத்துச் சென்றதுதான். கிராமத்தை மாற்றியமைக்கும் எங்களது திட்டம் தொடரும். ஜுக்ரேவாடி கிராம மக்களின் வாழ்க்கை நிலையில் மாற்றத்தைக் கொண்டு வரும் தொடர் திட்டத்தையும் நாங்கள் செயல்படுத்த உள்ளோம். பள்ளிகளுக்கும், தெருக்களுக்கும் சூரியசக்தி மின்வசதி ஏற்படுத்துதல், மாவட்ட கல்வி அதிகாரி மூலம் நல்ல தரமான ஆசிரியர்களை பணியமர்த்தல், நன்றாக படிக்கும் மாணவர்களின் மேல்படிப்புக்கு உதவித் தொகை வழங்குதல், தனியார் மருத்துவமனையுடன் இணைந்து ஆர்வமுள்ள பெண்களுக்கு நர்சிங் பயிற்சி அளித்தல், கிராம மக்களுக்கு வேளாண்மை, தச்சு வேலை, பிளம்பிங், மின்சாரம், கட்டுமானம் ஆகிய துறைகலில் திறன் வளர்ப்பு மற்றும் தொழிற் பயிற்சி அளிக்கவும் திட்டமிட்டுள்ளோம் என்றார் சிங்வி.

சமீபத்தில் வேளாண் நிபுணர் ஒருவரை அந்த கிராமத் திற்கு அழைத்துச் சென்றோம். கிராம மக்களிடம் கூட்டு விவசாயத்தின் நன்மைகளை அவர் விளக்கினார். தற்போது கிராம மக்கள் நெல் சாகுபடி செய்து வருகின்றனர். அதுவும் வருடத்தில் மூன்று மாதங்கள் மட்டுமே என்றார் சங்கத்தின் தலைவர்.

ஆனால், கூட்டு விவசாயம் என்ற புதிய கருத்தாக்கம் செயலுக்கு வர நாளாகும். ஒவ்வொருவரிடமும் சராசரியாக சிறிய அளவே நிலம் உள்ளது. மேலும் பலர் நிலத்தை அடமானம் வைத்துள்ளனர். சிலருக்கு நிலமே இல்லை. ஆனால், அந்த விவசாய நிபுணர் கிராம மக்களிடம், நீங்கள் வருமானத்தை பெருக்கிக் கொள்ள வேண்டுமானால் ஒன்றுக்கு மேற்பட பயிர்களை சாகுபடி செய்ய வேண்டும் என்றும் அதுவும் கூட்டு விவசாயம் செய்தால் பயனுள்ளதாக இருக்கும் என்றும் விளக்கிக் கூறியுள்ளார். மேலும் முருங்கைக்காய், பாகற்காய் போன்ற காய்கறி வகைகளை பயிர் செய்யுமாறும் கிராம மக்களிடம் அறிவுறுத்தியுள்ளார்.

ஒரு ஆதிவாசி கிராமத்தின் தேவைகளை பூர்த்தி செய்து, அங்குள்ள மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதிலும், மக்களின் எதிர்கால வாழ்க்கைக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் தங்கள் சங்கம் திட்டத்தை செயல்படுத்தியது குறித்து கவிதாவும் சிங்வியும் திருப்தி தெரிவித்தனர். சங்கத்தின் மற்றொரு முன்னாள் தலைவரான மெஹுல் ஜாடாகியா, திட்டம் தொடர்ச்சி யாக செயல்படுத்தப்பட்டதற்கு பாராட்டு தெரிவித்தார். ரோட்டரி சங்கம், மாவட்டம், பல்வேறு அரசு நிறுவனங்கள் மற்றும் கிராம மக்கள், பள்ளி நிர்வாகத்தினர், மாணவர்கள் ஒருங்கிணைந்து தொடக்கவிழாவை எந்த தொய்வும் இல்லாமல் நடத்தினர். சங்கத்தின் தலைவர் சச்சின் சங்வியின்



*பள்ளித் தலைவர் கஜாலே ஒரு மாணவிக்கு கணினி பயிற்சியளிக்கிறார்.*

கடுமையான உழைப்பு மற்றும் ரோட்டேரியன்கள், ரோட்ராக்டர்கள் உறுதுணையாக இருந்து பணி யாற்றியது பாராட்டத்தக்கது. இத்திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளார் கவிதா காட்போலே. சங்கத்தின் தலைவர்கள் மாறியபோதிலும் அனைவரையும் அரவணைத்துச் சென்று தொடர்ந்து செயலாற்றி திட்டம் வெற்றிபெற ஒரு உந்து சக்தியாக இருந்துள்ளார் என்றும் பாராட்டினார்.

தொடக்கவிழாவில் ராய்காட் ஜில்லா பரிஷத் தலைமை செயல் இயக்குநர் கிரண் பாட்டீல், புனே, SCERT துணை இயக்குநர் நேஹா பல்ஸாரே, RID 3141-ன் DG சந்தீப் அகர்வாலா, DGE அருண் பார்கவா மற்றும் PDG-க்கள் லதா சுப்பராயுடு, சுனில் மெஹ்ரா ஆகியோர் பங்கேற்றனர்.



### எங்களுக்கு பெருமை

கடந்த ஏழு வருடங்களாக ஜுக்ரேவாடி கிராம மக்களின் வாழ்வில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும், அர்த்தமுள்ள ஒரு திட்டத்தை சிறப்பாக மும்பை வோர்லி ரோட்டரி சங்கம் நிறைவேற்றியுள்ளது எங்களுக்கு பெருமை தரும் விஷயமாகும் என்று தெரிவித்தார் DG சந்தீப் அகர்வாலா. சங்கத்தின் தலைவர் சிங்வி, திட்ட இயக்குநர் கவிதா காட்பலே ஆகியோரின் தலைமையில் இத்திட்டம் சிறப்பாக நிறைவேற்றப்பட்டுள்ளது. எதையும் செயல்படுத்த வேண்டும் என்ற எண்ணமும், அர்ப்பணிப்பு உணர்வும் இருந்தால் சாதனை புரிய முடியும் என்பதற்கு இத்திட்டம் ஒரு எடுத்துக் காட்டாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

PDG மெஹ்ரா கூறுகையில், நமது மாவட்டத்தைச் சேர்ந்த ரோட்டரி சங்கங்கள் இதுபோன்ற சிறந்த திட்டங்களை செயல்படுத்தி இருப்பது மனதிற்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. மும்பை வர்லி ரோட்டரி சங்கத்தினர் கிராம மக்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தி, அங்குள்ள மக்களிடம் புதிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். உண்மையிலேயே அவர்களது பணி பாராட்டுக்குரியது என்றார்.



### நீட் தேர்வில் பழங்குடியின மாணவி வெற்றி:

இந்த கிராமத்தைச் சேர்ந்த பழங்குடி இனத்தைச் சேர்ந்த மாணவி ஒருவர் நீட் தேர்வில் வெற்றி பெற்றுள்ளதிலிருந்தே பள்ளி முதல்வர் கஜாலே எடுத்துக் கொண்ட பெரு முயற்சியையும் அதற்கு உறுதுணையாக இருந்த ரோட்டரியின் செயல்பாடுகளையும் நம்மால் புரிந்துகொள்ள முடியும். நீட் தேர்வில் வென்று பழங்குடியின கிராமத்திலிருந்து மருத்துவம் படிக்கச் செல்லும் அந்த மாணவிக்கான கல்விக் கட்டணம் மற்றும் இதர செலவுகளை தமது சங்கம் ஏற்கும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார் சச்சின் சிங்வி.■

# RC கல்கத்தாவின் ரூ.1 கோடித்திட்டம்

ரோட்டரி செய்திக் குழு



RC கல்கத்தா, RID 3291, சமீபத்தில், கல்கத்தா கங்கை ஆற்றங்கரையில் உள்ள பிரின்செப்காட் நினை விடத்தில் சேவைத் திட்டம் ஒன்றை செய்தது.

இந்தத் திட்டத்துக்கான இடத்தை வழங்கிய இந்திய ராணுவத்தின் கிழக்குக் கட்டளைப் பிரிவின் ஆதரவுடன், மாற்றுத் திறனாளிகளுக்கு 650 சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன. மாவட்ட ஆளுநர் அஜோய் குமார் லா, ஏழு PDGகள், கூட்டாளர் NGOக்கள், பல சங்கங்களைச் சேர்ந்த ரோட்டரியன்கள் மற்றும் ரோட்டராக்டர்கள் முன்னிலையில், நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த பலன் பெறுவோர் தங்கள் வாழ்க்கைகளை மாற்றும் இந்தப் பரிசைப் பெற்றார்கள். ''இந்தச் சக்கர நாற்காலித் திட்டம் எங்கள் சங்க உறுப்பினர்களுடைய தாராளமான நன்கொடைகள், ரோட்டரி இந்தியா மனிதத்தன்மை அறக்கட்டளையால் ஆதரிக்கப் பட்டது. இந்தத் திட்டத்தை ஆதரிக்கும் PRIP சேகர் மேத்தா அவர்களுக்குச் சிறப்பு நன்றி'' என்றார் RC கல்கத்தா உறுப்பினர், சமூக சேவைகள் பிரிவுத் தலைவர் அரிந்தாம் ராய்சௌத்ரி. பலன் பெற்றவர்கள், அவர்களுடைய பாது காவலர்கள் மற்றும் தன்னார்வலர்கள் அனைவருக்கும் சுமார் 1,700 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. ரூ.1 கோடி மொத்தச் செலவில் நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சியை நடத்துவதற்குக் கல்கத்தா காவல் துறை உதவியது.

“சென்ற ஆண்டு, எங்கள் சங்கம் ஐந்து தையல் பள்ளிகளைத் தொடங்கி 300 பெண்களுக்குத் தைக்கக் கற்றுத்தந்தது. பயிற்சிக்குப்பிறகு, இந்தப் பெண்களுக்குப் சிங்கர் தையல் இயந்திரங்களைப் பரிசளித்தது, இதைப் பயன்படுத்தி அவர்கள் வீட்டில் இருந்து வேலை செய்து நல்ல வருவாய் பெறலாம்.''■



# ரோட்டரியை தவிர்க்க முடியாததாக மாற்றுங்கள்

ஜெய்ஸ்ரீ



இடமிருந்து: RI இயக்குனர்கள் A S வெங்கடேஷ், விக்கி புலிஸ் மற்றும் ட்ரூ கெஸ்லர், RI துணைத்தலைவர் நிக்கி ஸ்காட் அபுதாபியில் நடந்த GETS/GNTS நிகழ்ச்சியில்.

சமூகத்தை ரோட்டரிக்கு கொண்டு வருவதில் நீங்கள் வெற்றி பெறாத போது, அதை தவிர்க்க முடியாததாக மாற்றுவதன் மூலம் நீங்கள் மக்களை ரோட்டரிக்கு இழுக்க முடியும், என்று அபுதாபியில் GETS/GNTSல் ஒரு குழு விவாதத்தை நடத்திய போது RI இயக்குனர் A S வெங்கடேஷ் கூறினார். RI துணைத் தலைவர் நிக்கி ஸ்காட், இயக்குநர்கள் ட்ரூ கெஸ்லர் மற்றும் விக்கி புலிஸ் ஆகியோர் அந்த அமர்வில் பங்கேற்றனர், இது உறுப்பினர்களையும் இளைஞர் களையும் ஈர்க்கும் வழிகளை ஆராய் வதற்கான அமர்வு. இயக்குனர் வெங்கடேஷ் லிஸ்பனில் மெட்டா வேர்ஸில் தொடங்கப்பட்ட ஒரு சங்கத்தை மேற்கோள் காட்டினார். “கிரேட் பிரிட்டனில் சமீபத்திய கண்டு பிடிப்புகளில் ஒன்று “குளோபல் ஹப்”. அது ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர்கள் அல்லாத மக்களை ஈடுபடுத்தும் முயற்சியாகும்.

ரோட்டரி குளோபல் ஹப் பாரம்பரிய சங்கங்களுடன் இணைந்து செயல்படுகிறது, ஆனால் விர்சுவல் ஸ்பேஸ்ஸில் செயல்படுகிறது என்று நிக்கி விளக்கினார். “மற்ற சங்கங்களின் ஒத்த எண்ணம் கொண்ட உறுப்பினர்கள் காரண அடிப்படையிலான திட்டங்களை மாவட்ட மற்றும் உலகளாவிய மானியங்களுடன் செயல்படுத்த மையத்தில் இணைகின்றனர். ரோட்டரி செயல்பாட்டிற்கு இது ஒரு புதிய வழி.

இந்த ஆண்டு RI தலைவர் ஜெனிபர் ஜோன்ஸ் அவர்களால் அமைக்கப்பட்ட RIன் புதிய இளைஞர் ஆலோசனைக் குழுவை வெங்கடேஷ் முன்னிலைப் படுத்தினார். இது முன்னாள் மாணவர்கள், ரோட்டரி மற்றும் ரோட்ராக்ட் உறுப்பினர்களின் பிரதி நிதித்துவத்தைக் கொண் டுள்ளது. “இளைஞர்களின் குரல் களை ஆலோசனைகளுக்காக மேசைக்கு அழைப்பது இதுவே முதல் முறையாகும், என்று புலிஸ் கூறி, சங்கம் மற்றும் மாவட்ட மட்டங்களில் அத்தகைய குழுவைக் கொண்டிருப்பதைக் கருத்தில் கொள்ள உள்வரும் தலைவர்களை வலியுறுத்தினார்.

“குடும்பங்களை உள்ளடக்கிய ரோட்டரியை உருவாக்குங்கள்” என்று அமெரிக்காவைச் சேர்ந்த இயக்குனர் கெஸ்லர் பரிந்துரைத்தார். அவருடன் அவரது மனைவி விக்கி, மகன்கள் ஜாக்சன் மற்றும் பிராண்டன் ஆகியோர் வந்திருந்தனர். எனது குடும்பத்தை ரோட்டரிக்குள் கொண்டு வந்ததன் மூலம் எனது ரோட்டரி வாழ்க்கையை சுவாரஸ்யமாக்கினேன். எனக்கு ஐந்து குழந்தைகள் உள்ளனர், எனது குடும்பத்திற்கும் ரோட்டரி வாழ்க்கைக்கும் இடையே தேர்வு செய்ய நான் விரும்பவில்லை. இரண்டில் ஒன்றை நீங்கள் தேர்வு செய்யவேண்டியிருந்தால், ரோட்டரி

ஒவ்வொரு முறையும் தோற்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். 41 வயதான அவர் RI குழுவின் இளைய இயக்குனர் ஆவார்.

ரோட்டரியில் இளம் உறுப்பினர் களை ஈர்ப்பதின் ஆதரவாளர், 20 வயதில் ரோட்டரியில் சேர்ந்த, கெஸ்லர் தனது 9 வயது மகன் ஜாக்சன் தனது பள்ளியில் Early Act எவ்வாறு அறிமுகப்படுத்தினார் என்பதைப் பற்றி பேசினார். அது என்னவென்று அவனது ஆசிரியர் அவனிடம் கேட்டபோது, ரோட்டரி மற்றும் அது மக்களுக்கு எவ்வாறு உதவுகிறது என்பதைப் பற்றி பத்து நிமிடம் அவரிடம் பேசினான். கடந்த ஆண்டு தனது பள்ளியில் 9–12 வயதுடைய குழந்தைகளுக்காக ஒரு Early Act சங்கத்தை தொடங்கினான், மேலும் 13–18 வயதுடைய மாணவர்களுக்காக இன்டராக்ட் சங்கத்தை தொடங்க உதவினான். ஆசிரியர்கள், பிற குழந்தைகள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் ஈடுபட, அது ரோட்டரிக்கு ஒரு மகத்தான பொது உருவத்தை உருவாக்கியது, என்று அவர் கூறினார்.

ரோட்டரியில் இளம் உறுப்பினர்களை ஈடுபடுத்த, ரோட்டரியில் இருந்து தனிப்பட்ட முறையில் நமக்கு கிடைக்கும் பலன்களை எடுத்துரைக்க வேண்டும்.ஒரு திட்டத்தில் பணிபுரியும் போது நமது தலைமைத்துவ திறன்களை வளர்ப்பது, மேலாண்மை திறன்களைக் கற்றுக்கொள்வது, குழுக்களை நிர்வகித்தல், பொது மேடையில் பேசுவது ஆகியவற்றை பற்றி பேச வேண்டும். இன்றைய இளைய தலைமுறையினர் பொதுவாக இரண்டு வருடங் களுக்கும் குறைவாகவே ஒரு வேலையில் இருப்பார்கள், அதனால் கார்ப்பரேட்டுகளுக்கு அவர்களின் பயிற்சி மற்றும் வளர்ச்சியில் முதலீடு செய்வது கடினம். ரோட்டரிதான் இதற்கு விடையாக இருக்க முடியும். RI துணைத்தலைவர், நிக்கி பெண்கள் மற்றும் ரோட்டராக்டர்களை ரோட்டரியில் ஒருங்கிணைக்க அழைப்பு விடுத்தார். “அவர்களின் குரல்கள் கேட்கப்பட வேண்டும் மற்றும் ஒவ்வொரு உறுப்பினரும் அதில் ஒரு அங்கமாக உணர வேண்டும்.”

### TRF - ரோட்டரியின் இதயத் துடிப்பு

“உக்ரைனில் நடக்கும் போருக்குப் பிறகு TRFன் பொது உருவம் ஒரு பெரிய மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது. சமூகங்களின் உடனடித் தேவை களைப் பூர்த்தி செய்வதில் முக்கிய பங்களிக்கிறது, என்றார் TRF அறங்காவலர் பரத் பாண்ட்யா. மாறிவரும் காலத்தின் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் அறக்கட்டளை எவ்வாறு மாறியுள்ளது என்பது குறித்து நிகழ்ச்சியில் கூறினார். “ஒரு பேரழிவு ஏற்படும் போதெல்லாம் சரியான நேரத்தில், TRF நிவாரணம், மறுகட்டமைப்பு மற்றும் மறுவாழ்வுக்கான மானியங்களை வழங்கி பிரகாசித்தது. உக்ரைனில் போர் தொடங்கிய இரண்டு வாரங்களில், அறங்காவலர்கள் பேரிடர் நிவாரண மானிய (DRG) நிதியை அமைத்தனர். “மூன்று மாதங்களுக்குள் உலகெங்கிலும் உள்ள ரோட்டேரி யர்கள் $3.3 மில்லியன் திரட்ட உதவினர், இது கடந்த நான்கு மாதங்களில் 440 மானியங்கள் மூலம் 29 நாடுகளில் ஆம்புலன்ஸ்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் பிற அத்தியாவசிய தேவைகளுக்காக கொடுக்கப்பட்டது,” என்று அவர் மேலும் கூறினார்.


உக்ரைனுக்கான DRG மற்றும் பாகிஸ்தானில் ஏற்பட்ட சமீபத்திய வெள்ளம், “பேரழிவு ஏற்படும் போது பதிலளிப்பதைத் தாண்டி, எல்லா நேரங்களிலும் எங்களைத் தயாராக வைத்திருக்க ஒரு சிறப்பு பணிக்குழு தேவை என்று அறங்காவலர்களுக்கு கற்பித்துள்ளது.

அறக்கட்டளையை வலுப் படுத்துவது பற்றி அமர்வு நடத்துனர் RIDE T N சுப்பிரமணியனின் கேள்விக்கு பதிலளித்த பாண்டியா, ரோட்டேரியர் அல்லாத பங்களிப் பாளர்களைக் கொண்டு நம் வளங்களை சேர்க்க வேண்டும் என்றார்.

TRFன் சமீபத்திய முயற்சி - ப்ரோக்ராம் அஃப் ஸ்கேல்- பற்றி பாண்டியா உள்வரும் மாவட்ட தலைவர்களுக்கு விளக்கினார். இந்த திட்டத்தின் கீழ் முதல் மானியமான மலேரியா இல்லாத ஜாம்பியா பற்றி அவர் குறிப்பிடுகையில், இது தொடங்கப்பட்ட 16 மாதங்களில், நாட்டில் இறப்பு விகிதம் 40 சதவீதம் குறைந்துள்ளது என்றார்.

ஜூன் 2022 நிலவரப்படி, அறக்கட்டளை $1.55 பில்லியனுக்கான பங்களிப்பு மற்றும் வாக்குறுதிகளை சேகரித்துள்ளது. “2025ம் ஆண்டில் 2.025 பில்லியன் டாலர் என்ற நம் எண்டோவ்மெண்ட் நிதிகளின் இலக்கில் கிட்டத்தட்ட 80 சதவீதத்தை எட்டியுள்ளோம்” என்று அவர் கூறினார்.

இந்த அமர்வில் GETS/GNTS இணை-ஒருங்கிணைப்பாளர் RI இயக்குனர் ஃபைஸ் கித்வாய் மற்றும் அறங்காவலர் ஃபிரடெரிக் லின் ஆகியோர் கலந்து கொண்டனர்.



TRF அறங்காவலர்கள் பரத் பாண்ட்யா மற்றும் ஃப்ரெட்ரிக் லின், RI இயக்குனர் ஃபைஸ் கித்வாய் மற்றும் RIDE T N சுப்ரமணியன்.

புகைப்படங்கள்: ஜெய்ஸ்ரீ

# போலியோவின் இறுதி கட்டத்திற்கு ஆதரவளிக்க இந்திய ரோட்டேரியன்களுக்கு வேண்டுகோள்

**ரஷீதா பகத்**

ரோட்டரி அறக்கட்டளை செய்த பணியின் முழுமையான வரம்பையும் நோக்கத்தையும் கணக்கிட்டு, வைசாக் இன்ஸ்டிட்யூட்டில் அறங்காவலர் தலைவர் இயன் ரைஸ்லியின் சார்பாக பங்கேற்ற TRF அறங்காவலர் ஆர்கே ஆஃப்ராங்க், இந்தியாவில் இருந்து போலியோவை ஒழிப்பதில் அவர்கள் செய்த “அற்புதமான பணிக்காக” இந்திய ரோட்டேரியர்களை வாழ்த்தினார்.

TRF கருத்தரங்கில், ரோட்டரி நிறுவன உறுப்பினராக உள்ள குளோபல் போலியோ ஒழிப்பு முன்முயற்சியின் (GPEI) சமீபத்திய RI Strategic Plan பற்றி விவரித்த அவர், “2022–2026ம் ஆண்டிற்கான புதிய திட்டமானது இரண்டு இலக்குகளைக் கொண்டுள்ளது, அது ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானில் போலியோ வைரஸ் பரவுவதைத் தடுப்பது மற்றும் தடுப்பூசியால்- பெறப்பட்ட போலியோ வைரஸ் டைப் 2 பரவும் நாடுகளுக்கு வெளியே பரவாமல் நிறுத்துவது.

இந்த மூலோபாயத்திற்கு ரோட்டேரியர்கள் ஒரு வருடத்திற்கு சுமார் 400 மில்லியன் குழந்தை களை அணுக வேண்டும், இதற்கு நூறாயிரக்கணக்கான முதல்நிலை ஊழியர்கள் வீடு வீடாகச் செல்ல வேண்டும். கூடுதலாக, குழந்தைகள் மற்றும் சுற்றுச்சூழலில் வைரஸைத் ஆராய்வதன் மூலம் நோய் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட வேண்டும். போலியோ இல்லாத உலகத்திற்கு மூன்று விஷயங்கள் தேவைப்படும் - நிதி திரட்டுதல், வாதாடுதல் மற்றும் சங்க உறுப்பினர்களின் ஈடுபாட்டின் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல். 140 கோடி மக்கள் வாழும் இந்த நாட்டில் போலியோவை ஒழிக்க நீங்கள் அற்புதமான பணியைச் செய்தீர்கள்.

*TRF அறங்காவலர் ஆர்கே ஆஃப்ராங்க் RID 3141 IPDG ராஜேந்திர அகர்வாலுக்கு விருது வழங்குகிறார். உடன் RIDE T N சுப்ரமணியன், TRF அறங்காவலர் பரத் பாண்ட்யா மற்றும் முன்னாள் அறங்காவலர் குலாம் வஹன்வதியும் உள்ளனர்.*



ரஷீதா பகத்

இப்போது, அறங்காவலர் குழு சார்பாக, கடைசி கட்டத்திற்கு ஆதரவளிக்க உங்களை ஊக்குவிக்கிறேன். புதிய நேரடி பங்களிப்பின் மூலம் இந்த ஆண்டு போலியோபிளஸ்க்கான எங்கள் நிதி திரட்டும் இலக்கு $35 மில்லியன், மேலும் $15 மில்லியன் DDF நிதி மற்றும் உலக நிதிக்காக திரட்டப்பட வேண்டும்'' என்று அவர் கூறினார்.

இது மொத்தம் $50 மில்லியன் ஆகும். இதற்கு இணையாக பில் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையிடமிருந்து 2:1 வீதம் அல்லது $100 மில்லியன் நன்கொடை வழங்கப்படும். துரதிர்ஷ்ட வசமாக, இன்று, 10 ரோட்டேரியர்களில் ஒருவர் மட்டுமே நிதிக்கு நன்கொடை அளித்துள்ளனர், இது மேம்படுத்தப்பட வேண்டும், ஒவ்வொரு உறுப்பினரும் ஆண்டுக்கு குறைந்தது $100 நன்கொடை அளிக்க வேண்டும் என ஆஃப்ராங்க் கூறினார்.



இதுவரை போலியோ இல்லாத நாடுகளில் இந்த ஆண்டு சமீபத்தில் போலியோ கண்டறியப்பட்டது,'' எல்லா இடங்களிலும் போலியோவை முடிவுக்குக் கொண்டுவரும் நம் இலக்கை நாம் அடையவில்லை என்றால், அது உலகளவில் மீண்டும் பரவலாம் என்பதை நினைவூட்டுகிறது'' என்று ஒரு எச்சரிக்கையை விடுத்தார்.

TRFன் வருடாந்திர இலக்குகளில் இந்தியா "கௌரவமான இரண்டாவது இடத்தைப்" பெற்றதற்காக வாழ்த்து தெரிவித்தார், மேலும் ஒவ்வொரு ஆண்டும் $1,000 நன்கொடை அளிப்பதன் மூலம் அதிகமான ரோட்டேரியர்களை PHF உறுப்பினர்களாக ஆக்க ஊக்குவிக்குமாறு இன்ஸ்டிட்யூட்டில் இருந்த ரோட்டரி தலைவர்களை வலியுறுத்தினார். பெரிய CSR நிதிகளைப் பெறுவதில் இந்தியாவும் "பெரிய சாதனைகளை" செய்துள்ளது, என்றார்.

"இது பணத்தைப் பற்றியது அல்ல. பணத்தால் மானியத் திட்டங்களின் மூலம் என்ன செய்ய முடியும் என்பதைப் பற்றியது" என்று ஆஃப்ராங்க் கூறினார். "ரோட்டரி உலகின் உள்ள மானியங்களில் 20 சதவிகிதம் இந்தியாவிற்கு வழங்கப்படுகிறது."

"நம் திட்டங்கள் உண்மையான தாக்கத்தை ஏற்படுத்த, சமூகத்தின் தேவைகளைக் கண்டறிந்து, பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டங்களைச் செய்ய வேண்டும்"என்றும் ரோட்டரி தலைமை முடிவு செய்திருக்கிறது. அது

*TRFக்கு இந்திய ரோட்டேரியன் களின் பங்களிப்பு களுக்கான வருமான விகிதம், இந்தியாவிற்கு வரும் TRF மானியங்களில்* **20** *சதவீதமாகும்.*

*புதிய அமைதி மையத்திற்காக ஓட்டோ ஃபிரான் வால்டர் அறக் கட்டளை யிடமிருந்து* **$15.5** *மில்லியன் நன்கொடைக் கான உறுதி மொழியை TRF பெற்றுள்ளது.*

"நாம் விரும்புவது'' அல்லது "நம் திட்டம்'' அல்ல, இது நாம் செய்யும் சமூகத்தின் திட்டமாகும் என்பதை ரோட்டேரியர்கள் நினைவில் கொள்வது நல்லது. உள்ளூர் அரசாங்கம் அல்லது ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனத்துடன் கூட்டணிகளை உருவாக்க எப்போதும் நினைவில் கொள்ளுங்கள், ஏனெனில் ரோட்டேரியர்கள் வெளியேறிய பின் அதுவே நிலைத்தன்மை மற்றும் வெற்றிக்கு உத்தரவாதம் அளிக்கும் என்று அவர் அறிவுறுத்தினார்.

பின்னர், இன்ஸ்டிட்யூட்டில் ஒரு அமர்வில் உரையாற்றுகையில், ஆஃப்ராங் 2009ல் மொராதாபாத்தில் போலியோ NIDக்காக மனைவி டெபோராவுடன் வந்ததை நினைவு கூர்ந்தார். ஜனவரி 13, 2011 அன்று, 3 வயது சிறுமி ருக்ஸார் காதுன் இந்தியாவில் கடைசியாக போலியோ நோயால் பாதிக்கப்பட்ட நோயாளி. இந்த வாரம், பாகிஸ்தானின் கராச்சியில் போலியோ சொட்டு மருந்து கொடுக்கும் வாய்ப்பு கிடைத்தது. இன்னும் ஒரு வருடத்தில் பாகிஸ்தானை போலியோ இல்லாத நாடாகக் காண்போம் என்று நான் முழு நம்பிக்கையுடன் இருக்கிறேன்.

ரோட்டரியின் அமைதித் திட்டங்களை பற்றி பேசுகையில், "உலகின் அமைதிச் சின்னமாக'' அங்கீகரிக்கப்படுவதற்கு போதுமான நம்பகத்தன்மையை TRF கொண்டுள்ளது என்றும், மத்திய கிழக்கு-வட ஆபிரிக்க பிராந்தியத்தில் புதிய ரோட்டரி அமைதி மையத்திற்கு நிதியளிப்பதற்காக ஓட்டோ ஃபிரான் வால்டர் அறக்கட்டளையிடமிருந்து $15.5 மில்லியன் டாலர் நன்கொடையாக சமீபத்தில் உறுதிமொழி பெற்றதாகவும் கூறினார்.

அதிக பழங்குடி மக்கள்தொகைக்கு பெயர் பெற்ற அவரது சொந்த நாடான குவாத்தமாலாவில், ஏராளமான மக்கள் வறுமையில் வாடினர், அங்கு சுத்தமான தண்ணீருக்கு பற்றாக்குறை, மோசமான சுகாதார வசதி மற்றும் இரண்டு குழந்தைகளில் ஒரு குழந்தை ஊட்டச்சத்து குறை பாட்டால் பாதிக்கப்பட்டிருந்தது. சுகாதாரம், நீர் ஆதாரம் மற்றும் ஆரோக்கியம், MHM மற்றும் ஊட்டச் சத்து ஆகியவற்றில் TRF திட்டங்கள் பெரும் உதவி செய்திருக்கின்றன.

TRFக்கு தாராளமாக நன்கொடை அளிக்குமாறு ரோட்டேரியர்களை வலியுறுத்திய ஆஃப்ராங்க், அவர்களின் பெருந்தன்மையின் உறுதியளிப்பால் "சூறாவளி தாக்கிய போது ரோட்டரி இருந்தது, உலகம் முழுவதும் தொற்றுநோய்க்கு எதிராக நாம் போராடியபோது ரோட்டரி இருந்தது, உக்ரைனில் போரும், மனிதாபிமான நெருக்கடியும் வெளிப்பட்ட போது நம் பேரிடர் நிவாரண நிதி நன்கொடைகள் மூலம் $15 மில்லியனுக்கும் அதிகமாக திரட்டப்பட்டது. நம் மனிதாபிமான தொடர்புகள் மற்றும் வளங்களைச் செயல்பட வைத்து, தொடர்ந்து தஞ்சம் தேடி வரும் லட்சக்கணக்கான இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவி, உணவு, தங்குமிடம் மற்றும் பிற தேவைகளை வழங்குகிறோம்.

TRF கருத்தரங்கில் உரையாற்றிய இந்தியாவின் முன்னாள் அறங்காவலர் குலாம் வஹன்வதி, ரோட்டரியின் ஆஸ்தி நிதிகள் (endowment funds) ரோட்டேரியன்கள் உலகில் ஒரு சக்தி வாய்ந்த மாற்றத்தை ஏற்படுத்துவதை உறுதி செய்கின்றனர் என்றார்.

அறங்காவலர் பரத் பாண்டியா, பல்வேறு நிதிகளின் வெவ்வேறு இலக்குகளை அடைவதற்கு மிகுந்த கவனத்துடன், பல்வேறு உத்திகள் மற்றும் மாறுபடும் இடர் அளவுருக்களுடன் நிபுணர்களால் TRF நிதிகள் எவ்வாறு முதலீடு செய்யப்படுகின்றன என்பதன் நுணுக்கங்களை விளக்கினார்.

TRF நன்கொடைகளுக்கு வரும்போது, இன்ஸ்டிட்யூட் கன்வீனரும் RI இயக்குனருமான மகேஷ் கோட்பாகி நம் நான்கு மண்டலங்கள் "வாங்குபவர்கள்" என்பதில் இருந்து "கொடுப்பவர்கள்" என எப்படி மாறியது என்பதை விளக்கினார். TRFக்கு அதிக பங்களிப்பு செய்ததற்காக பல்வேறு மாவட்டங்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.■

# ரோட்டரி ஹாஸ்பைஸுக்கு வருகை தந்தார் RIPN ஸ்டீஃபனி அர்ச்சிக்

**ரோட்டரி செய்திக்குழு**

சமீபத்தில், விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற விசாகா விஸ்டா ரோட்டரி சந்திப்பில் பங்குபெறுவதற்கு இந்தியாவுக்கு வந்திருந்த RIPN ஸ்டீஃபனி அர்ச்சிக் ஹைதராபாதில் RC பஞ்சாரா ஹில்ஸ், RID 3150 அமைத்துள்ள ஸ்பர்ஷ் ஹாஸ்பைஸுக்கு வந்தார்.



*ரோட்டரி ஸ்பர்ஷ் ஹாஸ்பைஸில் RIPN ஸ்டீஃபனி அர்ச்சிக் மற்றும் DG ராஜசேகர் ரெட்டி (வலதிலிருந்து 2வது).*

2011ல், தீவிர நோய் கொண்ட நோயாளிகளுக்கு வலியைக் குறைக்கும் பராமரிப்பை வழங்கு வதற்கு 12 படுக்கைகளுடன் அமைக்கப்பட்ட இந்த ஹாஸ்பைஸ் அக்டோபர் 2021ல் ரூ.14 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டது. (இதுபற்றி அறிய: *https://rotarynewsonline.org/a-rotary-hospice-in-hyderabad-at-rs-14-crore/*) 60,000 சதுர அடிக்கு மேல் நிறைந்துள்ள இந்தப் புதிய வளாகத்தில் நோயாளிகள், அவர்களைக் கவனித்துக் கொள்வோருக்குக் கூட்ட அரங்கம், ஆம்ஃபி தியேட்டர், நூலகம், உணவுக் கூடம், ஃபிசியோதெரபி, வழிபாட்டு அறைகள் உள்ளன. தங்குதல், மருந்துகள், உணவு உள்ளிட்ட அனைத்து வசதிகளும் இவர்களுக்கு முற்றிலும் இலவசமாகும்.

தலைவராகப் பரிந்துரைக்கப் பட்டுள்ள இவருடன் DG ராஜசேகர் ரெட்டி, DGE சங்கர் ரெட்டி மற்றும் DGN சரத் சௌத்ரி, சங்கத் தலைவர் பிரபாகர் துலிபுடி, செயலாளர் G வாசுதேவன், பொருளாளர் ஜகதீஷ் ராமதுகு ஆகியோரும் இருந்தார்கள்.■

# அநீதிக்கு எதிராக குரல் எழுப்புங்கள்: முன்னாள் தலைமை நீதிபதி

**V முத்துகுமரன்**

பொதுமக்களின் அக்கறையின்மையும் அலட்சியமும் சமூக அவலமாகும். இவற்றிலிருந்து நாம் விடுபட வேண்டும். இது துடிப்பான ஜனநாயகத்துக்கு நல்லதல்ல என்று உச்சநீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி N V ரமணா தெரிவித்தார்.

சமூகத்தில் தனிநபர் என்ற முறையில் நாம் குரல் எழுப்ப வேண்டும். அதுமட்டுமல்லாமல், சமூக அநீதியை நீதித்துறையின் கவனத்துக்கு கொண்டுவர வேண்டும் என்றும் ரோட்டரி மண்டல மாநாட்டில் பிரதிநிதிகளிடையே உரையாற்றுகையில் கூறினார்.

சட்டங்கள் மனிதனின் நடத்தையை ஒழுங்குபடுத்துகின்றன. வெற்றிடத்தில் அவை செயல்பட முடியாது. நமது அரசியலமைப்பு, சட்டங்களின் கட்டமைப்பு, வடிவம் மற்றும் பொருளடக்கத்தை நமக்கு வழங்கியுள்ளது. அவை இயற்கையானவை. மேலும் அதன் பல்வேறு ஆவணங்கள் மக்களால் உருவாக்கப்பட்டவை. அவற்றில் அவ்வப்போது திருத்தங்களும் மக்களால் கொண்டுவரப்படு கின்றன. எனவே நமது சட்டங்களை வடிவமைப்பதில் அவர்களுக்கும் பங்கு உண்டு.

நமது சட்டங்கள் விவாதத்திற்கு இடமளிப்பதுடன் சர்ச்சைகளுக்கு நீதித்துறை மூலம் தீர்வுகாண்பதற்கான வழிமுறைகளையும் தந்துள்ளன. நமது அரசியலமைப்பு நல்ல கட்டமைப்புடனும், வழிகாட்டு முறைகளுடனும், அவ்வப்போது மாற்றங்கள் செய்வதற்கான நெகிழ்வுத்தன்மையுடன் உருவாக்கப் பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

நமது அரசியலமைப்பு ஜனநாயகத்தை நிர்வாகம், சட்ட மன்றம், நீதித்துறை என மூன்று பிரிவாக வகுத்துள்ளது. இவை மூன்றும் அரசியல் சாசனத்தில் குறிப்பிட்டபடி வரம்பு மீறாமல் செயல்பட்டு வருகின்றன என்று அவர் தெரிவித்தார்.

எனினும் கடந்த காலங்களில் மாணவர்கள் இயக்கங்கள் அரசியல் மாற்றங்களைக் கொண்டு வருவதில் முக்கியப் பங்காற்றினார்கள். ஆனால், இன்றைய இளைஞர் அப்படியில்லை. அவர்கள் எதிலும் ஈடுபாடு காட்டுவதில்லை. அவர்களிடம் அக்கறையின்மை அதிகரித்து வருகிறது. தனிநபர்கள் பலரும் தங்களது வாக்குரிமையை பயன்படுத்துவதில்லை. அரசியலில் உள்ள குறைகளைகளை களைவதற்கும், சமூகப் பிரச்னை களுக்கு தீர்வுகாண்பதற்கும் நீதித் துறை நடவடிக்கை விரும்பத்தக்கது. ஆனால், இதற்கு மக்கள் சக்தி தேவை என்று மேலும் கூறினார்.

புகைப்படம்: ரஷீதா பகத்

*RIDE அனிருதா ராய்சௌத்ரி முன்னாள் தலைமை நீதிபதி N V ரமணா அவர்களுக்கு மரியாதை செய்கிறார். உடன் RI இயக்குநர் மகேஷ் கோட்பாகி, மாநாட்டு தலைவர் கிஷோர்குமார் செருக்குமாலி மற்றும் RC ஜுப்லி ஹில்ஸ் உறுப்பினர் வசந்த் குமார் ஆகியோரும் உள்ளனர்.*



# தங்கள் சேவைத் திட்டங்கள் மூலம் இந்தியாவை பெருமைப்படுத்தியுள்ள DGக்கள்

ரஷீதா பகத்

வைசாக்கில் நடந்த மாநாட்டில் ஒரு நாள் முன்னதாக நடைபெற்ற மாவட்ட ஆளுநர்களுக்கான அரையாண்டு மதிப்பாய்வில், RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ், 4, 5, 6 மற்றும் 7 மண்டலங்களில் "தங்கள் சமூகங்களில் செய்யும் அற்புதமான சேவைத் திட்டங்களுக்காக" DG-க்களுக்கு நன்றி தெரிவித்தார்.

தான் பெரிதும் போற்றும் நாடான இந்தியாவிற்கு எண்ணற்ற முறை சென்றது பற்றி கூறி, கடந்த பத்தாண்டுகளில் இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய மற்றும் குறிப்பிடத்தக்க மாற்றம் தான் இந்தியாவின் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சம் என அவர் குறிப்பிட்டார். நீங்கள் இவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறீர்கள். உங்கள் அழகான நாட்டிற்கு நான் எத்தனை முறை வந்திருக்கிறேன் என்பது எனக்கு நினைவில் இல்லை. நான் அந்த எண்ணிக்கையை மறந்து விட்டேன். நான் இந்த நாட்டையும் இங்குள்ள மக்களையும் நேசிப்பதால் மீண்டும் மீண்டும் வருகிறேன். நான் இங்கு பயணித்துள்ள ஒரு தசாப்தத்தில் இந்த தேசம் பெறுவதில் இருந்து கொடுக்கும் தேசமாக மாறியுள்ளது. நீங்கள் நம் உலகத்திற்கு நிறைய வழங்குகிறீர்கள், நம் நிறுவனத்தில் தலைவர்களாக இருப்பதற்கும், நாம் ஒன்றாகச் செய்யும் சேவை எல்லைகளை தாண்டி தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதைப் புரிந்துகொண்டதற்கும்

*மாவட்ட ஆளுநர்களுடன் RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ்.*





RI இயக்குநர்
A S வெங்கடேஷ்.



நான் உங்களுக்கு மனமார்ந்த நன்றி கூறுகிறேன். நீங்கள் செய்யும் திட்டங்களும், சேவைகளும் ரோட்டரிக்கு பெருமை சேர்த்துள்ளது.

DG-களை தனது ''குழந்தைகள்'' என்று குறிப்பிட்ட ஜோன்ஸ், உலகம் முழுவதும் தான் மேற்கொண்ட இமேஜின் இம்பாக்ட் சுற்றுப்பயணத்தின் முக்கியத் துவத்தை அவர்களுக்கு விளக்கினார் மற்றும் சில அற்புதமான சேவை திட்டங்களைப் பார்த்தாக கூறினார். ரோட்டரியின் புதிய மந்திரமான DEI-பன்முகத்தன்மை, சமத்துவம், உள்ளடக்கம் ஆகியவற்றின் முக்கியத்து வத்தையும் அவர் அடிக்கோடிட்டுக் காட்டினார். அதன் பிறகு, கவர்னர்கள் தங்கள் ஆண்டில் இதுவரை செய்த சில சிறந்த திட்டங்களைத் தனக்கு விவரிக்கும்படி கேட்டுக் கொண்டார். மியாவாக்கி காடுகள் மற்றும் பல்லுயிர் பூங்காக்கள், நீர் மற்றும் சுகாதாரம் போன்ற சுற்றுச்சூழல் தொடர்பான சேவைத் திட்டங்கள், மற்றும் பெண்களின் கல்வி, திறன் மற்றும் வருவாயை அதிகரிப்பதன் மூலம் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல் ஆகியவை முன்னிறுத்தப்பட்டு, RI தலைவரின் பாராட்டை பெற்றது.

அவர்களுக்கு நன்றி தெரிவித்த ஜோன்ஸ், ரோட்டரியின் பொது நற்பெயரை மேம்படுத்தும் அதே வேளையில், அவர்கள் செயல்படுத்திய திட்டங்கள் உள்ளூர் சமூகங்களில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன என்றார்.

ஆய்வுக் கூட்டத்தை நடத்திய RI இயக்குநர் A S வெங்கடேஷ், கூட்டங்களின் நெகிழ்வுத்தன்மை, சங்கங்கள் கூடி தங்கள் அலுவல்களை நடத்தும் விதம் போன்றவற்றில் RI அறிமுகப்படுத்திய புதுமைகள் மற்றும் புதிய யோசனைகள் குறித்து ஆளுநர்களுக்குத் தெளிவுபடுத்தினார். உறுப்பினர் சேர்க்கை உந்துதல் தொடர்ந்து இருக்கும், மேலும் புதிய உறுப்பினர்கள் வரவேற்கப் படுவதையும், ரோட்டரியின் சிறப்புப் பகுதிகள் அனைத்திலும் சேவை செய்வதற்கான ஆர்வம், தன்னம்பிக்கை உணர்வை வளர்த்துக் கொள்வதும் சங்கத்தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் பொறுப்பில் இருக்கிறது. ரோட்டரியின் உண்மையான அர்த்தத்தையும் உணர்வையும் புதிய உறுப்பினர்கள் புரிந்துகொள்ளும் வகையில், தற்போதுள்ள சங்க உறுப்பினர்கள், அத்தகைய நேசமான மற்றும் வரவேற்கத்தக்க சூழ்நிலையை உருவாக்க வேண்டும். ''நீங்கள் இதை உறுதி செய்தால், உறுப்பினர்கள் நம் சங்கங்களை விட்டு வெளியேறும் பிரச்சனையை நாம் எதிர்கொள்ள மாட்டோம் என்று நான் உறுதி யளிக்கிறேன்,'' என்று வெங்கடேஷ் மேலும் கூறினார்.

இன்ஸ்டிட்யூட் கன்வீனரும் RI இயக்குநருமான மகேஷ் கோட்பாகி ஆளுநர்களை வரவேற்று, அவர்களின் பணியைப் பாராட்டினார், மேலும் இந்த ஆண்டு முழுவதும் தங்கள் இலக்குகளில் கவனம் செலுத்தும் படி அவர்களை வலியுறுத்தினார். PDG S லக்கராஜு, DG-க்களுக்கு அவர்களின் மாவட்டங்களை நிர்வகிப்பதில் உள்ள சிக்கல்கள் மற்றும் ஆபத்துக்களில் இருந்து விடுபடுவது குறித்து ஆலோசனை வழங்கினார்.

RI தலைவரால் எப்போதும் சிறப்பாகச் செய்யப்படும் செயலுடன் அமர்வு முடிவடைந்தது. அவர் அறையில் உருவாக்கப் போகும் ''குழப்பத்திற்கு'' இயக்குநர் வெங்கடேஷிடம் ''மன்னிப்பு'' கேட்டு, DG-க்களை ஒன்று சேர்த்து குழு புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை எடுத்துக்கொண்டார். இது பிணைப்பின் உச்சம்!

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

# அறக்கட்டளை, உறுப்பினர் - ரோட்டரியின் வலிமைக்கான தூண்கள்

V முத்துகுமரன்

ரோட்டரி அறக்கட்டளை அதன் வெளிப்படையான நிதியுதவி மற்றும் நிர்வாகம் மூலம் உலகளாவிய சேவை திட்டங்களை செயல்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆனால் ரோட்டரி சங்கங்கள் உலகளாவிய மானியங்களுக்கு விண்ணப்பிப்பதை இன்னும் சிக்கலான செயல்முறை யாகக் கருதுகின்றன, ஏனெனில் அந்த மானியத்தை பெறும் முன் பல படிவங்களை நிரப்ப வேண்டும் மற்றும் எவன்ஸ்டனில் உள்ள RI தலைமை அலுவலகத்திலிருந்து கேட்கப்படும் பல கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும். TRF வழங்குதல் பற்றிய குழு விவாதத்திற்கு தலைமை தாங்கிய அறங்காவலர் பரத் பாண்ட்யா, வங்கி கடன்களுக்கான வட்டியுடன் திருப்பிச் செலுத்துவதைப் போலன்றி, சில நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் உண்மையான திட்டங்களுக்கு உலகளாவிய மானியங்கள் வழங்கப்படுகின்றன, மேலும் அவற்றுக்கு பிணையம் ஏதும் கேட்கபடுவதில்லை. அதன் ஒரே தேவை, நாம் சரியான வழிமுறை களை கடைப்பிடித்து நிறைவேற்ற வேண்டும் என்பதே என்றார்.

**TRF தொடர்பான சிக்கல்களில் பேனலிஸ்ட் சிலரின் கருத்துக்கள்:**

**அறங்காவலர் ஆர்கே ஆஃப்ராங்க், குவாத்தமாலா:** நம் அறக்கட்டளையானது 'பரோபகாரத்தின் எரிக்கொழும்பாக' உள்ளது மற்றும் இந்த உலகத்தை சிறந்த இடமாக மாற்றுவதற்கான முதலீடாகும். சாரிட்டி நேவிகேட்டர் 10 ஆண்டுகளாக தொடர்ந்து நான்கு நட்சத்திர மதிப்பீட்டை நமக்கு வழங்கியுள்ளது. உக்ரைன் போரில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு மற்றும் தங்குமிடம் வழங்குவதற்காக, அவசரகால பேரிடர் நிவாரண மானியங்களின் கீழ் 15 மில்லியனுக்கும் அதிகமான நிதி வழங்கப்பட்டுள்ளது. 2021–22ல் TRF, $28.7 மில்லியன் மதிப்பிலான 478 மாவட்ட மானியங்களை அங்கீகரித்தது, மேலும் கடந்த ஆண்டு $26.48 மில்லியன் கொடுத்து TRFல் இந்தியா இரண்டாவது இடத்தைப் பிடித்தது. அதே ஆண்டில் அமெரிக்க தொண்டு சந்தை $728 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒருவேளை, எதிர்காலத்தில் நமது TRF திட்டங்களுக்கு நிதியளிக்க வெளிப்புற நன்கொடையாளர் களையும் நாம் கருதலாம். மேலும், பில் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை போன்ற பெரிய கூட்டாளர்களுடன் நமது தொடர்பை வலுப்படுத்த வேண்டும்.

**RID டிரூ கெஸ்லர், US:** RI வாரியத்திற்கும் அறங்காவலர் குழுவிற்கும் இடையே நல்ல புரிதல் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இரண்டு கூட்டுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு இரண்டு வாரியங்களும் குறிப்புகளை பரிமாறிக் கொள்கின்றன. நிர்வாகம் என்பது ரோட்டரியை மற்ற தொண்டு நிறுவனங்களிலிருந்து தனித்து வப்படுத்தும் முக்கிய அங்கமாகும், ஏனெனில் ஒவ்வொரு டாலரும் கணக்கிடப்படுகிறது. நமது நிதியை எப்படிச் செலவிடுகிறோம் என்பதில் நாம் பெருமை கொள்ளலாம்.

**RIDE T N சுப்ரமணியன்:** ரோட்டரி சங்கங்கள் உலகளாவிய மானியப் படிவங்களை நிரப்புவதற்கு பிராந்திய மானிய அலுவலர்கள் மற்றும் தொழில்நுட்ப பணியாளர்களின்



*PRID கமல் சங்வி, RIPN ஸ்டெஃபனி அர்ச்சிக், RI இயக்குனர்கள் A S வெங்கடேஷ் மற்றும் ட்ரூ கெஸ்லர் மற்றும் RIDE அனிருதா ராய்சௌத்ரி ஆகியோர் உறுப்பினர் பற்றிய நிகழ்ச்சியில்.*

ஜெய்ஸ்ரீ



V முத்துகுமரன்

*இடமிருந்து:* TRF *அறங்காவலர் பரத் பாண்ட்யா, ஆர்கே ஆஃபராங்க், இயக்குனர் ட்ரூ கெஸ்லர்,* RIDE T N *சுப்ரமணியன் மற்றும்* RI *இயக்குனர் மகேஷ் கோட்பாகி* TRF *பற்றிய நிகழ்ச்சியில்.*

உதவியை நாட வேண்டும். ஒவ்வொரு சங்கத்தலைவரும் உலகமானிய விண்ணப்பத்தை தாக்கல் செய்யும் போது நிதி திட்டமிடல் மற்றும் அவரது முழு மனதை ஈடுபடுத்த வேண்டும். Direct gifts அதிகரிப்பு வருடாந்திர திட்ட நிதிக்கான பங்களிப்புகளை மோசமாக பாதித்துள்ளது, இந்த சிக்கலுக்கு நாம் தீர்வு காண வேண்டும்.

பேச்சின் நிறைவாக, நீண்ட கால உறுதியான வருமானத்திற்காக, அமெரிக்க கருவூலப் பத்திரங்களில் மட்டும் முதலீடு செய்யாமல், உலகெங்கிலும் உள்ள சந்தைகளில், குறிப்பாக இந்தியாவில், TRF முதலீடு செய்ய வேண்டும் என்று பாண்டியா கூறினார். "TRF அதன் உலகளாவிய திட்டங்களைத் தக்கவைக்க வரும் ஆண்டுகளில் நாங்கள் தொடர்ந்து வழங்குவோம்," என்று அவர் கூறினார்.

**உறுப்பினர், ஒரு நிறுவன முன்னுரிமை**

ரோட்டரியர்கள் மட்டுமே ரோட்டரியின் நிலையான சொத்துக்கள், எனவே நாம் உறுப் பினர்களைத் தக்கவைக்க நம் பின் கதவை மூட வேண்டும்," என்று PRID கமல் சங்வி ஒரு குழு விவாதத்தை நடத்தும் போது கூறினார். "புதிய உறுப்பினர்களை ஈர்க்க நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு நல்ல கதை சொல்பவராக இருக்க வேண்டும்." என்றார்.

**மற்ற குழு உறுப்பினர்களின் கருத்துக்கள்:**

**RIPN ஸ்டெபானி உர்ச்சிக்:** தொற்று நோய்களின் போது, ரோட்டரி சங்கங்கள் சமூகங்களைச் சென்றடைந்தன, அதனால் நம் 'மனநல வருமானம்' உயர்ந்தது. உலகத்தை சிறந்த இடமாக மாற்றுவது நமது DNAவில் உள்ளது. ஒரு புதிய வடிவம் அல்லது காரணத்தை அடிப்படையாகக் கொண்ட சங்கங்கள் உறுப்பினர்களுக்கு நெகிழ்வுத்தன்மையை வழங்குவதால் ஊக்குவிக்கப்பட வேண்டும். வேகமாக வளர்ந்து வரும் பிரிவாக, காரண அடிப்படையிலான சங்கங்கள் உறுப்பினர்களுக்கு புதிய அனுபவத்தையும் பிணைப்பையும் வழங்குகின்றன.

**RID A S வெங்கடேஷ்:** ரோட்டரி என்பது உறுப்பினர் அடிப்படையிலான சேவை செய்யும் அமைப்பு. புதிய உறுப்பினர்களை இணைத்துக் கொள்வது மண்டலங் களின் பொறுப்பாகும். நாம் முடிந்த வரை ரோட்டராக்டர்களை ஈடுபடுத்த வேண்டும். அவர்களைக் கைப்பிடித்து நடத்த வேண்டிய அவசியம் இல்லை, ஆனால் அவர்கள் தங்களைத் தாங்களே வரையறுத்துக் கொள்ள அனுமதியுங்கள், அவர்கள் கவனம், உணர்ச்சி மற்றும் ஆற்றல் மிக்கவர்களாக இருப்பதால் ரோட்டரியில் பல அற்புதங்களைச் செய்ய முடியும்.

**RID ட்ரூ கெஸ்லர்:** பல விஷயங்களைச் சாதிக்க நமக்கு அதிக கைகள் தேவை, எனவே உறுப்பினர் சேர்க்கை நம் முன்னுரிமை. பாலின சமத்துவத்தைப் பன்முகப்படுத்துவதற்கும் வழிகளை உருவாக்குவதற்கும் ரோட்டராக்டர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளலாம்.

**RIDE அனிருதா ராய் சௌத்ரி:** இன்னும் இருக்கும் சில இடைவெளிகளில் கவனம் செலுத்த வேண்டும். நாம் நமது புதிய உறுப்பினர்களை ஈடுபடுத்தி அவர்களின் விருப்பங்களை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். இரண்டாவதாக, ரோட்டராக்ட் பற்றிய நவம்பர் தரவு, உறுப்பினர் எண்ணிக்கையில் ஒரு செங்குத்தான வீழ்ச்சியைக் காட்டுகிறது, இது "அமுலுக்கு வந்துள்ள கட்டாய RI நிலுவைத் தொகைகள்" காரணமாக இருக்கலாம். இப்போது அதிக தேவை உள்ள புதிய ஃபார்மேட் சங்கங்களுக்கு இடம் கொடுக்க வேண்டும். அவரது இறுதிக் கருத்துகளில், ரோட்டரியில் உறுப்பினர்களின் அடிப்படையில் தான் எல்லாமே நடக்கிறது என்று கூறினார். ரோட்டேரியர்கள் ஒருவர் இன்னொருவரை கொண்டுவாருங்கள் என்ற உறுதிமொழி மட்டுமல்லாமல், ஒருவர் இன்னொருவரை தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் சேர்த்து நாம் செயல்படவேண்டும் என்றார்.■

# LGBTQ பற்றிய உரையாடல்

ரஷீதா பகத்

RI இயக்குனர் விக்கி புலிஸ் நிர்வகித்த DEI அமர்வில் பங்கேற்ற மூன்று குழு உறுப்பினர்களின் ஒருமித்த கருத்து என்னவென்றால், இந்தியா மற்றும் உலகெங்கிலும் உள்ள ரோட்டரி சங்கங்கள் LGBTQ தொடர்பான பிரச்சினைகளை வெளிக்கொண்டுவர தங்கள் முயற்சிகளை துரிதபடுத்த வேண்டும்.

DEI ஒவ்வொரு மனிதரும் தனித்துவமானவர் மற்றும் நமது வேறுபாடுகளை அங்கீகரிப்பதில் வலிமை உள்ளது என்பதிலும் கவனம் செலுத்துகிறது. DEI இப்போது பாலினம், வயது, பாலியல் விருப்பம், செவிப்புலன் ஆதரவு அல்லது சக்கர நாற்காலி அணுகல் தேவைப்படும் நபர்களுக்கான அணுகல் போன்ற விஷயங்களையும் உள்ளடக்கியுள்ளது என்றார்.

RIன் முன்னுரிமைகளில் ஒன்று, தற்போதைய RI தலைவர் ஜெஃனிபர் ஜோன்ஸின் ஆளும் மந்திரம், "நம் உறுப்பினர்களில் பன்முகத் தன்மையை வளர்ப்பதன் மூலம் நம் வரம்பை விரிவுபடுத்துவது... இதனால் நாம் வரவேற்கத்தக்க மற்றும் உள்ளடக்கிய அமைப்பாகக் காணப்படுகிறோம் என்று புலிஸ் கூறினார்.

கலந்துரையாடலைத் தொடங்கிய, குஜராத்தின் ராஜ்பிப்லாவின் பட்டத்து இளவரசர் மன்வேந்திர சிங் கோஹில், "அரச குடும்பத்தின் முதல் வெளிப்படையான ஓரினச் சேர்க்கையாளர்'' நான் தான் என்று கூறினார். தனது இளமை பருவத்தில் எதை எதிர்த்து போராடிக் கொண்டிருக்கின்றோம் என்பது புரியாமல், நீண்ட கால குழப்பத்திற்குப் பிறகு, இறுதியாக இருளில் இருந்து வெளியே வந்தவர். எனக்கு 30 வயதாக இருந்தபோது என் பாலுணர்வை நான் புரிந்து கொண்டேன், ஒரு கடும் மன அழுத்தத்திற்கு பிறகு என் பெற்றோரிடம் கூறினேன். என் பெற்றோர் என்னை மருத்துவம் மற்றும் மத போதகம் மூலம் நேராக மாற்ற முயற்சித்தார்கள்! நான் 2006ம் ஆண்டில் அரச குடும்பத்திலிருந்து உலகின் முதல் வெளிப்படையான ஓரின சேர்க்கையாளர் ஆனதன் மூலம் சரித்திரம் படைத்தேன், அதனால் அரண்மனையிலிருந்து வெளியேற்றப்பட்டேன், என் குடும்பத்தினரால் மறுக்கப்பட்டேன், மேலும் மரண அச்சுறுத்தல்களையும் பெற்றேன்.

அவர் தனது அதிர்ச்சிகரமான பயணத்தை முடித்து, ஆனால் இது மகிழ்ச்சியான முடிவைக் கொண்டுள்ளது. நான் எனது குடும்பத்தினரால் மீண்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டேன், ஒரு அமெரிக்க நபரை திருமணம் செய்து

*RI இயக்குனர் விக்கி புலிஸ், RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ், குஜராத்தின் ராஜ்பிப்லாவின் பட்டத்திளவரசர் மன்வேந்திர சிங் கோஹில், திரைப்பட இயக்குனர் அர்ஃபி லம்பா, RAC ரூயா தலைவர் மதுரா முன்டாடா மற்றும் RI இயக்குனர் மகேஷ் கோட்பாகி.*


ரஷீதா பகத்

கொண்டேன், நாங்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறோம். என்றார்.

ஓப்ரா வின்ஃப்ரே மூன்று முறை பேட்டி கண்ட ஒரே இந்தியர் என்ற பெருமையை சிங் பெற்றுள்ளார். LGBTQ சமூகத்திற்காக அவரது அறக்கட்டளை போராடினாலும், லக்ஷ்யா அறக்கட்டளையின் தலைவர் மற்றும் இணை நிறுவனரான அவர், தன்னை ஒரு LGBTQ ஆதரவாளர் என்று மட்டுமல்லாமல் ஒரு மனித உரிமை சாம்பியனாகவே அழைக்கப்பட விரும்புகிறார். எச்.ஐ.வி/எய்ட்ஸ் ஹெல்த் கேர் ஃபவுண்டேஷன், இந்தியா கேர்ஸின் தூதராகவும் உள்ளார், இது எச்.ஐ.வி-பரிசோதனை மற்றும் சிகிச்சைக்கான உலகின் மிகப் பழமையான, மிகப்பெரிய மையமாகும்.

“LGBTQIA சமூகத்தின் சமூக மற்றும் நிதி மேம்பாட்டிற்காக'' தனது அரச நிறுவனத்தில் (அவரது பெற்றோர் சமரசம் செய்து அவரை ஏற்றுக்கொண்டுள்ளனர்) சமூகப் பராமரிப்பு மையத்தை அமைக்க தற்போது பணியாற்றி வருவதாகக் கூறினார்.

திரைப்பட இயக்குனர் அர்ஃபி லம்பாவின் ‘லவ்’ திரைப்படம் இப்போது நெட்ஃபிலிக்ஸால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது, மேலும் 60க்கும் மேற்பட்ட சர்வதேச திரைப்பட விழாக்களில் பங்கேற்றுள்ளது. அவர் கூறுகையில்; படாய் தோ போன்ற ஓரினச்சேர்க்கை உறவுகளைக் கொண்ட படங்களை பாலிவுட் இப்போது தயாரிக்கத் தொடங்கியுள்ளது. ஆனால் பல ஆண்டுகளுக்கு முன்பு, அவரும் ஜெர்மனியில் உள்ள அவரது வணிக கூட்டாளியும் இந்த கதையை கண்டுபிடித்து, அதை படமாக எடுத்தபோது, இது வெளியாகுமா என்று நாங்கள் கவலைப்பட்டோம், எனவே நாங்கள் அதை மிகக் குறைந்த பட்ஜெட்டில் எடுத்தோம், ஆனால் இப்போது நெட்ஃபிலிக்ஸ் எங்கள் படத்தை வாங்கியுள்ளது. மேலும் எங்களுக்கு மிகவும் மரியாதை அளித்துள்ளது.

LGBTQ சமூகத்திற்காக அவர் செய்து வரும் “அற்புதமான பணிக்காக'' சிங்கைப் பாராட்டினார். இந்தக் குழுவை இன்னும் ஏற்றுக்கொள்ள ரோட்டரி என்ன செய்ய முடியும் என்று புலிஸ் கேட்ட போது, “ரோட்டேரியர்கள் டெல்லி மற்றும் மும்பையிலிருந்து வெளியேறி இந்தியா வசிக்கும் வீடுகள் மற்றும் பகுதிகளுக்குச் செல்ல வேண்டும்'' என்று லம்பா கூறினார். அறையில் இருந்த பிரதிநிதிகளிடம் முறையிட்ட அவர், உங்களைச் சுற்றி வெவ்வேறு பாலுணர்வு கொண்ட குழந்தைகளைக் கண்டால், அவர்களுக்கு சிறந்த புரிதலையும் ஆதரவையும் காட்டுங்கள். உண்மை என்னவென்றால், இந்தியாவின் சிறிய நகரங்களில் உள்ள பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் ஓரின சேர்க்கையாளர்கள் என்பதைக் கண்டறிந்தால், அவர்களை புறக்கணித்து விடுகிறார்கள். 17, 18, 19 வயதுடைய இந்தக் குழந்தைகளை மன்வேந்திராவின் தன்னார்வ தொண்டு நிறுவனம், அவர்கள் தங்கள் சொந்த காலில் நிற்கும் வரை ஆறு மாதங்கள் அல்லது ஒரு வருடத்திற்கு தங்குமிடம் கொடுக்கிறது. அவர் அற்புதமான பணிகளைச் செய்கிறார், ரோட்டரி அவரது தன்னார்வ தொண்டு நிறுவனத்தை ஆதரிக்க வேண்டும், என்றார் லம்பா.

மும்பையின் ரோட்டராக்ட் கிளப் ஆஃப் ரூயாவைச் சேர்ந்த சர்வதேச சேவைத் தலைவரும், LGBTQ இயக்குநருமான மதுரா முண்டாடா, அவரது பெற்றோர் இருவரும் ரோட்டேரியர்கள் என்றும், ரோட்டரி என்பது நான் வளரும் காலத்தில் ஒரு பகுதியாக இருந்தது. ரோட்டரியின் செயல் மற்றும் அதன் தாக்கத்தை நான் பார்த்திருக்கிறேன்.

மதுரா கல்லூரியில் சேர்ந்த போது, அங்கே ஒரு ரோட்ராக்ட் சங்கம் இருந்தது “அதில் நான் சேர வேண்டும் என்று எனக்கு உடனடியாகத் தோன்றியது''. இது அந்த சங்கத்தின் 10வது ஆண்டு என்றும், அவர்கள் LGBTQ chapter ஒன்றை தொடங்க விரும்புவதாகவும், நான் அதை வழிநடத்தலாம் என்று அவரது சங்கத் தலைவர்கள் கூறியபோது, நான் ஒப்புக்கொண்டேன். ஆனால் நீங்கள் LGBTQ சமூகத்தைச் சேர்ந்தவர் என்று மக்கள் அனுமானிக்கலாம் என்று அவர்கள் சொல்ல, நாம் எல்லோரும் LGBTQ சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்று நான் சொன்னேன்!

மதுரா, LGBTQ என்றால் என்னவென்று மக்களுக்குப் புரியாத ஒரு சிறிய நகரத்தில் இருந்து தான் வருவதாகக் கூறினார்... அவர்களுக்கு அதைப் பற்றி எந்த யோசனையும் இல்லை. ரோட்டரி என்ன செய்ய முடியும் என்று நீங்கள் கேட்டீர்கள், பள்ளி மட்டத்தில் மக்களுக்கு கல்வி கற்பிக்க ஆரம்பிக்கலாம், இந்த பிரச்சினையை பாடத்திட்டத்தில் கொண்டு வாருங்கள் என்றார்.

சிங் ரோட்டேரியர்களை “தங்கள் மௌனத்தை கலைத்து இந்த பிரச்சனை பற்றி பேச வேண்டும். என்று வலியுறுத்தினார். அதைத்தான் நான் செய்தேன். நாம் பேசாத விஷயங்களில் ஒன்று பாலியல்.



அதன் மேல் இருக்கும் தடைகள், ஒரே மாதிரியான கருத்துக்கள், களங்கங்கள் மற்றும் பாகுபாடு ஆகியவற்றை நாம் உடைக்க வேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக இந்தியத் திரைப்படங்களில் LGBTQ சிக்கல்கள் கேளிக்கையான முறையில் சித்தரிக்கப்படுகின்றன, ஆனால் முன்னணி நடிகர்கள் இந்த பாத்திரங்களைச் செய்து, மக்கள் சென்று அவற்றைப் பார்த்தால், சிறந்த விழிப்புணர்வு மற்றும் புரிதல் இருக்கும் என்று லம்பா கூறினார். சினிமாவுக்கு அற்புதமான சக்தி உள்ளது, அது இந்த விஷயத்தை கையாள வேண்டும். எந்த மாற்றமும் அடிமட்ட அளவில் நிகழ்பவை, இந்தியா சிறிய நகரங்களிலும் கிராமங்களிலும் வாழ்கிறது. மேலும், ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை இதுபோன்ற ஒரு திரைப்படத்தை நாம் உருவாக்கலாம், கிராமப்புற இந்தியா உட்பட இந்தியாவின் உள் மூலைகளை சென்றடையும் ரோட்டரி இதில் மிக முக்கியமான பாத்திரத்தை வகிக்க முடியும். நீங்கள் இதற்காக கொடி ஏந்தியவர்களாக இருந்து, இந்தியாவில் உள்ள ஏராளமான வீடுகளுக்கு இந்த உரையாடலையும் விழிப்புணர்வையும் கொண்டு செல்லவேண்டும்.

ரோட்டரியை எவ்வாறு உள்ளடக்கியதாக மாற்ற முடியும் என்பது குறித்து இயக்குநர் புலிஸ் குழுக்களின் கருத்தைக் கேட்ட போது, தலைமைத்துவ மட்டங்களில் அதிகமான பெண்களைச் சேர்ப்பது அவசியம் என்று அவர்கள் அனைவரும் ஒருமனதாக கூறினார்கள். லம்பா கூறினார்: இந்தியாவை அடுத்த வல்லரசு ஆவதைத் தடுக்கும் விஷயங்களை பற்றி நாங்கள் மேடைக்குப் பின்னால் விவாதித்துக் கொண்டிருந்தோம். நாம் அனைவரையும் ஏற்றுக் கொள்பவர்களாகும் வரை அது நடக்காது.


கூடியிருந்த PDGகள், DGகள் மற்றும் DGEகளுக்கு குழு உறுப்பினர்களின் இறுதி வேண்டுகோள், அவர்களின் சங்கங்களில் உள்ளடக்கத்தின் செய்தியை எடுத்துச் செல்ல வேண்டும் என்பது தான்.

இந்தியப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு கல்வி, பயணம், வாய்ப்புகள் என எல்லாவற்றையும் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள், ஆனால் ஒரு குழந்தை நான் வித்தியாசமானவன் என்று வந்து சொல்லும் தருணத்தில், பெற்றோர்கள் அந்தக் குழந்தையைப் புறக்கணிக்கிறார்கள். அது தவறு; நம்மிடமிருந்து கொல்லைப்புறத்தில் மறைந்திருக்கும் குழந்தைகளுக்காக பாடுபடுவோம்... அங்கேதான் உண்மையான மாற்றம் தொடங்கும் என்று லம்பா கூறினார்.

RI தலைவர் ஜோன்ஸ் மேலும் கூறுகையில், இது நம்பமுடியாத அளவிற்கு முக்கியமான தலைப்பு, மற்றும் பாலியல் விருப்பம் மற்றும் பாலின சமத்துவம் ஆகியவற்றைப் பற்றியது. மனித நேயத்தை நோக்கிச் செயல்படும் தனிநபர்களாக, தடைகளைத் தகர்த்து அதைக் கூட்டாகப் பேசக்கூடியவர்களாக நாம் இருக்க வேண்டும். இப்போது நாம் நடத்திய உரையாடலில் சிலர் சங்கடமாக உணர்ந்திருக்கலாம் என்று எனக்குத் தெரியும், ஆனால் அது பரவாயில்லை. நாம் எங்கு செல்கிறோம் என்பதில் வசதியாக இருக்க சில சமயங்களில் சங்கடத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.”■

# PRID பாண்டுரங்க செட்டி மறைவு

## ரோட்டரி செய்திக் குழு



ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் இயக்குநர் M K பாண்டுரங்க செட்டி, கடந்த ஜனவரி 21ம் தேதி, 90 வயதில், உடல் நலக்குறைவால் காலமானார். இவர் RID 3190-க்கு உட்பட்ட பெங்களூர் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினராகவும், ரோட்டரி நியூஸ் டிரஸ்டின் அறங்காவலராகவும் இருந்தார். பல ஆண்டுகளாக பெங்களூரில் பத்திரிகையின் உள்ளடக்கத்தை வழிநடத்தி வந்தார்.

பாண்டுரங்க செட்டி, ரோட்டரி இன்டர்நேஷனலின் சுயநலமில்லாத சேவைக்கான விருதைப் (Service Above Self Award) பெற்றவர். ரோட்டரி இன்டர்நேஷனலில் திட்டமிடல் குழு, வளர்ச்சிக் குழு, மாவட்டக் குழு, தேர்தல் மறு ஆய்வுக்குழு மற்றும் ரோட்டரியின் நூற்றாண்டு வரலாற்றுக் குழுவிலும் உறுப்பினராக இருந்தார். RI நிர்வாக்க்குழு (1992–93), ரோட்டரி அறக்கட்டளை (இந்தியா), தென்கிழக்கு ஆசியாவுக்கான பிராந்திய போலியோ பிளஸ் குழுவின் தலைவராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

மூத்த கல்வியாளரான செட்டி, ராஷ்ட்ரீய சிக்க்ஷணா சமிதி அறக்கட்டளையின் செயல்பாடுகளை விரிவுபடுத்தி, அதன் கௌரவத் தலைவராக இருந்தார். மேலும் அறக்கட்டளை நடத்தும் R V பல்கலைக்கழகத்தின் வேந்தராகவும் பணியாற்றியுள்ளார்.

தொழிலதிபான அவர், சுவிட்சர்லாந்தில் மேற்படிப்பை முடித்த பின்னர், மைசூரில் அரவைத் தொழில்நுட்பத்தை கட்டமைப்பதில் முக்கிய பங்காற்றினார். பெங்களூரில் உள்ள இந்திய மேலாண்மைக் கழகம் அவரது பெரு முயற்சியால் முன்னணி கல்லூரியாக உருவெடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. கர்நாடக அரசு மாநில தொழில் முதலீடு மற்றும் வளர்ச்சி கழகத்தின் தலைவராகவும் அவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

(அவரது மறைவுச் செய்தி மார்ச் இதழில் விரிவாக இடம்பெறும்)■

# மாவட்ட பயிற்சியாளர்கள் செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை

V முத்துகுமரன்




*RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் PRIP சேகர் மேத்தா மற்றும் PDG E K சகாதேவன் ஆகியோருடன்.*

நீங்கள் பொறுப்புள்ள ரோட்டேரியன்களை விரும்பினால் வழக்கமான கூட்டங்கள், நிகழ்வுகள் மற்றும் சேவைத் திட்டங்களில் ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களிடம் பொறுப்புகளைக் கொடுங்கள். இதன் மூலம் அவர்கள் தங்கள் நிறுவனம் போல் நினைத்து செயல்படுவதுடன், அமைப்பை விட்டு வெளியேற மாட்டார்கள் என்றார் ரோட்டரி தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ். விசாகா விஸ்டாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட 30 மாவட்ட பயிற்சியாளர்களிடையே அவர் பேசினார். சமூகங்களைச் சென்றடைய ரோட்டரி சங்கங்கள் மற்றும் மாவட்ட சங்கங்களுக்கு மாவட்ட பயிற்சியாளர்களின் பங்கு முக்கியமானது. ரோட்டரி இன்டர்நேஷனலின் பன்முகத்தன்மை, சமபங்கு மற்றும் உள்ளடக்கம் என்னும் புதிய கொள்கையுடன் எல்லையை விரிவு படுத்துவதற்கு மாவட்ட பயிற்சியாளர்கள் தங்களை மேம்படுத்திக் கொள்வதும், புதிய பயிற்சி முறைகளை பின்பற்றுவதும் இன்றியமையாதது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தங்களது மாவட்ட ஆளுநர்களுக்கு இணக்கமான பயிற்சியாளர்களாகவும் அவர்கள் இருக்க வேண்டும் என்று RID மகேஷ் கோட்பாகி தெரிவித்தார். சில PDG-க்கள் DT-க்களிடமிருந்து கற்றுக்கொள்ள ஏதும் இல்லை என்று நினைக்கிறார்கள். அது தவறானது. நீங்கள் பயிற்சி பெறுவதுடன் உங்கள் திறமைகளை காலத்துக்கு ஏற்ப வளர்த்துக் கொள்ள வேண்டும். *Rotary.org* மூலம் கற்றல் முறைகளைத் தெரிந்துகொண்டு ரோட்டரியின் கொள்கைகள், நெறிமுறைகளை விவரமாக அறிந்து கொள்ளுங்கள் என்றும் பங்கேற்பாளர்களை கேட்டுக் கொண்டார்.

தங்களது சிறப்பான பயிற்சி திட்டங்கள் மூலம் தங்களது மாவட்டத்தின் எதிர்காலத்தை நன்கு வடிவமைக்கவும், வளப்படுத்தவும் மாவட்ட பயிற்சியாளர்களால் முடியும் என்று PRIP மேத்தா கூறினார்.

PDG ஜவஹர் வட்லாமணி, மாவட்ட பயிற்சியாளர்கள், தங்கள் ஆளுநர்கள் மீது ஆதிக்கம் செலுத்த வேண்டாம், ஆனால், அதே நேரத்தில் அவர்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும். உங்கள் பங்கு குடும்பத்தில் மூத்தவர் செயல்பாடு போல் இருக்க வேண்டும். *Rotary.org* இணையத்தில் கற்றல் தொடர்பான அனைத்து வழிகளும் உள்ளன. உங்கள் பயிற்சி திட்டங்களை கட்டமைத்து முன்கூட்டியே நன்றாக திட்டமிட்டு செயல்படுத்துங்கள் என்றார். ஸ்பீட் பீ, அட்டவணைகள், அமர்வுகள், குழுவிவாதம் மற்றும் ஆய்வுகள் என ஏழுவிதமான பயிற்சி தொகுதிகள் உள்ளன என்றார் PDG ஜார்ஜ் சுந்தர்ராஜ். நல்ல மற்றும் கெட்ட நடைமுறைகள் மற்றும் ஆய்வுகள் தொடர்பான இரண்டு விவாதங்கள் PDG-க்கள் கிஷோர் குமார் மற்றும் ரஞ்சன் திங்ரா ஆகியோரால் நடத்தப்பட்டன. PRID கமல் சங்வி பயிலரங்குகள் மற்றும் கருத்தரங்குகளில் தகுதியான, சரியான பேச்சாளர்களை வைத்து பயிற்சி அளிக்கும்படி கேட்டுக் கொண்டார்.■




RI *பொது செயலர் ஜான் ஹுகோ*

# ரோட்டரி பலவீனமாக இருக்கிறதா?

**ஜெய்ஸ்ரீ**

அபுதாபியில் நடைபெற்ற GETS/ GNTS கூட்டத்தில் RI பொதுச் செயலர் ஜான் ஹுகோ அடுத்த 10 ஆண்டுகளில் ரோட்டரியின் உண்மைநிலை எப்படி இருக்கும் என்று விளக்கினார். அடுத்த 5 அல்லது 10 அல்லது 20 ஆண்டுகளில் ரோட்டரி வலுப்பெற வேண்டுமானால் 6 முக்கிய விஷயங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்ட அவர், ரோட்டரிக்கு எதிர்நோக்கியுள்ள சவால்களை விவரித்தார்.

### உறுப்பினர் சேர்க்கை

கடந்த 20 ஆண்டுகளில் நமது உறுப்பினர்கள் எண்ணிக்கை 1.2 மில்லியன் என்ற அளவிலேயே உள்ளது. இதே அளவை நம்மால் பராமரிக்க முடிந்தால் நல்லது. ஆசியா, ஆப்பிரிக்கா, தூர கிழக்கு மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் உறுப்பினர்கள் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி கண்டுள்ளோம். ஆனால், அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, நியூஸிலாந்து ஆகிய நாடுகளில் உறுப்பினர் விஷயத்தில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்றார். முதன் முறையாக வட அமெரிக்கா, அமெரிக்கா மற்றும் கனடாவில் உலகளாவிய மொத்தத்தில் 30 சதவீதம் வீழ்ச்சி அடைந்துள்ளது. இதே நிலை தொடர்ந்தால் இன்னும் 10 ஆண்டுகளில் வடஅமெரிக்காவில் 15 சதவீதம் மற்றும் ஆசியாவில் 50 சதவீத ரோட்டேரியன்கள் தான் இருப்பார்கள். ஆசியா வளர்ந்து வருகிறது என்பதுதான் உண்மை. ஆனால், நாம் ரோட்டரியை எல்லா இடங்களிலும் வளர்க்க வேண்டும். கடந்த ஆண்டு 1,50,000 பேர் ரோட்டரியில் இணைந்தார்கள் என்றால் அதே எண்ணிக்கையிலானவர்கள் ரோட்டரியை விட்டு விலகியதையும் நாம் பார்த்தோம்.

ரோட்டரி உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், அதை தக்கவைத்துக் கொள்வதற்கும் புதுமையான அனுபவத்தை வழங்குவது முக்கியமானது. நீங்கள் ரோட்டரியில் சேரும்போது ரோட்டரி அனுபவத்துக்காக நீங்கள் பணத்தையும், நேரத்தையும் செலவிடுகிறீர்கள். பல சந்தர்ப்பங்களில் அந்த அனுபவங்கள் தாங்கள் எதிர்பார்த்த அளவில் இல்லை என்பதை மக்கள் உணர்கிறார்கள். எனவே நாம் அவர்களுக்கு புதுமையாக எதையாவது வழங்க வேண்டும்.

### நெகிழ்வுத்தன்மை

ரோட்டரி சங்கங்களில் மாவட்டத் தலைவர்கள் நெகிழ்வுத்தன்மையுடன் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். நேற்றைய செயல் பாடும், இன்றைய செயல்பாடும் நாளை வேலை செய்யாது. ஏனெனில் உலகில் தொடர்ந்து மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. ஆனால், நான்கு வழி சோதனை. நெறிமுறைகள், கூட்டுறவு, உலகிற்கு நன்மை செய்வது ஆகியவை மாறாதது. இதுதான் ரோட்டேரியனாக இருப்பதன் சிறப்பு அம்சம் மற்றும் ரோட்டரி டி.என்.ஏ.வுக்கு திறவு கோலாகும். ஆனால், அடிக்கடி சந்திப்பது என்பது என்னை பொறுத்தவரை முக்கியமானதல்ல. மணி அடிப்பதோ அல்லது பாடல் பாடுவதோ ரோட்டரியில் இணைய விரும்புபவர்களுக்கு சரியானதாக இருக்காது. வளர்ந்து வரும், துடிப்பான, வித்தியாசமான சங்கங்களை உருவாக்குவது அவசியமானது என்றார் அவர்.

**தேக்கநிலையை சரிபார்க்கவும்**

கோடாக்கின் வீழ்ச்சியை மேற்கோள்காட்டி ஹூகோ கூறுகையில், மிகவும் பிரபலமான அந்த நிறுவனம் திடீரென திவாலானது. இதற்கு காரணம் அந்த நிறுவனம் மாறிவரும் சூழ்நிலைக்கு ஏற்ப அதாவது, டிஜிட்டல் உலகத்துக்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொண்டு செயல்படாதது தான். வழக்கமான சந்திப்பு நடத்துவதற்கோ அல்லது கையேடுகளை மனப்பாடம் செய்து ஒப்பிக்கவோ அல்லது விதிப்படி வேலை செய்வதற்கு இது ஒன்றும் வியாபாரம் அல்ல. மாறாக நாம் மக்களை ஒன்றிணைப்பது, உலகத்தை மாற்றுவது, தனி நபர்களாக வளர்வது மற்றும் அடிப்படையில் வேடிக்கையாக இருப்பது ஆகியவைதான் நமது தொழில். இதுபோன்ற மாதிரியைத்தான் நாம் உருவாக்கி செயல்படுத்த வேண்டும்.

ரோட்டேரியன்களாகிய நாம் அவ்வப்போது ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப நம்மை மாற்றிக்கொண்டு சுறுசுறுப்பாக இயங்க வேண்டும். தொடர்ச்சிதான் ரோட்டரியின் பலம். ஒவ்வொரு ஆண்டும் புதிய நபர்களைக் கொண்டுவந்து, புதுப்புது வழிகளை கண்டுபிடித்து செயல்பட வேண்டும். நமது இன்டர்நேஷனல் தலைவர், இயக்குநர்களில் ஒரு பகுதியினர், அறங்காவலர்கள் ஆண்டுக்கு ஆண்டு மாறிக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால், இதில் ஒரு பின்னடைவு இருக்கிறது. இது தொடர்ச்சியை வளர்க்காது. இது எனது ஆண்டு, எனது சங்கம், எனது ஆளுநர்கள் அல்லது எனது சாதனை என்பது அல்ல. ஒவ்வொரு ஆண்டும் புதிய தலைவர்கள் வரும்போது, முந்தைய தலைவர்கள் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர வேண்டும். இந்த உத்தியை சங்கம், மாவட்டம், மண்டலம் மற்றும் சர்வதேச அளவில் கொண்டுசென்று செயல்படுத்துவது என்பது நிச்சயம் எளிதான காரியமல்ல என்றும் அவர் கூறினார்.

**அடுத்து என்ன?**

ரோட்டரி அதன் அடுத்த சர்வதேச திட்டத்தை அடையாளம் காண்பது முக்கியம். ஆமாம், நாம் இறுதிக்கோட்டை எட்டும் வரை போலியோ ஒழிப்பு நடவடிக்கை தான் முதன்மையானதாக இருக்கும். ஆனால், போலியோ CDC, WHO, UNICEF மற்றும் Gates Foundation ஆகியவற்றுடன் நம்மை சர்வதேச அரங்கில் சம்மாக வைத்திருப்பதால் நமக்கு இன்னொரு சர்வதேச திட்டம் தேவை.

**பிராந்தியமயமாக்கல்**

உள்ளூர் ரோட்டேரியன்களுக்கு அதன் மேல் ஈர்ப்பை ஏற்படுத்தி, நமது உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிக்க உதவுவதால் பிராந்தியமயமாக்கல் இங்கே அவசியம் என்பதை நாம் உணர வேண்டும் என்று அவர் கூறினார்.

ஒரு நேர்மறையான கருத்தாக ஹூகோ மேலும் குறிப்பிடுகையில், கடந்த 117 ஆண்டுகளாக ரோட்டரியை துடிப்புடன் வைத்திருக்க பல விஷயங்களை சரியாகச் செய்து வருகிறோம். ஆனால், ஆயிரத்தில் ஒன்றுதான் சரியாக இல்லாமல் இருந்திருக்கலாம்.

நாம் நெகிழ்வுத்தன்மையை மேம்படுத்தி, புதிய செயல் திட்டத்தை பின்பற்றினால், புதுமையான சங்கங்களுடன் ரோட்டரியை வளர்த்தால் நமது கனவுகள் நனவாகும். நமது அமைப்பு மனிதகுலத்துக்கு கிடைத்த மிகப்பெரிய பரிசாகும். அந்த பரிசு ஒன்றும் இல்லாமல் வீணாகிப் போக நாம் அனுமதிக்கக் கூடாது.

ரோட்டரியின் எதிர்காலம் மிக மிக பிரகாசமாக இருக்கிறது. உங்கள் தலைமையில் நமது ரோட்டரி அமைப்பு பல்வேறு மேடு பள்ளங்களைக் கடந்து இலக்கை எட்டுவதுடன், உலகில் மாற்றங்களை ஏற்படுத்தி உலக மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்றார்.

கோவிட் நெருக்கடியின் போது பொருளாதார நெருக்கடியினாலும், மெய்நிகர் வழியிலேயே நாம் செயல்பட்டு வந்ததாலும் உறுப்பினர்கள் எண்ணிக்கையை கணிசமாக இழந்துவிடுவோமோ என்ற கவலை ஒருபக்கம் இருந்தது. ஆனால், தெற்காசியாவில் உறுப்பினர் எண்ணிக்கையில் ஸ்திரத்தன்மை இருப்பதை காணமுடிந்தது என்றார் அவர்.

ரோட்டரியின் நிதிநிலை பற்றி குறிப்பிடுகையில், RI மற்றும் TRF ஆகியவற்றின் இருப்பு இன்னொரு நெருக்கடி வந்தாலும் சமாளிக்கும் நிலையில் உள்ளது என்றார். இந்த அமர்வுக்கு TRF அறங்காவலர் பரத் பாண்ட்யா தலைமை வகித்தார்.



TRF *அறங்காவலர் பரத் பாண்ட்யா*
*மற்றும்* RI *பொது செயலர் ஹூகோ.*

புகைப்படங்கள்: ஜெய்ஸ்ரீ

# அபுதாபியில் GETS சந்திப்பு



வலமிருந்து: RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ், மீனாக்ஷி, GNTS தலைவர் PDG சஞ்சய் கேம்கா, எல்லோரா மற்றும் GETS தலைவர் PDG ப்ரியேஷ் பன்டாரி.



இடமிருந்து: மீனாக்ஷி கேம்கா, எல்லோரா பன்டாரி, சோனல் சங்வி, அமிதா கோட்பாகி மற்றும் சுஜாதா மாதவ் சந்திரன்.





இடமிருந்து: DGE ஆஷா வேணுகோபால், RIDE T N சுப்ரமணியன், TRF அறங்காவலர் பரத் பாண்ட்யா, PRID கமல் சங்வி, DGE மஞ்சு ஃபாட்கே மற்றும் DGE ரீட்டு க்ரோவர்.



RI பொது செயலர் ஜான் ஹீகோ மற்றும் அவர் மனைவி மார்கரட் (சிறப்பு ஏற்பாடு).



RIDs கோட்பாகி, ட்ரூ கெஸ்லர் மற்றும் விக்கி புலிஸ்.




இடமிருந்து: RI இயக்குநர் மகேஷ் கோட்பாகி, அமிதா மற்றும் RI இயக்குநர் ஃபயிஸ் கிட்வாய்



இடமிருந்து: சோனல், PRID சங்வி, RID கோட்பாகி மற்றும் அமிதா (சிறப்பு ஏற்பாடு).

புகைப்படங்கள்: ஜெய்ஸ்ரீ, வடிவமைப்பு: கிருஷ்ணப்ரதீஷ் S

# ரோட்ராக்டர்களுக்கு மேம்படுத்தப்பட்ட வாய்ப்புகள் காத்திருக்கின்றன

**ஜெய்ஸ்ரீ**

2023 ஜனவரியில் இருந்து $5 மற்றும் $8 மெம்பர்ஷிப் நிலுவைத் தொகையைச் செலுத்த உலகெங்கிலும் உள்ள ரோட்ராக் டர்கள் தயாராகி வரும் நிலையில், RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ், விசாகா விஸ்டா மாநாட்டின் ஒரு பகுதியான சிம்பியோசிஸ் என்ற ரோட்ராக்ட் கருத்தரங்கில் அதன் பலன்களை அவர்களுக்கு விளக்கினார். 'உறுப்பினருக்கான நிலுவைத் தொகையை செலுத்துவது, உங்களுக்கு மதிப்புமிக்க ரோட்டரி அனுபவத்தை வழங்க எங்களுக்கு உதவும், மேலும் உங்களை இது ரோட்ராக்டை தீவிரமாக எடுத்துக் கொள்ள வைக்கும். வரவிருக்கும் ஆண்டுகளில், அதன் மதிப்பை நீங்கள் புரிந்துகொள்வீர்கள், என்று அவர் கூறினார்.

ரோட்டராக்டர்கள் இப்போது பல ரோட்டரி குழுக்களில் சேர்த்திருப் பதை ஜோன்ஸ் சுட்டிக் காட்டினார். 'நம்மால் மிகவும் விரும்பப்படும் குழுக்களில் ஒன்று நம் சர்வதேச மாநாட்டுக் குழு. ரோட்டராக்டர்களை அதில் வைத்துள்ளேன். நம் மாநாட்டிற்கான யோசனைகளைப் பற்றி நாங்கள் விவாதித்த போது, சிறந்த யோசனைகள் ரோட்டராக்டர்களிடமிருந்து வந்தன. மேலும் அவர்கள் மாவட்ட மாநாடுகளுக்கு RI தலைவரின் பிரதிநிதிகளாகவும் ஆக்கப்பட்டுள்ளனர் என்று அவர் கூறினார்.

இரட்டை உறுப்பினர் நிலைக்கு அதரவாக பேசிய அவர், உங்களுக்கு ஒரு ரோட்டரி சங்கம் கவர்ச்சி கரமானதாக இருந்தால் அதில் சேருங்கள். அல்லது உங்கள் சொந்த சங்கத்தை தொடங்கி, நீங்கள் விரும்பியபடி அதை இயக்கவும். நீங்கள் எங்கள் எதிர்காலம். இல்லை, நீங்கள் தான் நிகழ்காலம். அடுத்த இரண்டு தசாப்தங்களில் ரோட்டரி எப்படி இருக்கும் என்பதை நீங்கள் நிர்ணயிக்க போகிறீர்கள். மேலும் நீங்கள் எங்களுக்கு கற்பிக்கப்போகும் விஷயங்களில் ஒன்று பாலின சமத்துவம்.

முன்னதாக RIPN ஸ்டீபனி உர்ச்சிக், முன்னாள் உலக ரோட்ராக்ட் கமிட்டி தலைவர் PDG ரவி




*RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் ரோட்டராக்ட் நிகழ்ச்சியில் ரத்த முகாம் ஒன்றை துவக்கி வைக்கிறார். உடன் RI இயக்குனர்கள் மகேஷ் கோட்பாகி, மற்றும் ட்ரூ கெஸ்லர், PDG ரவி வட்லாமணி மற்றும் ரோட்டராக்ட் தலைவர்கள் ஆகியோரும் உள்ளனர்.*

வட்லாமணி, நிகழ்வின் தலைவர் RID 3131 PDRR அர்ஜுன் தேவ் மற்றும் RID 3120 DRR பிரத்யுஷா வர்மா ஆகியோர் முன்னிலையில் கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார்.

30 மற்றும் 40 வயதிற்குட்பட்ட ரோட்டேரியர்கள் உலகின் பிற பகுதிகளை விட இந்தியாவில் அதிகமாக இருப்பதைக் கவனித்த RI இயக்குனர் விக்கி புலிஸ், இந்த சூழ்நிலை ரோட்டராக்டர்களுக்கு சிறந்த வாய்ப்புகளை உருவாக்குகிறது என்று கூறினார். “உங்கள் கருத்துக்கள் மற்றும் முன்னோக்குகள் நம் நிறுவனத்தை வலுவாக மாற்ற வேண்டும். என்று அவர் கூறினார்.

RI இயக்குனர் ட்ரூ கெஸ்லர் ரோட்டராக்டர்களை ரோட் டரியில் விரைவில் சேருமாறு வலியுறுத்தினார். “நான் 20 வயதில் ரோட்டரியில் சேர்ந்த போது, நான் தான் என் சங்கத்தில் இளையவன், இன்று 41 வயதில், நான் இன்னும் இளையவனாகவே இருக்கிறேன். இரட்டை உறுப்பினர்களாக இருப்பதற்கு அவர்களைத் தூண்டிய அவர், இதன் மூலம் ரோட்டரியில் சேர உங்கள் ரோட்ராக்ட் அடையாளத்தை விட்டுக்கொடுக்க வேண்டியதில்லை. நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள், யார் என்பது முக்கியமில்லை.



RIPN *ஸ்டிஃபனி அர்ச்சிக்,* RID *விக்கி புலிஸ்,* PDG *ரவி வட்லாமணி,* PDRR *அர்ஜுன் தேவ் மற்றும்* DRR *ப்ரத்யுஷா வர்மா முன்னிலையில் விழாவை துவக்கி வைக்கிறார்.*



ரோட்டரி சங்கத்தில் சேர்ந்த அனுபவத்தை நினைவு கூர்ந்த கெஸ்லர், என்னுடைய சங்க உறுப்பினர்கள் என்னை 20 வயது இளைஞனாக பார்க்கவில்லை. அப்படிப்பட்ட திறமைசாலிகள் மத்தியில் அமர எனக்கு எந்தத் தகுதியும் இல்லை என்று நான் நினைத்தபோது, அவர்கள் என்னை ஒரு வருங்கால ரோட்டேரியனாகப் பார்த்தார்கள். என்னைத் அவர்களின் கீழ் சேர்த்து, எனக்கு வழிகாட்டி, இந்த நிலைக்கு கொண்டு வந்துள்ளன்னர்.

ரோட்டரியில் வணிகத்தை கொண்டு வருவதற்கான வலுவான ஆதரவாளரான அவர், “நாம் முழு உலகிலும் நம்பர் 1 சேவை அமைப்பு என்று எனக்குத் தெரியும். ஆனால் நெட்வொர்க்கிங் நோக்கத்திற்காக தனது வணிக நண்பர்களை ஒன்றிணைத்த ஒரு நபருடன் நாம் இதை தொடங்கினோம். நான் யாருக்காவது கொடுக்க வேண்டிய வணிகம் இருந்தால், அதை ரோட்டேரியன் அல்லாத நண்பருக்குப் பதிலாக ரோட்டேரியரான ஒத்த எண்ணம் கொண்ட நண்பருடன் பகிர்ந்து கொள்கிறேன். ரோட்டரி என்பது ஒத்த எண்ணம் கொண்ட நபர்களின் வலையமைப்பு. அவர்கள் ஒருவருக்கொருவர் நன்றாக இருப்பதைப் பார்க்க விரும்புகிறார்கள்.

இப்போது அறக்கட்டளை மானியங்களில் ரோட்ராக்ட் சங்கங்கள் பங்கேற்கலாம் என்பதால், நம் அறக்கட்டளையின் சக்தியை உணர்ந்தவுடன் நீங்கள் பெரிய அளவில் பங்களிப்பீர்கள். உங்கள் பைகளில் மட்டுமிருந்து அல்லாமல், இதயத்திலிருந்து கொடுப்பதை நான் நம்புகிறேன். என RI இயக்குனர் கூறினார்

உறுப்பினர் நிலுவைத் தொகையை செலுத்துவதில் ரோட்டராக்டர்களிடையே உள்ள தயக்கத்தை பற்றி பேசிய வட்லாமணி, சவால் மனதில் உள்ளது. உங்கள் பீட்சாவை நீங்கள் விரும்பும் அளவுக்கு ரோட்ராக்டின் மதிப்பை நீங்கள் இன்னும் உணரவில்லை. $5 மற்றும் $8 விலை அதிகம் என்று நீங்கள் கூறுகிறீர்கள். பணம்தான் எல்லாமே என்று உங்கள் மனதில் உள்ள விலங்குகளை உடைத்தெரியுங்கள். ரோட்டரி தரும் அனுபவமும் கல்வியும்தான் முக்கியம். நீங்கள் புதிய எல்லைகளை அடைய வேண்டும் என்றால், பெரிய கனவு காண வேண்டும்.

புகைப்படங்கள்: ஜெய்ஶ்ரீ

# தொழில்முனைவோரை உருவாக்கும் RID 3212

ரஷீதா பகத்



DG முத்து ஒரு RYLA பங்கேற்பாளருடன்.

RID 3212, இன்றைய உலகுக்கான இளம் தொழில்முனைவோரை உருவாக்கும் தன்னுடைய தொடர்ச்சியான மற்றும் நடைபெற்றுவருகிற 3 நாள் RYLA திட்ட நிகழ்ச்சிகளின் வழியாகத் தொழில்முனைவோரை வெற்றி கரமாக ஊக்குவித்துவருகிறது. இந்த நிகழ்ச்சிகள் திருநெல்வேலியில் ஒவ்வொரு மாதமும் நடை பெறுகின்றன. "RID 3212ஐ சேர்ந்த ரோட்டரியன்கள் இந்தத் தொடர்ச்சியான திட்டத்தின் வெற்றியை உறுதிசெய்ய வெவ்வேறு வழிகளில் பங்களிக்கிறார்கள். தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களைச் சேர்ந்த, 18 முதல் 28 வயதுள்ள, தொழில்முனைவோர் ஆகும் கனவு கொண்டுள்ள இளைஞர்கள் அடையாளம் காணப்பட்டு, தொழில் மேலாண்மையின் வெவ்வேறு நுணுக்கங்களைச் சிறப்பாகக் கற்றுக்கொள்ளும் திறன்கள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன'' என்கிறார் DG V R முத்து.

இவர் ஆளுநராகப் பொறுப் பேற்பதற்கு 14 மாதங்கள் முன்னால் தொடங்கிய இந்த பயிற்சி திட்டம் "என் ஆண்டைத் தாண்டியும் தொடரும், இதுவரை 20 பயிற்சி நிகழ்வுகளின் வழியாக 620 பங்கேற்பாளர்களுக்கு நாங்கள் பயிற்சியளித்துள்ளோம். இதில் பெண்கள் உள்பட 93 பேர் தங்களுடைய சொந்த நிறுவனங்களைத் தொடங்கி யுள்ளார்கள்'' என்று அவர் தொடர்ந்து கூறினார்.

பஞ்ச் குருகுலம் (PG) என்ற பயிற்சி அமைப்பின் மூலம் நடத்தப்படுகிற இந்தத் திட்டத்தில் ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் பயிற்சி அளிக்கும் உண்மைச் செலவு ரூ.11,500. ஆனால், RYLAல் இந்தப் பயிற்சி ரூ.2,500 மானியக் கட்டணத்தில் வழங்கப்படுகிறது.



DG முத்து மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் விஷ்ணு வேணுகோபாலன் RYLA பங்கேற்பாளர்களுடன்.

மீதியுள்ள செலவை DG முத்து அவர்களுக்குச் சொந்தமான, இதயம் பிராண்ட் உணவு எண்ணெயைத் தயாரிக்கிற, விருதுநகரைச் சேர்ந்த VVV சன்ஸ் எடிபிள் ஆயில்ஸ் நிறுவனத்தின் CSR பிரிவு ஏற்றுக்கொள்கிறது.

இந்தப் பயிற்சி PG செயலாளர் உமாசங்கர் ஜெயராமன், திட்டத் தலைவர் மற்றும் RYLA வழி செலுத்துநர் Rtn K C குருசாமி, சக ஆசிரியர் J ஸ்ரீனிவாசன், Rtnகள் P தணிகைவேல் பாண்டியன், தங்க விஜயா ஆகியோர் தலைமையில் நடைபெறுகிறது.

ஏற்கெனவே தங்களுடைய சொந்த நிறுவனங்களைத் தொடங்கியுள்ள இளம் மற்றும் ஆர்வமுள்ள தொழில் முனைவோருடைய தகவல்களை வழங்கிய ஜெயராமன், இளைஞர்கள் தங்களுடைய சொந்தத் தொடக்க நிலை நிறுவனங்களை அமைப்பதற்கு வெவ்வேறு பகுதிகளில் ஈடு பட்டுள்ளனர் என்றார். எடுத்துக் காட்டாக, மெய்நிகர் மெய்ம்மைக் கற்றல், ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சி, உணவுத் தொழில் மற்றும் இல்லச் சமையலறை மற்றும் தானியங்கி வண்டிச் சேவை மையங்களை ஃப்ரான்சைஸ் முறையில் நடத்துதல்.

இவர்களில் ஒருவர் சுருள் பாசி உற்பத்தி ஆலை அமைத்துள்ளார்; இது மருத்துவ குணங்கள் கொண்ட ஒரு மூலிகை ஆகும் (வலுவான ஆன்ட்டிஆக்ஸிடன்ட் குணங்களைக் கொண்ட நீலப் பச்சைப் பாசி வகை). இது வீக்கத்தைக் குறைக்கிறது, நலமான வயதாதலை ஊக்குவிக்கிறது போன்றவற்றை ஆய்வுகள் காண்பித்துள்ளன. ஐந்து இளைஞர்களைக் கொண்ட ஒரு குழு ஒன்றாகச் சேர்ந்து அக்வாகீட்டோ என்ற தனியார், வரம்புக்குட்பட்ட நிறுவனத்தை அமைத்துள்ளது. இவர்கள் கடல் சார்ந்த தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி அழகு மீன்களை உருவாக்குகிறார்கள். RYLA பட்டதாரிகள் அமைத்துள்ள நிறுவனங்களின் மாத விற்றுமுதல் ரூ.50,000லிருந்து ரூ.5 லட்சம் வரை உள்ளது.''

இந்தத் திட்டத்தின் மிகச் சிறந்த பகுதி, சில தொழில்முனைவோர்கள் ஏற்கெனவே வேலை வாய்ப்புகளை



உருவாக்கத் தொடங்கிவிட்டார்கள். ''இந்தத் தொடக்க நிலை நிறுவனங்களின் மூலம் இதுவரை சுமார் 40 முதல் 50 பேர் வேலை வாய்ப்பு பெற்றுள்ளார்கள் என்று நான் சொல்வேன்'' என்கிறார் முத்து.

இந்தப் புதிய தொடக்க நிலை நிறுவனங்களுக்குச் சில நிதி இணைப்புகளை வழங்குவது பற்றியும் RYLA ஏற்பாட்டாளர்கள் சிந்தித்துள்ளார்கள். 18வது தொகுப்பு மாணவர்களுடைய RYLA விடை பெறுதல் நிகழ்ச்சியின் போது, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் விஷ்ணு வேணுகோபாலன் தலைமை விருந்தினராக இருந்தார். இந்தத் திட்டத்தால் ஈர்க்கப்பட்ட அவர், TN அரசு முன்னெடுப்பாகிய TN தொடக்க நிலை நிறுவன மையத்தின் திருநெல்வேலி பிரிவுத் தலைவர் இந்த RYLA நிகழ்வு ஒன்றில் கலந்துகொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ''அவர் எங்கள் நிகழ்வு ஒன்றுக்கு வந்தார், தங்கள் சொந்த நிறுவனத்தை அமைக்க விரும்புவோருக்கு ஆதரவு அளிப்பதாக உறுதி அளித்துள்ளார்'' என்கிறார் ஜெயராமன். ''ரூ.1 லட்சத்தில் தொடங்கி இந்தக் கடன் கிடைக்கிறது, இது ரூ.5 கோடி வரை செல்லலாம்! நாங்கள் ஸ்ரீநிதி முதலீடுகளுடனும் கை கோத்துள்ளோம். சுருள் பாசித் தொழில் தொடங்கிய தொழில் முனை வோருக்கு இவர்கள் ரூ.5 லட்சம் கடன் வழங்கியுள்ளார்கள்.''

அனுபவம் மிக்க தொழில்முனை வோருடைய வழிகாட்டுதலைப் பற்றிக் கேட்டபோது, ''நாங்கள் இந்த நோக்கத்துடன் பஞ்ச் குருகுலத்தில் ஒரு குழுவை அமைத்துள்ளோம். அத்துடன், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நாங்கள் 1 மணி நேரத்துக்கு ஓர் இணைய நிகழ்வை நடத்து கிறோம், இவர்களுக்கு ஒரு பகுதி அல்லது தொழில்துறையை அறிமுகப்படுத்துகிறோம். நிதித் திட்டமிடல், GST, பதிவு செய்தல் செயல்முறை, உணவகத் தொழில் ஒன்றைத் தொடங்குவது எப்படி போன்றவைபற்றி இவர்களுக்குக் கற்றுத்தரப்பட்டது. இரண்டு பேர் உணவகங்களைத் தொடங்கி யுள்ளார்கள், மற்றவர்கள் இல்லச் சமையலறைகளை அமைத் துள்ளார்கள், தங்கள் வீச்சை விரிவாக்க ஸ்விக்கி மற்றும் ஜொமாட்டோ-வுடன் கை கோத்துள்ளார்கள்'' என்றார் ஜெயராமன்.

இந்த நிகழ்ச்சிபற்றி நாங்கள் பங்கேற்பாளர்களிடமும் பேசினோம். ''இந்த மூன்று நாட்களும் ஒரு சிறிய, எதார்த்தமான MBA படிப்பைப்போல் தோன்றின'' என்றார் தர்ஷனா ஸ்ரீ. பயிற்சிக்குப் பிறகு, இவர் இசை கற்பிக்கும் நிறுவனம் ஒன்றைத் தொடங்கியுள்ளார். இந்த RYLA நிகழ்ச்சிகளில் 17 பெண்கள் பங்கேற்றுள்ளார்கள். ■

விளம்பரம்

# District 3110

**Pawan & Prachi Agarwal**
District Governor & First Lady



## VISAKHA VISTA
New horizon

Our several District RI Officers participated in the recently concluded Rotary Institute, Visakha Vista at Vishakhapatnam from 8th to 11th December, 2022.

In one of the sessions, DG Pawan Agarwal and Prachi Agarwal won the coveted bat, autographed and given away by Legendary Past India Captain, Mr. Sunil Gavaskar. The price paid by the couple for this bounty was – "surgeries of 35 children suffering with Congenital Heart Disease."



Rotary District 3110 | IMAGINE ROTARY

## प्रोजेक्ट शिशु



**250 Baby Warmers (Total Cost: Rs. 1 Crore)**

Committed by
41 Clubs of our District



## Congratulations



PDG Sharat Chandra
has been declared elected for the post of COL Representative (2023-26 Cycle) by District Governor Pawan Agrawal on 6th January, 2023.




Under project Kanyashree 2, 635 E-Tabs were given by 78 clubs of the district to needy and meritorious girl students of class 9th. These girl students were from government schools or Vidya Bharti schools or government aided schools. The mega event was organised on 4th and 5th December, 2022 by all the clubs of the district. The E-Tabs were branded (Lenovo make) and of high technical specifications for long term use of students. These were wifi-enabled with provision for SIM card as well.



Do follow us: @Rotary3110

Advt

# District 3110 in ACTION

## DG Pawan Agarwal and First Lady Prachi Agarwal at Rotary Zone Institute 2022 (VISAKHA VISTA)









AARAMABH - AN INTRODUCTORY MEET



STUDY STATIONARY DISTRIBUTION



EYE CHECK-UP CAMP



WOOLEN CLOTHS DISTRIBUTION



BLOOD DONATION CAMP



PROSTHETIC AID DISTRIBUTION



**PDG Devender Kr. Agarwal**
District Trainer



WHEEL CHAIR DISTRIBUTION



DENTAL CHECK-UP CAMP



**Rtn. Raj Mehrotra**
CDS (Admin)

Rotary PEOPLE OF ACTION

# போரில் பாதிக்கப்பட்ட உக்ரைன் குழந்தைகளுக்கு “நகரும் வீடு”

**v முத்துகுமரன்**

போரினால் பாதிக்கப்பட்டுள்ள உக்ரைன் மக்களுக்கு ரோட்டரி அளித்து வரும் நிவாரண உதவிகளை அளவிடுவது கடினமாகும். ஆனால், கடந்த 9 மாதங்களாக நடந்து வரும் போரில் பாதிக்கப்பட்ட உக்ரைன் ரோட்டேரியன்களுக்கு ஆதரவு அளிக்கவும், அகதிகளாக வெளியேறுபவர்களுக்கு உதவுவதற்காகவும் சிறப்பு நிதியிலிருந்து 15 மில்லியன் டாலர் வழங்கப்பட்டுள்ளது. இது ஜனநாயகத்துக்கும் எதேச்சாதிகாரத் துக்குமான போர். இதில் நாங்கள் எப்படியும் வெற்றிபெறுவோம் என்றார் RID 2232ன் மாவட்ட ஆளுநர் விட்டாலி லெஸ்கோ.

உக்ரைன் நாட்டில் 1,400 உறுப்பினர்களுடன் 66 ரோட்டரி சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. சுமார் 10 சங்கங்களைச் சேர்ந்த தன்னார்வலர்கள் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் நிவாரண உதவி வழங்கி வருகின்றனர். போரினால் பாதிக்கப் பட்ட மக்களுக்காக 20-க்கும் மேலான தங்கும் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றார் லெஸ்கோ. பார்சிலோனாவில் உள்ள பாஸ்டர் கேபரியேல் மற்றும் அவரது மனைவி டாக்டர் அன்னா ஆகியோர் அடைக்கலம் கொடுத்த 15 ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் அவர்களின் ஆசிரியர்களுக்கு நகரும் வீடு (மொபைல் ஹோம்) வழங்கும் நிகழ்வு மெய்நிகர் முறையில் நடைபெற்றது. அப்போது அவர் பேசுகையில், ஸ்பெனியில் உள்ள 7 ரோட்டரி சங்கங்கள் மற்றும் ஆமதாபாதில் உள்ள 2 இன்டராக்ட் சங்கங்கள் அளித்த நிதியிலிருந்து ரூ.3.25 லட்சம் (3,700 யூரோ) மதிப்பிலான நகரும் வீடு வழங்கப்பட்டது. போரினால் உக்ரைன் மக்கள் சந்தித்து வரும் துயரங்களை அவர் வெளிச்சம் போட்டு காட்டினார். நாங்கள் இருளில் தவிக்கிறோம். கடும் குளிர் எங்களை வாட்டுகிறது. எங்களுக்கு கதகதப்பான ஆடைகள், ஜெனரேட்டர்கள், குடிநீர், விளக்கொளி மற்றும்


*RC டீ காஸ்டெல்டெஃபல்ஸ் (RID 2202) திட்டத்தலைவர் லூயி பிய்யோ மற்றும் சங்கத்தலைவர் ஜோஸ் லூயி மார்ட்ராட் நகரும் வீடு முன்.*

வெப்பம் தேவை. ரோட்டரி சங்கங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு தேவைப்படும் மக்களுக்கு தேவையான உதவிகளைச் செய்து வருகிறோம் என்றார்.

### ஒரு மாதிரி திட்டம்

உக்ரைனில் போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு நகரும் வீடு வழங்கியதால் ரோட்டேரியன்கள் ஒன்றிணைந்து செயல்பட்டால் எதையும் செய்ய முடியும் என்பதற்கு சரியான உதாரணமாகும். நாங்கள் பல நாடுகளைச் சேர்ந்தவர்கள், பல்வேறு மொழிகளைப் பேசுபவர்கள். மாறுபட்ட நம்பிக்கைகள் உடையவர்கள். ஆனாலும் ஒரேவிதமான கருத்துகளை பகிர்ந்து கொள்கிறோம். உக்ரைனைச் சேர்ந்த 4 முதல் 17 வயது வரையிலான 15 ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் அவர்களது இரண்டு ஆசிரியர்கள் மற்றும் அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்த பாஸ்டர் கேபரியேல் மற்றும் அவரது மனைவிக்கும் 7 ரோட்டரி சங்கங்கள் ஒன்றிணைந்து உதவியுள்ளன என்றார் ஸ்பெயினில் உள்ள RID 2202க்கு உட்பட்ட டீ பார்ஸிலோனா ரோட்டரி சங்கத்தின் மாவட்ட ஆளுநர் இன்கிரிட் ஸ்டெயின்ஹாப். இன்டராக்டர்கள் பங்களிப்பால் நெகிழ்ந்துபோன அந்த பெண்மணி, இந்திய சங்கங்களுடன் நட்புறவு பரிமாற்ற திட்டத்தை கொண்டிருக்கிறோம். இப்போது அந்த திட்டத்தில் இன்டராக்டர்களையும் சேர்த்துக்கொள்ள முடிவு செய் துள்ளோம். நான் பதவி விலகிய பின்னரும் இது தொடரும் என்றார்.

பாரிசிலோனாவில் உள்ள உள்ளூர் சமூகத்திற்கு நன்றி. குழந்தைகளுக்கு நல்ல கல்வி, உணவு கொடுத்து, இன்னும் தேவையான உதவிகளைச் செய்து அவர்களின் எதிர்காலத்தை வளமாக்க அந்த தம்பதிகளால் முடியும் என்றும் அவர் கூறினார்.

சுருக்கமாக உரையாற்றிய RID 3054ன் மாவட்ட ஆளுநர் பல்வந்த் சிங் சிரானா, ஆமதாபாதில் உள்ள விஸ்வபாரதி குழுமப் பள்ளிகளில் புதிதாக உருவாக்கப்பட்ட இரு இன்டராக்ட் சங்கத்தினர் முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருவதை பாராட்டினார். இந்த திட்டத்தை செயல்படுத்த ஸ்பெயின் நாட்டின் மாவட்ட ஆளுநர் இன்கிரிட் உடன் ரோட்டேரியன் அரூப் சின்ஹாவுக்கு உதவிய முன்னாள் மாவட்ட ஆளுநர் லலித் சர்மாவுக்கு நன்றி. இதனால்தான் இன்டராக்டர்கள் சரியான வழியில் பணத்தை செலுத்த உதவியது என்று அவர் கூறினார். உக் ரைன் குழந்தைகளுடன் தொடர்பில் இருப்போம். அவர்களுக்கு மேலும் உதவி தேவைப்பட்டால் எங்களால் முடிந்த உதவிகளைச் செய்ய தயாராக இருக்கிறோம் என்றும் அவர் கூறினார்.

உக்ரைன் பயனாளிகளுக்கு இன்டராக்டர்கள் சேகரித்த பணத்தை அனுப்ப உதவி கோரிய சின்ஹாவின் தொலைபேசி அழைப்பை நினைவுகூர்ந்த PDG ஷர்மா, தொகை சிறியதாக இருந்தாலும் (162 யூரோ, இந்திய ரூபாயில் ரூ.14,000) இன்டராக்டர்கள் பெரும் முயற்சி எடுத்துள்ளனர் என்றார்.

### கலகலப்பான இன்டராக்டர்கள்

இன்டராக்டர்களுக்கு டிஜிட்டல் முறையில் தொடர்பு ஏற்படுத்திக் கொடுத்தபோது இந்திய மாணவர்களும், உக்ரைன் நாட்டு குழந்தைகளும் பல்வேறு கேள்வி-பதில்களை பரிமாறிக் கொண்டனர்.

இன்டராக்டர்கள் காவ்யா தவே, ஜெய் படேல், தேவ் தக்கர், தேவ்னாஷ் வகேலா, ராகுல் ஐயர் ஆகியோர் குழந்தைகளுடன் உரையாடினர். புத்தாண்டு கொண்டாட்டம், உக்ரைன் நாட்டு கலாசாரம், புராதன சின்னங்கள், சிலைகள், அவர்களின் மதங்கள் என பொதுவான கேள்விகளை எழுப்பி பதில் பெற்றனர்.

கார்கிவ் மல்டிநேஷன் ரோட்டரி சங்கத்தின் தலைவரும், நாடுகளுக்கு இடையிலான குழுவின் தலைவருமான திமித்ரி போபோவ், குழந்தைகள் அளித்த பதிலை மொழிபெயர்த்தார். அவருக்கு தர்ராகோனா தர்ராகோ ஆகஸ்ட் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்தவரும் (RID 2202) ஸ்பானிஷ் மொழி பேசும் இணையரான சால்வடார் ஓலிவ் ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டதால் இந்திய மாணவர்களுக்கும், பார்சிலோனா பயனாளிகளுக்கும் இடையிலான உரையாடல் சுமுகமாகவும் விறுவிறுப்பாகவும் இருந்தது. உக்ரைன் நாட்டு சிறுவர்கள், சிறுமியர்கள், இந்தியாவின் பள்ளிக் கல்வி முறை, தேர்வு நடத்தும் முறை, மதிப்பெண்கள் வழங்கும் முறை மற்றும் இந்தியாவில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் பற்றி தகவல்களை ஆர்வமுடன் கேட்டுத் தெரிந்து கொண்டனர்.

உக்ரைன் நாட்டின் PDG மைகோலா ஸ்டெபெலிஜான்கோ, மேற்கொள்ளப்பட்டுவரும் இரண்டு மறுவாழ்வு திட்டங்கள் குறித்து பேசி னார். கீவ் அருகே உள்ள புஸோவா கிராமத்தில் ரஷிய குண்டுவீச்சால் முற்றிலும் சேதமடைந்த பள்ளிக் கட்டடத்தை சீரமைக்கும் பணி நடந்து வருவதாகவும், விவசாயிகள் தங்கள் இருப்பிடத்திற்கு சென்று நிலங்களில் உள்ள கண்ணிவெடிகளை அகற்றி அவற்றில் சாகுபடி செய்வதற்கு உதவும் “மைன்ஸ் டு வைன்ஸ்” ( Project Mines to Vines) திட்டத்தை செயல்படுத்த தொடங்கியுள்ளதாகவும் கூறினார்.

இன்டராக்ட் சங்கங்களின் அறங்காவலர் ரோட்டேரியன் கார்த்திகேய சுக்லா, உக்ரைன் மக்களுக்கு துணை நிற்போம் என்று கூறினார். போரினால் பாதிக்கப் பட்ட மக்களின் துயரங்களை போக்க கூட்டாக சேர்ந்து திட்டங்களைச் செயல்படுத்த தயாராக இருக்கிறோம். ஆமதாபாத், ஸ்பெயின், உக்ரைன் மற்றும் இதர நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேலான இன்டராக்டர்கள், ரோட்டேரியன்கள் இந்த மெய்நிகர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். முகநூலிலும் (பேஸ்புக்) இந்நிகழ்ச்சி வெளியானது. கிரேட்டர் ஆமதாபாத் ரோட்டரி இன்டராக்ட் சங்கத் தலைவர் அரூப் சின்ஹா, ஸ்பானிஷ் சங்கங்களுடன் இணைந்து நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். மெய்நிகர் மூலம் நடந்த இந்த நிகழ்வுக்கு தேவையான அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை ஜெய்ப்பூரைச் சேர்ந்த ரோட்டேரியன் ஹரிஷ் கடாரி செய்து கொடுத்திருந்தார்.■

# RID 3231 நடத்திய பல மாவட்ட சந்திப்பு

**கிரண் ஜெஹரா**

RID 3231 ஏற்பாடு செய்திருந்த பல மாவட்ட சந்திப்பு நிகழ்ச்சியான "தீபம்" தொடக்க அமர்வில் PRIP கல்யாண் பானர்ஜி, இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைப்பதில் இடைவிடாமல் சிறப்பாக செயல் பட்டதாக ஒவ்வொரு உறுப் பினரையும் பாராட்டினார். ரோட்டரி அமைப்பு உச்சத்தை அடைந்திருக்கும் நேரத்தில் ரோட்டேரியன்களாகிய நீங்கள் அதை மேலும் உயரத்துக்கு கொண்டு செல்ல தொடர்ந்து குழுவாக முயற்சித்து வருகிறீர்கள். இது போன்ற நிகழ்ச்சிகள் மூலம் நீங்கள் ஆன்மிகத்தை கொண்டு செல்வது உறுப்பினர்களிடம் உயர்ந்த நோக்கம், அமைதி, நம்பிக்கை, நல்லெண்ணத்தை ஏற்படுத்த உதவும். இது நம்மிடையே ஒரு காரியத்தை நன்றாகச் செய்ய வேண்டும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவதுடன் மற்றவர்களிடமும் அதே நம்பிக்கையை வளர்க்கும்.

முன்பு ஒருமுறை இந்த கோவில் நகரத்துக்கு மறந்த மனைவி பினோடாவுடன் வருகை தந்ததை பானர்ஜி நினைவுகூர்ந்தார்.

பௌர்ணமி தினத்தில் இந்த நகரத்துக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து மலையை சுற்றி 14 கி.மீ. கிரிவலம் வந்து கோவிலில் தரிசனம் செய்வார்கள். பௌர்ணமி போல இந்த நிகழ்வு முழுமை பெற்றுள்ளது என்று DG J K N பழனி (RID 3231) கூறினார். நாடு முழுவதும் உள்ள ரோட்டேரியன்கள் பெருமளவில் இதில் கலந்துகொண்டுள்ளதால் முழு நிலவான பௌர்ணமி போல் கூட்டம் நிரம்பி வழிகிறது என்றார்.

DGக்கள் துஷ்யந்த சௌதுரி (RID 3070), N நந்தகுமார் (RID 3232), ராஜசேகர் ரெட்டி (RID 3150), B இளங்குமரன் (3202) மற்றும் I ஜெரால்டு (3000) மற்றும் PDGக்கள் பலரும், 1,000த்துக்கும் மேற்பட்ட பதிவுகளைக் கொண்ட 11 மாவட்ட ரோட்டேரியன்களும் இதில் கலந்து கொண்டனர்.

இதை ஒரு தற்செயல் நிகழ்வாக கருதவேண்டாம் என்று PDG அபிராமி ராமநாதன் (RID 3232) கூறினார். நீங்கள் அருணாசலேஸ்வரரை தரிசனம் செய்ய புண்ணியம் செய்திருக்க வேண்டும். மேலும் RID 3231 மாவட்டத்தில் நடமாடும் மருத்துவ கிளினிக்குகள் அமைக்க ரூ.20 லட்சம் நன்கொடை யளிப்பதாகவும் கூறினார்.

தென்னிந்தியாவின் முக்கியமான ஐந்து சிவ ஸ்தலங்களில் திருவண்ணாமலையில் மலை யடிவாரத்தில் அமைந்துள்ள அருணாசலேஸ்வரர் கோயிலும் ஒன்றாகும். இது அக்னி ஸ்தலம் என்று போற்றப்படுகிறது. இங்கு மக்கள் சிவனை அக்னியாக வழிபடுகிறார்கள். 9-வது நூற்றாண்டில் கட்டப்பட்ட இந்த கோயில், 10 ஹெக்டேர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.





*இடமிருந்து:* DGs N *நந்தகுமார், ராஜசேகர் ரெட்டி,* J K N *பழனி,* PRIP *கல்யாண் பானர்ஜியுடன்.*

கடந்த 6 வருடங்களாக கோயிலில் நடைபெறும் கார்த்திகை திருவிழாவில் கடைசி நாளில் இவ்வாறு பல மாவட்ட சந்திப்பு நிகழ்ச்சியை எங்கள் சங்கம் நடத்தி வருகிறது. ஒரே நேரத்தில் லட்சக் கணக்கான பக்தர்கள் வந்து குவியும் நேரத்தில் ரோட்டேரியன் களுக்காக நாங்கள் சிறப்பு ஏற்பாடு களைச் செய்துள்ளோம். சிறப்பு தரிசனம், மலை உச்சியில் 2668 அடி உயரத்தில் மகா தீபம் ஏற்றும் நிகழ்வு குறிப்பிடத்தக்கது என்று டாக்டர் சாய் பிரசன்னா விளக்கினார். இவர் திருவண்ணாமலை ரோட்டரி சங்க உறுப்பினர். இந்த நிகழ்வுக்கு ஏற்பாடு செய்த குழுவிலும் இடம்பெற்றுள்ளார்.

நிகழ்ச்சியின் சிறப்பு அம்சம் என்னவெனில் PRIP பானர்ஜி, DGs பழனி, நந்தகுமார், சௌதுரி, ராஜ சேகர் ரெட்டி, PDGs ராஜ சேகர், ஸ்ரீனிவாசன் மற்றும் ஆறுமுக பாண்டியன் ஆகியோருடன் நடந்த கலந்துரையாடல்தான். உங்கள் தலைமையின் முக்கியமான பகுதி என்னவென்றால், இப்போது இருப்பதைவிட உங்கள் மாவட்டத்தை வலுவானதாக விட்டுச் செல்வது தான் என்றார் பானர்ஜி. நிறுவனத்தின் நல்ல எதிர்காலத்துக்காக நீங்கள், உங்கள் ஆண்டைத் தாண்டி உழைப்பை செலுத்துங்கள் என்றும் பானர்ஜி அறிவுரை கூறினார்.

**இடமிருந்து:** *ராபர்ட் ஆலன் சங்கர், நிகழ்ச்சி தலைவர்* P T L *சங்கர்,* DGs B *இளங்குமரன்,* J K N *பழனி,* PDG *அபிராமி ராமநாதன்,* PRIP *கல்யாண் பானர்ஜி,* DGs *துஷ்யந்த் சௌத்ரி, ராஜசேகர் ரெட்டி,* PDGs *ஆறுமுகபாண்டியன், ராஜசேகர் ஸ்ரீனிவாசன் மற்றும்* DG N *நந்தகுமார்.*



சௌத்ரி மேலும் கூறுகையில், நான், நந்தகுமார், ராஜசேகர் மூவரும் ரோட்ராக்டர்களாக இருந்து DRRகளாக உருவெடுத்து இப்போது DGகளாக இருக்கிறோம். ரோட்ராக்டதான் அமைப்பின் எதிர்காலம் என்பதற்கு நாங்கள் சிறந்த உதாரணம் என்றும் குறிப்பிட்டார். உங்களால் மட்டும் ஒரு வருடத்தில் எந்த சாதனையும் நிகழ்த்த முடியாது. உங்கள் நிலை மற்றும் உங்கள் ஆண்டுக்குப் பிறகும் என எண்ணிப்பார்க்க வேண்டும். உள்வரும் தலைவர்களுக்கு எந்த வகையில் உதவ முடியும் என்று நீங்கள் சிந்திக்க வேண்டும். ஒரு சங்கம் என்பது ரோட்டரியின் ஒரு பிரிவாகும் என்று குறிப்பிட்ட நந்தகுமார், உறுப்பினர்களை சேவையில் ஈடுபடுத்தி அவர்கள் வளர்த்தெடுப்பதும், பாதுகாப்பதும் எவ்வளவு முக்கியம் என்பதையும் விவரித்தார். நாம் அதைச் செய்யா விட்டால், அவர்கள் நம்மைவிட்டுச் சென்றுவிடுவார்கள் என்றார்.

இந்த நிகழ்வின் போது பல்வேறு மாவட்டச் சங்கங்கள் கொடிகளை பரிமாறிக் கொண்டன. துணை சங்கங்கள் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன. சில திட்டங்களும் உருப்பெற்றன. இறுதியில் நிகழ்வுக்குழு தலைவர் P T L சங்கர் நன்றி கூறினார்.■

# ஆலப்பி சங்கம், மீன் தொட்டி மற்றும் வீட்டை நன்கொடையாக வழங்குகிறது

V முத்துகுமரன்



பயோ ஃப்ளோக் தொழில் நுட்பத்தால் தயாரிக்கப்பட்ட மீன் தொட்டியை RC ஆலப்பி ஈஸ்ட் ஒரு பயனாளியிற்கு அளித்துள்ளது.

RC ஆலப்பி ஈஸ்ட், RID 3211, நோயால் ஓய்வு பெற்ற மோட்டார் மெக்கானிக் மற்றும் பிளம்பர் விஜய் லால் (68) என்பவருக்கு பயோஃப்ளோக் தொழில்நுட்பத்தில் செய்யப் பட்ட ரூ.1.5 லட்சம் மதிப் பிலான 22,000 லிட்டர் அளவு கொண்ட மீன் தொட்டியை நன்கொடையாக வழங்கியது. இப்போது அவரும் அவரது மனைவியும் மீன் வளர்ப்பை மேற்கொண்டு நிலையான வருமானம் ஈட்ட முடியும் என்கிறார் சங்கத்தலைவர் கோபால் கிரீசன். சுமார் 100 மீன்களை மட்டுமே வளர்க்கும் சாதாரண மீன் தொட்டியைப் போல் அல்லாமல், பயோ ஃப்ளோக் தொழில்நுட்பம் ஒரே நேரத்தில் 1,000 மீன்களை ஒரே தொட்டியில் வளர்த்து ஆறு மாதங்களில் வளமான பெருக்கத்தை பெற உதவுகிறது, என்றார். தொட்டியுடன், மீன்கள், மீன் உணவுகள், ஏரேட்டர்கள் மற்றும் பயோஃப்ளோக் தொட்டியின் சுகாதாரத்தைப் பேணுவதற்கான இதர உபகரணங்களும் தம்பதி யினருக்கு வழங்கப்பட்டன.

பயோஃப்ளோக் தொழில் நுட்பம் பாக்டீரியா மற்றும் பாசிகளின் வளர்ச்சிக்கு உதவும் ஏரேட்டர்களைப் பயன்படுத்து கிறது. பாக்டீரியா மீன் கழிவுகளை (அம்மோனியா) நைட்ரேட்டாக மாற்றுகிறது, இது மீன்களுக்கு வளமான உணவான பாசிகளால் உட்கொள்ளப்படுகிறது.

### ப்ராஜெக்ட் சினேகவீடு

ரூ.16 லட்சம் மதிப்பிலான மூன்று சென்ட் நிலத்தில் புதிதாக கட்டப்பட்ட வீடு மாற்றுத் திறனாளியின் 5 பேர் கொண்ட குடும்பத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. ஆலப்புழா நகராட்சி தலைவி சவுமியா ராஜ் இல்லத்தை திறந்து வைத்தார்.

ஆலப்புழா அருகே புன்னப் பராவில் உள்ள சாகரா கூட்டுறவு



*ஆலப்புழா நகராட்சி தலைவர் சௌமியா ராஜ் முன்னிலையில் சங்கத்தலைவர் கோபால் கிரீசன் புதிய வீட்டின் சாவியை ஒரு பெண்ணிடம் வழங்குகிறார்.*

மருத்துவமனைக்கு, ஏழை நோயாளிகளுக்கு மானியத்தில் சிகிச்சை அளிக்க டயாலிசிஸ் கருவி (ரூ.6.6 லட்சம்) வழங்கப் பட்டது. “கடந்த ஆண்டு நாங்கள் இதுபோன்ற இரண்டு கருவிகளை (ரூ.13 லட்சத்திற்கும் மேல்) நன்கொடையாக வழங்கினோம், மேலும் CSR மானியங்கள் மூலம் இந்தத் திட்டத்தைத் தொடர்கிறோம்,” என்கிறார் கிரீசன். ஆலப்புழா மாவட்ட ஆட்சியர் கிருஷ்ண தேஜா இந்த வசதியை திறந்து வைத்தார் மற்றும் DG K பாபுமோன் மருத்துவ மனையில் கூட்டத்தில் உரை யாற்றினார்.

சங்கத்தின் 86 உறுப் பினர்களும் பலமுறை பால் ஹாரிஸ் ஃபெலோக்கள் மற்றும் ஆண்டின் தொடக்கத்தில், ஒவ்வொரு உறுப்பினரிடமிருந்தும் வருடாந்திர கார்பஸை உருவாக்க ரூ.15,000 வசூலிக்கிறோம். மீன் தொட்டி மற்றும் வீடுகள் கட்டி கொடுப்பது போன்ற நன்கொடைகள் உறுப்பினர் பங்களிப்புகள் மூலம் செய்யப்படுகின்றன, டயாலிசிஸ் போன்ற பெரிய திட்டங்களுக்கு நாங்கள் CSR மானியங்களை நம்பியுள்ளோம்’’ என்று கிரீசன் கூறுகிறார்.■

---

Rotary PEOPLE OF ACTION

# சுந்தரவனக் காடுகளுக்குக் குடிநீர் வசதி

**ரோட்டரி செய்திக் குழு**

சுந்தரவனப் பகுதிகளில் உள்ள நான்கு கிராமங்களைச் சேர்ந்த 10,000க்கும் மேற்பட்டோர் இப்போது பாதுகாப்பான குடிநீர் பெறுகிறார்கள். இதற்குக் காரணம், சுஷீல் அகர்வால் தலைமையில் RC கல்கத்தா நியூ அலிப்பூர், RID 3291, நிறுவியுள்ள நீர்த் தூய்மைப்படுத்திகள்தான். இந்தக் குக்கிராமங்களில் உள்ள நீர்நிலைகளில் நிறையத் தண்ணீர் உள்ளது, ஆனால், அதைக் குடிப்பது பாதுகாப்பாக இல்லை’’ என்றார் அகர்வால். நீரால் பரவும் நோய்களால் குழந்தைகளும் முதியவர்களும் அடிக்கடி நோய்வாய்ப்படுவார்கள் என்று தொடர்ந்து சொல்கிறார் இவர்.




இந்த ரோட்டரி ஆண்டின் தொடக்கத் திலிருந்து இந்தச் சங்கம் படிப்படியான முறையில் கிராமங்களில் தூய்மைப்படுத்தி களை நிறுவத் தொடங்கியது. இந்தக் கருவிகள் டாடா கெமிக்கல்ஸ் நிறுவனத்திடமிருந்து தலா ரூ.5 லட்சம் மானிய விலையில் பெறப்பட்டன, இந்த நிதி சங்க உறுப்பினர்களிடமிருந்து திரட்டப் பட்டது. நீர்த் தூய்மைப்படுத்திகளை நிறுவுவதற்கான இடங்களை அடையாளம் காண RCCகள் உதவின, இந்த அமைப்புகளை இயக்குதல், பராமரித்தலைக் கவனித்துக் கொள்ளப் பெண் உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.■

# உலகத்தில் நம்பிக்கையை உருவாக்குங்கள்: ரோட்டரி கருப்பொருள் 2023–24

எடெல்கா லெஹோச்ஜ்கி




RIPE *கார்டன் மெக்கினல்லி*

ஃப்ளோரிடாவில் உள்ள ஓர்லாண்டோ-வில் நடைபெற்ற 2023 பன்னாட்டுச் சந்திப்பின்போது, உள்வரும் மாவட்ட ஆளுநர்களிடம் பேசிய RIPE கார்டன் மெக்கினல்லி, உலகின் கவனத்தைப் பெற வேண்டும், நம்முடைய இப்போதைய எதிர்பார்ப்புகளை மிகவும் தாண்டிச் செல்லும் சாத்தியங்களை நோக்கிய பாதையை நோக்கி நடந்து வழிகாட்ட வேண்டும் என்று உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டார்.

RC சவுத் க்வீன்ஸ்ஃபெர்ரி, ஸ்காட்லாந்து, உறுப்பினரான மெக்கினல்லி, ஜனவரி 9 அன்று நடைபெற்ற சந்திப்பின்போது 2023–24 தலைமைக் கருப்பொருளான உலகத்தில் நம்பிக்கையை உருவாக்குங்கள், என்பதை வெளிப் படுத்தினார். பிரச்சனைகளைச் சந்திக்கும் நாடுகளில் அமைதியை முன்னிறுத்த வேண்டும், முரணால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ வேண்டும், முந்தைய தலைவர்கள் தொடங்கிய முன்னெடுப்புகளைத் தொடர்ந்து அதே சுறுசுறுப்புடன் நடத்தவேண்டும் என்று அவர் உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டார். “நம்முடைய இலக்கு, அமைதியை மீட்டமைப்பது, அழிக்கும் முரண்களில் இருந்து மீள்வதற்கு உலகுக்கு உதவுவது, அதன்மூலம், நமக்கு நாமே நீடித்த மாற்றத்தைப் பெற உதவுவது” என்றார் அவர்.

### அமைதியை முன்னிறுத்துதல்

உலகில் நம்பிக்கையைக் கொண்டு வருவதற்குக் குறிப்பிடக்கூடிய ஒரு வழி, அமைதியை மேலும் மேலும் வலியுறுத்துதல் என்றார் மெக்கினல்லி. சென்ற ஆண்டு உக்ரேனை ரஷ்யா ஆக்கிரமித்த பிறகு, உக்ரைன் மக்களுக்கு ஆதரவு அளிப்பதற்கு ரோட்டரியன்கள் எடுத்துள்ள நடவடிக்கைகளை அவர் சுட்டிக்காண்பித்தார். ரோட்டரி மனிதத்தன்மை நிவாரணப் பணிகளுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளது, அதன்மூலம் இன்னும் பல உக்ரைன் உறுப்பினர்களை ஈர்த்துள்ளது. ஆனால், உண்மையான நிவாரணம் உக்ரைனில் மட்டுமில்லை, யேமனில், ஆஃப்கானிஸ்தானில், சிரியாவில், உலகெங்கும் இன்னும் பல இடங்களில். அமைதி இல்லாமல் கிடைக்காது “அமைதி என்கிற மண்ணில்தான் நம்பிக்கை வேரூன்றுகிறது” என்றார் அவர்.

முந்தைய தலைவர்களுடைய பணியைத் தொடரவேண்டும் என்று ரோட்டரியன்களைக் கேட்டுக் கொண்டார். 2020–21 தலைவர் சேகர் மேத்தா தொடங்கிய பெண்களுக்கு ஆற்றல் அளிக்கும் முன்னெடுப்பைத் தொடர்வதாகவும், ரோட்டரியில் எங்கும் பன்முகத்தன்மை, சமநிலை மற்றும் உள்ளடக்கத்தின் வலியுறுத்தலைத் தொடர்வதாகவும் அவர் உறுதியளித்தார். ரோட்டரி இளம்பிள்ளைவாதத்தில் தொடர்ந்து கவனம் செலுத்தி வருவதன் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காண்பிக்கும் சமீபத்திய நிகழ்ச்சிகளையும் அவர் குறிப்பிட்டார். முந்தைய ஆண்டில், இளம்பிள்ளைவாதச் சூழல்கள் உலகெங்கும் பல இடங்களில் உருவாகியுள்ளன. அதனால், இந்த நோய்க்கு எதிரான போரை ரோட்டரி வழிநடத்தவேண்டியது முன்பு எப்போதையும் விட முக்கியமாகிறது.

இதைச் செய்ய, ஒவ்வோர் ஆண்டும் குறைந்தது $50 மில்லியன் திரட்டுவதை ரோட்டரி தொடரவேண்டும், அப்போது

தான் பில் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை வழங்கும் 2-க்கு-1 நிதிப் பொருத்தத்தை நாம் முழுமையாகப் பெற இயலும் என்றார் RIPE. தற்போது 12 உறுப்பினர்களில் சுமார் ஒருவர்தான் இளம்பிள்ளைவாதத்தை நீக்கும் பரப்புரைக்கு வழங்குகிறார், ஒவ்வோர் ஆண்டும் 5 சங்கங்களில் ஒன்றுக்கும் குறைவாகதான் இதற்கு நன்கொடையளிக்கின்றன. இளம்பிள்ளைவாதம் இல்லாத உலகம் என்கிற ரோட்டரியின் தொலைநோக்குப் பார்வையை உண்மையாக்க உதவவேண்டும் என்று தங்களுடைய சங்கங்களில் ஒரு புதிய அவசர உணர்வை உருவாக்குவதற்கு ஆதரவு தாருங்கள் என்று அவர் DGEக்களைக் கேட்டுக் கொண்டார்.

### மன நலனில் கவனம்

கோவிட் நோய்ப்பரவலால் தீவிரமடைந்துள்ள நெருக் கடியாகிய மன நலச் சவால்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு ரோட்டரியன்கள் நம்பிக்கை அளிக்கவேண்டும் என்றார் மெக்கினல்லி. பலர் குடும்ப உறுப்பினர்களை இழந்துள் ளார்கள், இன்னும் பலர் தங்கள் சமூக வலைப்பின்னல்கள் பிடுங்கப்பட்டிருப்பதைக் காண்கிறார்கள். இதனால், உலகெங்கும் பலர் மனநலப் பிரச்சனைகளைச் சந்திக்கிறார்கள். எனினும், உதவியை நாடுவது பல நேரங்களில் பலமின்மையின் அடையாளமாகக் காணப்படுகிறது. அடுத்த ஆண்டும் அதன்பிறகும் மன நலச் சேவைகளை மேம்படுத்த ரோட்டரி பணியாற்றும் என்று அவர் தொடர்ந்து சொன்னார்.

தொடர்ச்சி மற்றும் புதுமைச் சிந்தனை ஆகியவற்றினிடையில் மிகச் சிறந்த சமநிலையாகத் தான் கருதுவதை விவரித்து மெக்கினல்லி தன்னுடைய பேச்சை நிறைவுசெய்தார்.

©Rotary.org

---

Rotary PEOPLE OF ACTION

# ரூர்கேலா-வில் பல மாவட்ட DEI கருத்தரங்கம்

ரோட்டரி செய்திகள் குழு

RC ரூர்கேலா ஸ்டீல் சிட்டி, RID 3261, நடத்திய DEI (பன்முகத்தன்மை, சமநிலை மற்றும் உள்ளடக்குதல்) பற்றி பல மாவட்டக் கருத்தரங்கில் பேசிய DG ஷஷாங்க் ரஸ்தோகி, DEI கொள்கைகள் ரோட்டரியின் வளர்ச்சிக்கு முக்கியம் என்பதால் எல்லாச் சங்கங்களும் அவற்றைப் பின்பற்றவேண்டும் என்றார்.

RID 3291ஐச் சேர்ந்த PDG ஷ்யாமாஸ்ரீ சென் DEI கொள்கைகளின் தொடக்கத்தைப் பற்றிப் பேசினார். மாவட்ட DEI தலைவர் Rtn அஞ்சனா மைத்ரா, DEIல் உள்ள மூன்று சொற்களின் பொருளையும் விளக்கினார், “RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸின் தொலை நோக்குப்படி” ரோட்டரி இன்னும் பன்முகத்தன்மையுடன், இன்னும் சமநிலையுடன், இன்னும் உள்ளடக்குவதாக ஆகவேண்டிய தேவையை வலியுறுத்தினார்.

“DEIபற்றிய தவறான சிந்தனை களைத் தெளிவாக்குதல்”பற்றிய நிகழ்ச்சி ஒன்றை PDG F C மொஹந்தி வழிநடத்தினார். மாற்றுத் திறனாளி உறுப்பினர் Rtn அர்க்யா குஹா



Rtn *அர்க்யா குஹா கருத்தரங்கில் பேசுகிறார். உடன்* RC *ரூர்கேலா ஸ்டீல் சிட்டி செயலர் பியு குஹா (இடதில்) மற்றும்* PDG *ஷ்யாமாஸ்ரீ சென் அவர்களும் உள்ளனர்.*

மாற்றுத் திறனாளிகள் சந்திக்கும் சவால்களைப்பற்றிப் பேசினார். DEI கருப்பொருளை மனத்தில் கொண்டு, “ஹோம் அன்ட் ஹோப்” என்ற மாற்றுத் திறனாளிக் குழந்தைகளுக்கான அமைப்பின் மாணவர்கள் செய்த வரவேற்புப் பொதிகள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றோருக்கு வழங்கப்பட்டன. இந்த மாவட்டத்திலிருந்து சுமார் 100 ரோட்டரியன்கள் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டார்கள். இந்தச் சந்திப்புக்கு RC ரூர்கேலா ஸ்டீல் சிட்டி துணைத் தலைவர் சந்தியா ராணி பரல் தலைமை தாங்கினார்.■

# இந்திய ராணுவத்தினருக்கான ரோட்டரி மாரத்தான்

V முத்துகுமரன்

1971ம் ஆண்டு பாகிஸ்தானுடனான போரில் இந்தியா வெற்றிபெற்று வங்கதேசம் உருவாக வழிவகுத்த வெற்றிதினத்தை (விஜய் திவஸ்) நினைவுபடுத்தும் வகையில் டிசம்பர் 16ம் தேதி இந்திய ராணுவத்திற்கான மாரத்தானிற்கு ரோட்டரி மாவட்டம் 3232 ஏற்பாடு செய்திருந்தது. 13 நாள் நடந்த அந்தப் போரில் 93,000 பாகிஸ்தானிய வீரர்கள் இந்திய ராணுவத்திடம் சரணடைந்தனர். தீரத்துடன் போராடி வெற்றிபெற்ற நமது வீரர்களின் வீரம் பற்றி இளைஞர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், முதன் முறையாக இந்திய ராணுவத்திற்காக மாரத்தான் ஓட்டத்தை நடத்தினோம் என்றார் DG N நந்தகுமார்.

முதல் முறை நடந்த 3.5/6 கி.மீ. மாரத்தான் ஓட்டத்தில் அதிகாலையில், 1,500 ராணுவத்தினர், ரோட்டேரியன்கள், ரோட்ராக்டர்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள் என 3,500 பேர், 60 பைக்குகள், 100 சைக்கிள் ஓட்டுநர்கள், ரோட்டரி டீ ஷர்ட்டுகளை அணிந்து கொண்டு நடை, ஓட்டம் மற்றும் வாகனங்களில் ராணுவத்தின் கோல்ஃப் மைதானத்திலிருந்து தீவுத்திடல் வரை சென்றனர்.

தட்சிண பாரதத்தின் ஏரியா ஜெனரல் ஆபீஸர் கமாண்டிங் Lt Gen A அருண், DG நந்தகுமார் இருவரும் சேர்ந்து கொடியசைத்து, மாரத்தானை துவக்கி வைத்தனர். 50 ரோட்டரி சங்கங்கள், ராணுவம் மற்றும் நிகழ்ச்சிக்கு ஆதரவு அளித்த "மொபிஸ் இந்தியா" அறக்கட்டளை ஆகியவற்றின் ஒத்துழைப்பிலேயே இது சாத்தியமானது. RID 3232 இந்திய ராணுவத்தினருக்கான இந்த மாரத்தான் ஓட்டத்தை இனி ஒவ்வொரு ஆண்டும் நடத்த திட்டமிட்டுள்ளோம் என்றார் DG நந்தகுமார்.

### ரோட்டரிக்கு நன்றி

கடந்த இரண்டு வருடங்களாக நான் சென்னையில் இருக்கிறேன். மாவட்ட ரோட்டரி சங்கங்கள் எங்களுடன் நின்று ராணுவத்தினருக்கும், முன்னாள் ராணுவத்தினருக்கும் உணர்வுபூர்வமாக ஆதரவு அளித்துவருவதற்காக பலமுறை ரோட்டரிக்கு நன்றி தெரிவித்துள்ளேன் என்றார் Lt.Gen அருண்.

சென்னை கேலக்ஸி ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்தவரும், மாவட்ட ஒலிம்பியாட் மற்றும் மராத்தான் தலைவருமான விநோத் நாயர், இன்று நாமும் நமது குடும்பத்தினரும் பாதுகாப்பாக இருக்கிறோம் என்றால், அதற்கு நமது ராணுவத்தினரின் துணிச்சலான செயல்பாடுகளே

*DG N நந்தகுமார் மற்றும் தட்சிண பாரதத்தின் ஏரியா ஜெனரல் கமாண்டிங் ஆபிஸர் Lt Gen A அருண் மாரத்தானை துவக்கி வைக்கின்றனர். உடன் கணபதி சுரேஷ், சுமேதா நந்தகுமார், நிகழ்ச்சி தலைவர் வினோத் நாயர் மற்றும் PDG G சந்திரமோகன் ஆகியோரும் உள்ளனர்.*



காரணம். இதற்காக இந்திய ராணுவத்தினருக்கு நாம் தலைவணங்க கடமைப்பட்டுள்ளோம் என்றார். 100 சங்கங்களைச் சேர்ந்த 2,200-க்கும் மேலான ரோட்ராக்டர்கள் இந்த மாரத்தானில் பங்கேற்றனர்.

1971 ஆண்டு நடைபெற்ற போரில் வீரமரணம் அடைந்த Lt.Col A O அலெக்சாண்டரின் மனைவி 88 வயதான லலிதா, கேரள மாநிலம், கோட்டயத்திலிருந்து ரோட்டரியின் இந்த மாரத்தான் ஓட்டத்தில் பங்கேற்க வந்திருந்தார்.

இந்த ஓட்டத்தில் பங்கேற்ற அனைவருக்கும் நினைவுப்பதக்கம் வழங்கப்பட்டது. மாரத்தான் முடிந்ததும் அவர்களுக்கு காலை உணவும் வழங்கப்பட்டது. ராணுவத்தின் பேண்ட் குழுவினர் இசைக்கு ஏற்ப மெட்ராஸ் மவுன்ட் ரோட்டரி சங்கத்தின் ஜும்பா பயிற்சியாளர் தீபஸ்ரீ நடனமாடினார். அவரை பின் பற்றி பார்வையாளர்ளுடம் நடன மாடினார்கள். முன்னதாக யோகா பயிற்சியாளர் நிதி சர்மா, எளிய சில பயிற்சிகளை செய்துகாட்டினார். PDGs ISAK நாஸர், G சந்திரமோகன் மற்றும் முன்னாள் DRFC M அம்பலவாணன் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.■



புகைப்படங்கள் : V முத்துகுமரன்

# பிரவசி பாரதிய விருது பெறும் இலங்கை ரோட்டரியன்

ரோட்டரி செய்திக் குழு

1974லிருந்து RC கொழும்பு, இலங்கை, உறுப்பினராக உள்ள குமார் நடேசன் அவர்களை இந்தியாவின் பிரவசி பாரதிய சம்மான் விருதுக்குத் தேர்ந்தெடுத்துள்ளது GoI.

92 ஆண்டுகளாக இயங்கி வருகிற, இலங்கையில் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸால் பதிப்பிக்கப்படுகிற, மிகப் பெரிய விற்பனை கொண்ட தமிழ் நாளிதழான வீரகேசரியின் மேலாண்மை இயக்குநரான நடேசன் இலங்கை இதழ் கல்விக் கழகத் தலைவராகச் சேவையாற்றுகிறார், இலங்கையின் செய்தித்தாள் சமூகத்தின் பிரதிநிதியாக உள்ளார். அத்துடன், இவர் இலங்கை இதழ் புகார்கள் ஆணையத்தின் தலைவராகவும், இந்தியாவைச் சேர்ந்த மக்களின் பன்னாட்டு அமைப்புக்குத் (இலங்கை) தலைவராகவும் செயல்படுகிறார்.


*(இடமிருந்து) குமார் நடேசன், PRIP K R ரவீந்திரன், இலங்கையின் அமெரிக்க தூதர் அலைனா டெப்லிட்ஸ், PRIP மார்க் மலோனி மற்றும் அவர் மனைவி கேய்.*

இந்த விருது, இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் தங்களுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட துறை/தொழிலில் தனித்துவமான மற்றும் தகுதி சார்ந்த பங்களிப்புகளைச் செய்துள்ள மக்களைப் பெருமைப்படுத்துவதற்கு இந்தியக் குடியரசுத் தலைவரால் வழங்கப்படுகிறது.

RIன் "தனக்குமேல் சேவை" விருதைப் பெற்றுள்ள நடேசன் RC கொழும்பு-வின் சமூக சேவைத் திட்டங்களில் தீவிரமாகப் பங்குபெற்றுள்ளார்.■

# எத்தியோப்பியா குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சை

ரோட்டரி செய்திக் குழு

RC பெங்களூர் மிட் டவுன் மற்றும் RI மாவட்டம் 3190ன் நீடி ஹார்ட் ஃபவுண்டேஷன் (RNHF) உதவியால், பிறவி இதய நோயால் (CHD) பாதிக்கப் பட்ட எத்தியோப்பியாவைச் சேர்ந்த நான்கு குழந்தைகள் பெங்களூருவில் உள்ள ஜெயதேவா மருத்துவமனையில் வெற்றிகரமாக சிகிச்சை பெற்றனர். அந்த மருத்துவமனையில் திறந்த இதய அறுவை சிகிச்சைக்காக அந்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட 20 குழந்தைகளில் முதல் தொகுதி அவர்கள். மீதமுள்ள நோயாளிகள் அடுத்த சில மாதங்களில் நான்கு தொகுதிகளாக வருவார்கள் என்று சங்கத்தலைவர் அதுல் கௌஷல் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு, அப்போதைய RI தலைவர் சேகர் மேத்தா தனது ஆப்பிரிக்கா சுற்று பயணத்தின் போது எத்தியோப்பியா பிரதமர் மற்றும் ஜனாதிபதியை சந்தித்து, ரோட்டரி இந்தியா CHD உள்ள 100 எத்தியோப்பியன் குழந்தை களுக்கு இந்தியாவில் இதய அறுவை சிகிச்சை செய்யும் என்று உறுதியளித்த போது இது தொடங்கியது. எத்தியோப்பியாவின் ரோட்டேரியன்கள் குழந்தைகளையும் அவர்களின் பராமரிப்பாளர்களையும் இந்தியாவிற்கு அழைத்து வர அரசாங்கம் மற்றும் எத்தியோப்பியன் ஏர்லைன்ஸுடன் ஒரு கூட்டுப் பணியை மேற்கொண்டனர். குழந்தைகள், அவர்களது பெற்றோருடன், அடிஸ் அபாபாவில் இருந்து பெங்களூரு வந்து செல்ல விமான நிறுவனங்களால் இலவசமாக பயணித்தனர் என்று RNHFன் நிர்வாக அறங்காவலர் PDG H ராஜேந்திர ராய் கூறினார்.

அறுவை சிகிச்சைகளை வெற்றி கரமாகச் செய்த அறக்கட்டளையின் இயக்குநர் Dr C N மஞ்சுநாத், அறுவை சிகிச்சை நிபுணர்கள் மற்றும் நன்கொடையாளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

2001 முதல், இந்த மாவட்டம் 10,000 இதய அறுவை சிகிச்சை களுக்கு நிதியுதவி செய்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் சங்கம் ஒரு லட்சம் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கிறது. "இந்த ஆண்டு இதயம், உதடு பிளவு உள்ளிட்ட பிறவி குறைபாடுகளை சரிசெய்யும் அறுவை சிகிச்சை களுக்கு நாங்கள் முக்கியத்துவம் அளித்துள்ளோம்'' என்று கௌஷல் கூறினார்.

*இதய அறுவை சிகிச்சை செய்யப்பட்ட எத்தியோப்பிய குழந்தை மற்றும் அவள் தாயுடன் PRIP சேகர் மேத்தா, மற்றும் (இடமிருந்து) F R சிங்வி, PDG H ராஜேந்திர ராய், நீடி ஹார்ட் ஃபவுண்டேஷன் இயக்குனர் Dr C N மஞ்சுநாத், PDG ஃபசல் மஹ்மூத், பிமல் தேசாய் RC பெங்களூர் மிட்டவுன் தலைவர் அதுல் கௌஷல் ஜெயதேவா மருத்துவமனையில்.*



**உக்ரைனுக்கு ஆம்புலன்ஸ்கள்**
RIDs 3170 மற்றும் 3182 மற்றும் RID 6980, USA ஆகியவற்றுடன் இணைந்து, சமீபத்தில் $100,000 கூட்டுப் பேரிடர் பதில் மானியத்தை மைகோலைவ்,டினிப்ரோ மற்றும் நோவோலெக்ஸாண்ட்ரிவ் ஆகிய இடங்களில் உள்ள உக்ரைன் அரசு மருத்துவமனைகளுக்கு முன்று ஆம்புலன்ஸ்களை வாங்க வழங்கியது. அந்த மருத்துவமனைகளின் ஆம்புலன்ஸ்கள் போரினால் பழுதடைந்துள்ளன.

இந்தத் திட்டத்தைப் பற்றிப் பேசிய ராய், கடந்த ஜூன் மாதம் நான் ஹூஸ்டன் மாநாட்டில் இருந்து திரும்பியபோது, RC லேக் நோனா லஞ்ச், RID 6980, சேர்ந்த சஞ்சய் தேஷ்பாண்டே, மானியத் திட்டத்தைச் செயல்படுத்த எங்களின் உதவியைக் கேட்டார். மூன்று கவர்னர்கள் - ஃபசல் மஹ்மூத் (3190), கௌரிஷ் தோண்ட் (3170) மற்றும் ராமச்சந்திர மூர்த்தி (3182) ஆகியோர் உடனடியாக ஒப்புக் கொண்டனர். விண்ணப்பம் TRF அங்கீகரிக்கப்பட்டது மற்றும் திட்டம் செப்டம்பர்'22ல் நிறை வேற்றப்பட்டது. இந்த வாகனங்களை மருத்துவமனைகளில் கொண்டு சேர்க்க போலந்து-உக்ரைன் எல்லையில் உள்ள RID 2232 (உக்ரைன்)னிடம் ஒப்படைக்கப்பட்டது.

போரினால் பாதிக்கப்பட்ட நாட்டில் அவசரகால சுகாதாரப் போக்குவரத்தை வழங்க இப்போது ஆம்புலன்ஸ்கள் பயன் படுத்தப்படுகின்றன என்றார் ராய், கொடுக்கப்பட்ட அடுத்த நாளிலே ஆம்புலன்ஸ்களில் ஒன்று காயமடைந்த பெண்ணை மருத்துவ மனைக்கு கொண்டு செல்ல பயன் படுத்தப்பட்டது என்று கூறினார்.■



*உக்ரைன் மருத்துவமனையிற்கு அளிக்கப்பட்ட ஒரு ஆம்புலன்ஸ்.*

# RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி

**மிகப் பெரிய கொடையாளர் அங்கீகாரம்:** 10,000 மொத்த வழங்கலை எட்டியுள்ள அனைத்துத் தனி நபர்கள் அல்லது இணையர்களும் (பரிசு நியமித்தல் எப்படி இருந்தாலும்) ரோட்டரி அறக்கட்டளையால் மிகப் பெரிய கொடையாளராக அங்கீகரிக்கப்படுகிறார்கள். இந்த அங்கீகார நிலையைத் தனி நபர்/இணையர் பங்களிப்புகளால் மட்டும் தான் எட்ட இயலும், இன்னொரு தனி நபர், சங்கம், மாவட்டம் அல்லது வேறு எந்த அமைப்பின் பொருத்தும் பங்களிப்பால் அல்லது அங்கீகரிப்புப் புள்ளிகளால் எட்ட இயலாது. கொடையாளர்கள் ஒவ்வொரு புதிய அங்கீகார நிலையிலும் பரிசை நினைவூட்டும் வகையில் ஒரு படிகப் பொருள் மற்றும் ஊசியை(ஊசிகளை)ப் பெறுவார்கள். Major Donor அங்கீகாரப் பொருட்கள் இந்த நிலைகளில் வழங்குதலை நினைவூட்டுகின்றன:

**நிலை 1:** 10,000 முதல் 24,999; **நிலை 2:** 25,000 முதல் 49,999; **நிலை 3:** 50,000 முதல் 99,999; **நிலை 4:** 100,000 முதல் 249,999

Major Donor அங்கீகாரம் தானாகச் செயல்படுத்தப் படுவதில்லை. கொடையாளர்கள் இதற்கான படிவத்தை நிரப்பி, அதைப் பொறித்தல் குறிப்புகளுடன் கொடை யாளர் சேவைகள் குழு, RISAOக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அங்கீகாரங்கள் எவான்ஸ்டனில் செயல்படுத்தப்படு கின்றன, இவை கொடையாளர்களைச் சேர்வதற்கு 5 முதல் 6 வாரங்கள் ஆகும். மேலும் தகவல்களுக்கு, மது மம்கெயின் (*Madhu.Mamgain@rotary.org*) அல்லது மஞ்சு ஜோஷி (*Manju.Joshi@rotary.org*) ஆகியோரைத் தொடர்புகொள்ளுங்கள்.

**2022–23 ஆண்டு நிதிச் சவால்:** TRF விருதுகளுடன், 4, 5, 6 மற்றும் 7லிருந்து RRFCகள் தொடங்கியுள்ள ஆண்டு நிதிச்சவாலை நிறைவுசெய்தலின் மூலம் மாவட்டங்கள்/ சங்கங்கள்/தனிநபர்கள் இந்த ரோட்டரி ஆண்டில் தங்கள் முயற்சிகளுக்கு விருது பெற இன்னொரு வாய்ப்பைப் பெறலாம். இந்தச் சவால் ஏற்கெனவே செயலில் உள்ளது, APF சவாலின்கீழ் பல்வேறு விருதுகளுக்குத் தகுதி பெற உறுப்பினர்கள்/சங்கங்கள்/மாவட்டங்களுக்கு மார்ச் 31 வரை நேரம் உள்ளது. 1 ஜூலை 2022 முதல் ஆண்டு நிதிக்கு வழங்கப்பட்ட எல்லாப் பங்களிப்புகளும் இதற்குக் கருத்தில் கொள்ளப்படும்.

இந்த ஆண்டின் APF சவால் இந்த ஆண்டுக்கான உங்கள் ஆண்டு நிதி இலக்கை எட்டுவதற்கு உங்களுக்கு உதவுவதுடன், உங்கள் சங்கம் மற்றும் கொடையாளர் பங்கேற்பு விகிதங்களைப் பெருக்குவதற்கும் உங்களுக்கு உதவும்.

**சங்கம்/உறுப்பினர்கள் சார்பாக இணையத்தில் வழங்குங்கள்**
சங்க அலுவலர்கள் அனைவரும் தங்கள் சங்கம் மற்றும் சங்க உறுப்பினர்கள் சார்பாக இணையத்தில் கடன்/பற்று அட்டை மூலம் அல்லது இணைய வங்கிச் சேவையைப் பயன்படுத்திப் பங்களிக்கலாம். பங்களிப்புகள் செயல் முறைப்படுத்தப்படவும் பதிவு செய்யப்படவும் மிக விரைவான, பாதுகாப்பான வழி இதுதான். சங்கத் தலைவர் ஒருவர் இந்தத் தெரிவைப் பயன்படுத்தும் போது, பங்களிப்புப் பலன் தனிப் பட்ட உறுப்பினர் களுக்குச் சென்ற போதும், 80G ரசீது பணம் செலுத்தியவருடைய பெயரில் மட்டும் தான் உருவாக்கப்படும் (யாருடைய *My Rotary* உள்நுழைவு பயன்படுத்தப்பட்டதோ அவருடைய பெயரில்), தனிப்பட்ட உறுப்பினர்களின் பெயரில் உருவாக்கப்படாது.■

# Star Performers (Membership

| Membership Awards | Zone 4 | Zone 5 |
|---|---|---|
| Highest Membership Growth in Absolute Nos | Ajay Madan (RID 3080) | S Balaji (RID 2981) |
| Highest Membership Growth in %age | Ajay Madan (RID 3080) | Rajesh Subash (RID 3204) |
| Maximum New Club Formation | Ashok Agarwal (RID 3012) | J Sridhar (RID 3232) |
| Highest Women Membership Growth in %age | Parveen Jindal (RID 3090) | Rajesh Subash (RID 3204) |
| Highest Existing Membership Retention | Ajay Madan (RID 3080) | Rajesh Subash (RID 3204) |
| Highest New Member Retention | Sanjay Malviya (RID 3053) | Rajasekhar Srinivasan (RID 3201) |
| Highest New Rotaract Club Formation | Ajay Madan (RID 3080) | Rajasekhar Srinivasan (RID 3201) |
| Highest New Interact Club Formation | Parveen Jindal (RID 3090) | Jacintha Dharma (3212) |




*RID 3080 DG V P கல்டா விருது பெறுகிறார். இடமிருந்து: PRID கமல் சங்வி, RIPN ஸ்டிஃபனி அர்ச்சிக், RIDE அனிருதா ராய்சௌத்ரி, RID ட்ரூ கெஸ்லர், PRIP சேகர் மேத்தா, PDG மன்மோகன் சிங், RID மகேஷ் கோட்பாகி, RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் மற்றும் RID A S வெங்கடேஷ் ஆகியோர் உள்ளனர்.*

## நட்பான கிரிக்கெட் போட்டித் தொடர்

### ரோட்டரி செய்திகள் குழு



DG பல்வந்த் சிங் சிரானா தலைமையில் RID 3054 ஏற்பாடு செய்த உதிதா கிரிக்கெட் போட்டித் தொடரை RCகள் ஜெய்ப்பூர் மற்றும் பாபு நகர், RACகள் ஆர்யா காலேஜ் ஆஃப் எஞ்சினியரிங் மற்றும் IT ஜெய்ப்பூர் நடத்தின. 173 சங்கங்களைச் சேர்ந்த ரோட்டரியன்கள் இதில் பங்கேற்றார்கள். அகமதாபாத்தின் சுப்ரீம் சூப்பர் கிங் இந்தப் போட்டித் தொடரில் வென்றது, ஜெய்ப்பூரின் ராயல் ராக்கர் இரண்டாம் இடத்தைப் பிடித்தது.■

**கிரிக்கெட் போட்டியில் DG பல்வந்த் சிங் சிரானா.**

# Awards) — Zones 4, 5, 6 and 7

| Membership Awards | Zone 6 | Zone 7 |
|---|---|---|
| Highest Membership Growth in Absolute Nos | Sunil Phatak (RID 3261) | Pankaj Shah (RID 3131) |
| Highest Membership Growth in %age | Sunil Phatak (RID 3261) | Thirupathi Naidu (RID 3160) |
| Maximum New Club Formation | Santanu Kumar Pani (RID 3262) | Fazal Mahmood (RID 3190) |
| Highest Women Membership Growth in %age | Santanu Kumar Pani (RID 3262) | Thirupathi Naidu (RID 3160) |
| Highest Existing Membership Retention | Pratim Banerjee (RID 3250) | M G Ramachandra Murthy (RID 3182) |
| Highest New Member Retention | Santosh Prasad Rijal (RID 3292) | Thirupathi Naidu (RID 3160) |
| Highest New Rotaract Club Formation | Santosh Prasad Rijal (RID 3292) | K Prabhakar (RID 3150) |
| Highest New Interact Club Formation | Santanu Kumar Pani (RID 3262) | Fazal Mahmood (RID 3190) |




RID 3261 PDG *சுனில் ஃபதக்* PRIP *மேத்தா மற்றும்* RID A S *வெங்கடேஷ் ஆகியோரிடமிருந்து* RI *தலைவர் ஜோன்ஸ் மற்றும்* RID *மகேஷ் கோட்பாகி முன்னிலையில் விருது பெறுகிறார்.*




RID 2981 PDG S *பாலாஜி மற்றும் அவர் மனைவி ஜெயஸ்ரீ,* PRIP *மேத்தா,* RID *வெங்கடேஷ்,* RI *தலைவர் ஜோன்ஸ் மற்றும்* RID *கோட்பாகி ஆகியோருடன்.*

## US குழுவை நன்முறையில் வரவேற்ற RID 3120



PDG K K ஸ்ரீவஸ்தவா மற்றும் அவர் மனைவி கஞ்சன் அமெரிக்க மாரத்தான் பங்கேற்பாளர்களுடன்.

ஜனவரி 6 முதல் 20 வரை மனிதக் கடத்தல் விழிப்புணர்வை உண்டாக்குவதற்குத் தில்லியிலிருந்து கொல்கத்தா செல்லும் நம்பிக்கையை நோக்கி 2 மில்லியன் காலடிகள் என்ற மிகப் பெரிய 15 நாள் மாரத்தான் RIDகள் 3190, 3011, 3012, 3110, 3240, 3250 மற்றும் 3291ன் நடத்தப்பட்டது. இதில் பங்கேற்பதற்கு USலிருந்து சைமன் தலைமையில் வந்திருந்த 10 உறுப்பினர் குழுவை RI மாவட்டம் 3120 நன்முறையில் வரவேற்றது. PDG K K ஸ்ரீவத்ஸவா ரோட்டரியன்களுக்கு மாலை அணிவித்து, சங்கக் கொடிகளைப் பரிமாறிக்கொண்டார். ■

# ரோட்டரி ஆளுநர்



**V R முத்து**
சமையல் எண்ணெய் தயாரிப்பாளர்,
RC விருதுநகர், RID 3212

## முழுமையான சமூக வளர்ச்சியில் கவனம்

மீன்களை கொடுப்பதற்கு பதிலாக சமூகத்திற்கு மீன் பிடிப்பது எப்படி என்று கற்றுக்கொடுங்கள் என்கிறார் இரண்டாம் நிலை AKS உறுப்பினர் V R முத்து. அவர் கட்டணம் செலுத்துவதை ஜூனில் பூர்த்தி செய்கிறார். மாநிலத்தில் இரண்டாம் நிலை AKS உறுப்பினர் வரிசையில் சேர்ந்துள்ள மூன்றாவது ரோட்டேரியன் இவர். சமூக சேவையைவிட சமூக வளர்ச்சியில்தான் எனக்கு நம்பிக்கை அதிகம் என்கிறார் முத்து.

எனக்கு எண்ணிக்கையில் நம்பிக்கை இல்லை. உறுப் பினர்களின் சேர்க்கையை கூட்டுவதற்கு பதிலாக TRF பங்களிப்பை அதிகரிப்பதை நம்புகிறேன். அறக்கட்டளைக்கு வழங்குவதில் தான் நான் குறியாக இருக்கிறேன் என்கிறார். எனது TRF பங்களிப்பு இலக்கு 1.2 மில்லியன் டாலர். நான் நம்பிக்கையில் ஆர்வம் கொண்டவன். கோவிட் தொற்று நிர்வாகத்தில் இந்தியா முன்னணியில் உள்ளது. கோடிக்கணக்கான மக்களுக்கு இந்தியா தடுப்பூசி செலுத்தியுள்ளதுடன் சர்வதேச அளவில் பல நாடுகளுக்கு கோவிட் தடுப்பூசியை அனுப்பிவைத்துள்ளது.

“பெண் குழந்தைகளுக்கு ஆதரவு” என்பதுதான் எங்கள் மாவட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். பெண் குழந்தைகளை ஊக்குவிக்கும் வகையில் பள்ளி, கல்லூரி மாணவிகளுக்கு “யாதுமானவள்” என்னும் திட்டத்தை செயல்படுத்தியுள்ளோம்.

ஒவ்வொரு மாதமும் RYLA மூலம் மூன்று நாட்கள் நிகழ்ச்சிகளை நடத்தி இளைஞர்களை தொழில் முனை வோராக உருவாக்கி வருகிறோம் என்றார். 1981ம் ஆண்டு முத்து ரோட்டரியில் உறுப்பினராகச் சேர்ந்தார். எழுத்தறிவு இயக்கத்தின் தந்தை என்று சொல்லப்படும் முன்னாள் முதல்வர் காமராஜ் தான் இவரின் முன்னோடி.■



**V V பிரமோத் நாயனார்**
மருத்துவ தொழிநுட்பனர்,
RC பையனூர் மிட்டவுன், RID 3204

## பள்ளிக் குழந்தைகளுக்கு மெகா கண் மருத்துவ முகாம்

போலியோ ஒழிப்பு தொடர் நடவடிக்கை, நட்புறவு இவைதான் நான் 2000ம் ஆண்டில் ரோட்டரியில் சேர்ந்து துடிப்பாக செயல்பட காரணமாகும் என்கிறார் பிரமோத் நாயனார். PRIP ராஜேந்திர சாபூ தான் என்னை மிகவும் ஈர்த்தவர். அவரின் “Look Beyond Yourself” என்னும் புத்தகத்தில் இரண்டு தொகுப்புகளை நான் படித்தேன். அது என் மனதை தொட்டது என்கிறார் அவர். சிறப்பு முகாம்கள் மூலம் இதுவரை 180 பேருக்கு செயற்கை கால்களையும் 900 பேருக்கு சக்கர நாற்காலிகளையும் வழங்கியுள்ளோம். என்று அவர் கூறினார்.

ரோட்டரி மீது மக்களுக்கு இருக்கும் நல்லெண்ணத்தை உயர்த்தும் வகையில் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம், போதைப் பொருள்கள் ஒழிப்பை வலியுறுத்தி மிகப் பெரிய பேரணி நடத்தினோம். இதில் 5 லட்சம் பேர் கலந்துகொண்டனர். TRF பங்களிப்பாக 5,00,000 டாலர் நிதி வழங்க இலக்கு நிர்ணயித்துள்ளோம் என்கிறார்.

வயநாடு மாவட்டத்தில், கல்பெட்டா என்னுமிடத்தில் 34,000 டாலர் சர்வதேச நிதியுதவியுடன் 10 கருவிகளுடன் டயாலிசிஸ் மையம் ஏற்படுத்த திட்டமிட்டு வருகிறோம். கேரளத்தின் பகுதியில் ரோட்டரி மீதான மதிப்பை உயர்த்தும் வகையில் மேலும் சில திட்டங்களை செயல்படுத்தவும் முயன்று வருகிறோம் என்றார் அவர். மனைவி ஸ்ரீவித்யாவும் ரோட்டரி உறுப்பினர்.■

# களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்





**சஞ்சீவ் குமார் தாகுர்**
பிஸ்கட் தயாரிப்பாளர், RC முஸாஃபர்பூர், RID 3250

## பிகார், ஜார்க்கண்டில் ரோட்டரிக்கு சிறந்த வாய்ப்பு

நான் 1999ம் ஆண்டில் உறுப்பினரான போது நட்புறவையும், கூட்டுறவையும் தான் பார்த்தேன். ஆனால், போகப்போக சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட போலியோவை சரிப்படுத்தும் அறுவைச்சிகிச்சைகளில் ஈடுபாடுகாட்டினேன் என்கிறார் சஞ்சீவ்குமார் தாகுர்.

ரோட்டரி சங்க உறுப்பினர்கள் மற்றும் நண்பர்கள் கொடுத்த நன்கொடைகளைக் கொண்டு ஜனவரியில் தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப் பட்டது என்றார் தாகுர். கிராம மக்கள் பயன்பெறும் வகையில் சர்வதேச மானிய உதவி 1,00,000 டாலரில் மார்பக புற்றுநோய் கண்டறியும் நடமாடும் வாகனம் ஒன்றும், 120,000 டாலர் சர்வேதச நிதியுதவி மூலம் கண் பரிசோதனை செய்யும் நவீன நடமாடும் வாகனங்கள் இரண்டும் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்றார்.

பிகார் மற்றும் ஜார்க்கண்டில் உள்ள வருவாய் மாவட்டங்களில் ரோட்டரி இல்லாததால் இந்த பிராந்தியங்களில் நல்ல வளர்ச்சிக்கு வாய்ப்புள்ளது என்றார். ஆனால், இரண்டு முனைகளுக்கும் இடையில் உள்ள 1,500 கி.மீ. தொலைவு சமவெளிப்பகுதி என்பதால் சவால்கள் நிறைந்தது. TRF பங்களிப்பாக 4,00,000 டாலர் வசூலிக்க திட்டமிட்டுள்ளோம். எனது மனைவி பூனம் RID 325ன் இன்னர்வீல் சங்கத்தின் தலைவராக இருந்தவர். எனவே எங்கள் இருவருக்கும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினரின் தேவை என்ன? அதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது தெரியும்.■

**குஷனவா பாபி**
கதிரியக்க நிபுணர், RC பர்த்வான், RID 3240

## பன்முகத்தன்மை சங்கங்களை பலப்படுத்துகிறது

DEIன் பன்முகத்தன்மை, சமநிலை மற்றும் உள்ளடக்கம் ஆகியவைதான் இப்போது ரோட்டரியின் மூல மந்திரமாக உள்ளது. இதற்கு ஏற்றாற்போல் வங்காளம், வடகிழக்கு இந்தியாவை உள்ளடக்கிய பல்வேறு கலாசரங்கள், வாழ்க்கை முறையை கொண்டவர்கள் ரோட்டரியில் இணைந்தால் அது ரோட்டரி மீதான நல்லெண்ணத்தை உயர்த்தும் என்கிறார் குஷனவா பாபி.

1988ம் ஆண்டிலேயே அவர் ரோட்டரியில் சேர்ந்தாலும் 2,000ம் ஆண்டில் சங்க தலைவரானதிலிருந்து தான் துடிப்புடன் செயல்பட்டு வருகிறார். 2,000ம் ஆண்டின் முதல் பத்தாண்டில் எனது தொழில் வாழ்க்கையில் சிக்கல் ஏற்பட்டது. எனது தந்தையார் இறந்துபோனார். ரோட்டரி நண்பர்கள் மற்றும் ஆதரவாளர்கள் உதவியால் தனிப்பட்ட இழப்பிலிருந்து மீண்டு வந்தேன் என்கிறார் பாபி.

சமூக நலத்திட்டங்களை 64 மாவட்ட மானியங்கள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. இந்திய செஞ்சிலுவை சங்கத்தின் பர்த்வான் மற்றும் சிலிகுரி கிளைகளில் 120,000 டாலர் சர்வதேச மானிய உதவியுடன், தலா ஐந்து கருவிகளுடன் இரண்டு டயாலிசிஸ் மையங்கள் நிறுவப்பட உள்ளன என்றார் அவர். TRF பங்களிப்பாக 500,000 டாலர் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. RID 3240 உருவாகக் காரணமாக இருந்த மறைந்த PDG ரமேஷ் அகர்வால், எனது சொந்த ஊரில் உள்ள சங்கத்தைச் சேர்ந்த PDG சமீர் சௌத்ரி ஆகியோர் எனக்கு முன்மாதிரியாக இருந்தவர்கள் என்று அவர் கூறினார்.■

இசை & மெல்லிசை

# கவர்ச்சிக்குரல் மன்னன் ஹேமந்த் குமார்!

S R மது

ஹேமந்த் குமார், இந்தியா முழுவதும் லட்சக்கணக்கான ரசிகர்களை கட்டிப் போடும் மென்மையான, மயக்கும் குரலைக் கொண்டிருந்தார். மேற்கு வங்கத்தில் அவருக்கு என சிறப்பு கௌரவம் இருந்தது. அவரை கடவுளாகவே பலரும் கருதினர். கடவுள் பாடினால், ஹேமந்த் குமாரின் குரலில்தான் பாடுவார் என்றார் சலீல் சௌதுரி.

ஹேமந்த், ஹிந்தி மற்றும் பெங்காலி சினிமா உலகில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக கொடிகட்டி பறந்தார். அவர் ஒரு பாடகர் மட்டுமல்ல, சிறந்த இசையமைப்பாளர். இரண்டு மொழிகளிலும் சிறந்த பாடல்களை அவர் பாடியுள்ளார் அல்லது இசையமைத்துள்ளார். பாலிவுட் ஹீரோக்களான தேவ் ஆனந்த், குருத், விஸ்வஜித், தர்மேந்திரா மற்றும் பெங்காலி பட உலகின் உத்தம்குமார் உள்ளிட்டோர் சினிமா வாழ்க்கையில் உயருவதற்கு காரணமாக இருந்தார். இந்த காலகட்டத்தில் அவர் திரைப்படம் அல்லாத நூற்றுக்கணக்கான பாடல்களை பாடியுள்ளார். மும்பை, கொல்கத்தா மற்றும் வெளிநாடுகளிலும் இசை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு ரசிகர்கள் கூட்டத்தை ஈர்த்தவர். ரவீந்திர சங்கீதத்தின் சின்னமாக இருந்த அவர், அதற்காக ஒன்றன் பின் ஒன்றாக ஆல்பங்களை தயாரித்து புதுவாழ்வு கொடுத்தவர்.

இவையெல்லாம் போதாதென்று ஹிந்தி, பெங்காலி மொழிகளில் பல படங்களையும் தயாரித்தார். அவற்றில் பீஸ் ஸால் பாத் (1962), கோஹ்ரா (1964) மற்றும் காமோஷி (1968) ஆகியவை பாலிவுட்டில் பிரபலமான படங்கள்.

ஹேமந்த், 40 ஆண்டுகளில் செய்ய வேண்டிய பணிகளை 20 ஆண்டுகளில் செய்தார். அவரது பணிச்சுமைதான் பிற்காலத்தில் அவரை வெகுவாக பாதித்தது என்று அவரது மருத்துவர் ஒருமுறை கூறினார்.

ஹேமந்தின் தீவிர ரசிகர்களில் லதா மங்கேஷ்கரும் ஒருவர். ஹேமந்த் பாடும்போது, கோவிலில் சாது ஒருவர் மெய்மறந்து பஜனைப் பாடல்கள் பாடுவது போல் உள்ளது என்று லதா குறிப் பிட்டார். லதாவுடன் ஹேமந்த் ஒரு டஜனுக்கும் மேலான டூயட் பாடல்களை பாடியுள்ளார். இதற்கு மூன்று உதாரணங்கள் போதுமானது:

ஜர் தர்த் இஷ்க் ஜக்- அனார்கலி (1953). இந்த பாடலை எப்போது வேண்டுமானாலும் கேட்கலாம். இசை அமைப்பாளர் சி.ராமச்சந்திராவின் நேர்த்தியான இசையில் லதாவும் ஹேமந்தும் இந்த பாடலை மயக்கும் குரலில் பாடியுள்ளனர்.



அனார்கலி கதையை அடிப் படையாகக் கொண்டு ஆஸிஃப் முகல்-இ-ஆஸம் படத்தை தயாரித்தபோது அதற்கு இசையமைக்க நௌஷத் ஒப்பந்தம் செய்யப்பட்டார். அப்போது ஜக் தர்த் இஷ்க் ஜக் பாடலை மிஞ்சும் வகையில் எப்படி பாடுவது என்று ஹேமந்த் கவலைப்பட்டார்.

யாத் கியா தில் நே கஹா - படிடா, (1953): காதலை வெளிப்படுத்தும் இந்த பாடலை லதாவும் ஹேமந்தும் வசீகரமாகப் பாடி 1950-களின் காதல் கீதங்களில் ஒன்றாக இடம்பெறச் செய்தனர். இசையமைப்பாளர் சங்கர்-ஜெய்கிஷன்.

நைன்-சே-நைன்- ஜனக் ஜனக் பாயல் பஜே, (1955): லதாவும் ஹேமந்தும் இந்த பாடலை, மைசூரில் உள்ள பிருந்தாவன் தோட்டத்தில் அழகிய மலர் கூட்டங்கள் மற்றும் நீரூற்றுக்களின் பிரம்மாண்டமான காட்சிகளின் ஊடே மிகவும் இனிமையான குரலில் காதல் பாட்டை பாடியுள்ளனர். கோபி கிருஷ்ணா மற்றும் சந்தியாவின் நடனத்துடன் இந்த காட்சி படமாக்கப் பட்டது. இசை அமைப்பாளர், வசந்த் தேசாய்.

ஹேமந்தின் குரல் ஆழமாகவும் அதே சமயம் இனிமையாகவும் கணீரென்றும் இருப்பதை அவரது ரவீந்திர சங்கீதம் மற்றும் நாட்டுப்புற பாடல்களில் காணமுடியும். ஆனால், ஹேமந்த் எப்போதும் தமது பொன்னான குரலை கடவுளின் பரிசு என்று கூறிவந்ததாக பிஸ்வஜித் குறிப்பிடுகிறார்.



*'பீஸ் சால் பாத்' படத்திலிருந்து பிஸ்வஜித் மற்றும் வஹிதா ரெஹ்மானுடன் ஒரு பாடல் காட்சி.*

### ஹேமந்தின் தனிப்பாடல்கள்

- நா யே சாந்த் ஹோகா- ஷார்ட், 1952 (இசையமைப்பாளர் ஹேமந்த் குமார்).
- ஓ சந்தன் கா பல்னா - ஷபாப், 1954 (நௌஷத்)
- ஜானே வோ கைஸே லாக் தி- பியாஸா, 1957 (எஸ்.டி.பர்மன்.)
- ஹை அப்னா தில் டோ ஆவாரா- சால்வா சால், 1958, (எஸ்.டி.பர்மன்).
- யா தில் கி சுனோ துனியா வாலோ- அனுபமா, 1966. (ஹேமந்த்).
- தும் புகர் லோ தும்ஹரா இன்டேஸர் ஹை- காமோஷி, 1969. (ஹேமந்த்).

### ஆரம்பகால ஆண்டுகள்

ஹேமந்த் குமார், 1920 ம் ஆண்டு ஜூன் 16ம் தேதி வாராணசியில் பிறந்தார். அவருக்கு மூன்று சகோதரர்கள் மற்றும் ஒரு சகோதரியும் இருந்தனர். ஹேமந்த் சிறுவனாக இருந்த போது அவரது குடும்பத்தினர் கொல்கத்தாவுக்கு இடம்பெயர்ந்தனர். இளம் வயதிலேயே அவருக்கு இசையில் ஆர்வம் இருந்தது. 1933ம் ஆண்டு, 13 வயதில், அவர் அகில இந்திய வானொலியில் முதல் முதலாக பாடினார்.

அவர், ஜாதவ்பூர் பல்கலைக் கழகத்தில் பொறியியல் படிக்க முயன்றார். ஆனால், அவரது கவனம் படிப்பில் இல்லை. எனவே ஓராண்டுக்கு பிறகு அதை கைவிட்டார். இருவரை குருவாகக் கொண்டு இசை பயின்றார். பின்னர் பியாஸ்கானிடம், அவர் 1950 இல் இறக்கும் வரை ரவீந்திர சங்கீதம் பயின்றார். 1937ல் முதன்முதலாக "நீமை சன்யாஸ்" என்னும் பெங்காலி படத்திற்காக பின்னணி பாடினார். 1947 ஆம் ஆண்டு "அபியாத்ரி" என்னும் பெங்காலி படத்துக்கு இசையமைப்பாளராகவும் பணியாற்றினார்.

இந்திய வரலாற்றில் 1940கள் மிகவும் கொந்தளிப்பான காலமாக இருந்தது. 1943ம் ஆண்டு வங்கத்தில் ஏற்பட்ட

பஞ்சத்தில் 30 லட்சம் பேர் உயிரிழந்தனர். ஆனால், காலனி ஆதிக்க ஆட்சி நடத்தியவர்கள் இரக்கமற்ற முறையில் செயல் பட்டனர். கலைப் படைப்புகள் மூலம் அரசியல் விழிப்புணர்ப்பு ஏற்படுத்த முயன்ற ஹேமந்த், இந்திய மக்கள் நாடக சங்கத்தில் சேர்ந்தார்.

1947ம் ஆண்டில் கான்யர் பாது (கிராமப்புற மணப் பெண்) என்ற திரைப்படம் அல்லாத பாடலை ஹேமந்த் பதிவு செய்தார். சலீல் சௌத்ரி அதற்கான பாடலை இயற்றி, இசையும் அமைத்திருந்தார். கிராமப் பெண்ணின் வாழ்க்கை பஞ்சத்தாலும் வறுமையாலும் எப்படி சிதைந்துபோனது என்பதை விளக்கும் 6 நிமிட பாடல் அது. இந்தப் பாடல்தான் கிழக்கு இந்தியாவில் ஹேமந்த் மற்றும் சலீல் சௌத்ரியின் பெயர்களை பிரபலப்படுத்தியது. அடுத்த சில ஆண்டுகளுக்கு பாடல் மற்றும் இசைக்காக அவர்கள் இருவரும் சேர்ந்து பணியாற்றினார்கள். அவற்றில் பெரும்பாலானவை பிரபலமானது.

1951ம் ஆண்டு ஹேமந்த், மும்பைக்கு குடிபெயர்ந்தார். ஆனந்த் மத் (1952) என்னும் ஹிந்தி படத்தை தயாரித்த எஸ்.முகர்ஜி, தமது முதல் படத்துக்கு ஹேமந்தான் இசையமைக்க வேண்டும் என்று அவரை அழைத்தார். அந்த படத்தில் லதா மங்கேஷ்கர் பாலிவுட்டின் மிகச் சிறந்த தேசபக்தி பாடலான வந்தே மாதரம் பாடலை பாடியிருந்தார். அந்தப் பாடல் வரலாற்றில் முத்திரை பதித்தது. ஹேமந்தின் அருமையான இசையமைப்பு, சூப்பரான படக் காட்சிகள், லதாவின் இனிமையான குரலில் அந்த பாடல் பிரபலமானது. ஆனால், வர்த்தக ரீதியில் அந்தப் படம் வெற்றி பெறவில்லை.

எனினும், ஹேமந்த் சிறந்த பாடகராக வெற்றிபெற்றார். ஜால் (1952) படத்தில் அவர் பாடிய யே ராத், யே சந்தினி பிர் கஹான் என்ற பாடல் அவருக்கு பெரும் புகழைத் தேடித்தந்தது. அடுத்த ஆண்டு, சங்கர்-ஜெய்கிஷன், பாலிவுட்டின் பிரபலமான காதல் பாடல்களில் ஒன்றான, படிடாவில் வரும் யாத் கியை தில் நே கஹான் ஹோ தும் பாடலைப் பாடுவதற்கு ஒப்பந்தம் செய்தார். அதே ஆண்டில் சி.ராமச்சந்திராவின் இசையில் அனார்கலிக்காக, லதாவுடன் இணைந்து ஜக் தர்த் இஷ்க் ஜாக் என்னும் பாடலை ஹேமந்த் பாடினார். ரசிகர்களை சொக்கவைக்கும் வகையில் இந்த காதல் பாட்டு அமைந்திருந்த்து.

ஃபிலிமிஸ்தானுக்கான இசையமைப்பாளராக ஹேமந்தின் இரண்டாவது படம் ஷார்ட் (1954). அந்த படத்தில் இரண்டு நல்ல காதல் பாடல்கள் இருந்த போதிலும் படம் எதிர்பார்த்த அளவு ஹிட்டாகவில்லை. அதில் நா யே சந்த் ஹோகா என்ற பாடலை ஹேமந்த் மற்றும் கீதாத் தனித்தனியாக பாடியிருந்தனர். மேலும் தேகோ வோ சந்த் சுப்கே கர்தா ஹை க்யா இஷாரே என்ற பாடலை ஹேமந்தும் லதாவும் டூயட்டாக பாடியிருந்தனர். இந்த பாடல் ஒளிர்ந்தது.



*ஹேமந்த்குமார் மற்றும் கிஷோர்குமார்.*

ஆனால், ஹேமந்த் இசையமைத்த படங்கள் வர்த்த ரீதியாக வெற்றிபெறாதது அவருக்கு ஏமாற்றத்தை அளித்தது. இதையடுத்து அவர் மீண்டும் கொல்கத்தா திரும்ப முடிவு செய்தார். ஆனால், எஸ்.முகர்ஜி அவரை தடுத்து நிறுத்தினார். கொல்கத்தா செல்ல இருந்தவரை பாலிவுட் பாணியில் ரயில்நிலையத்தில் தடுத்து நிறுத்தினார். நீங்கள் இங்கிருந்து செல்வதற்கு முன் எனக்கு ஒரு வெற்றிப்படத்தை கொடுத்து விட்டுச் செல்லுங்கள் என்றார் முகர்ஜி.



*பிஸ்வஜித் மற்றும் லதா மங்கேஷ்கருடன் ஹேமந்த் குமார்.*

திரைப்படம் ஹிட்டானது: 1954ல் வெளிவந்த “நாகின்” திரைப்படம் ஹேமந்தை புகழின் உச்சிக்கு அழைத்துச் சென்றது. பாம்பை வசீகரிக்கும் வகையிலான மன் டோலி மேரா தன் டோலி என்னும் பாடல், வைஜயந்திமாலா நடிப்பில், லதாவின் இசையில் பார்வையாளர்களை மயக்கும் வகையில் அமைந்திருந்தது. இந்த பாடல் ஒலிக்கும் போது திரையரங்குகளிலும் வீடுகளிலும் பாம்பு புகுந்ததாகவும் பேசப் பட்டது. நாகின் பாடலில் வந்த பீன் ஒலி ஹேமந்தின் இரு உதவியாளர்களான கல்யாண்ஜி (கிளாவிலின்) மற்றும் ரவி (ஹார்மோனியம்) இருவரால் உருவானது. இந்த பாடல் மூலம் ஹேமந்த், எலெக்ட்ரானிக் கருவிகளை பாலிவுட் இசையில் அறிமுகப்படுத்தினார். நாகின் படத்தில் இடம்பெற்ற மற்ற பாடல்களும் சிறப்பாகவே இருந்தன. 1955ல் சிறந்த இசையமைப்பாளருக்கான பிலிம்பேர் விருதை நாகின் படத்திற்காக பெற்றார் ஹேமந்த்.

1954ம் ஆண்டு “ஜாக்ரிதி” திரைப்படத்தின் இசையமைப்பாளராக ஹேமந்த், தனது தேசபக்தியை மீண்டும் வெளிப்படுத்தினார். ஆவோ பச்சோன் தும்ஹே திக்யாஹே (பாடலை இயற்றி பாடியவர் கவி பிரதீப்) மற்றும் ஹம் லாயேன் ஹைன் டூஃபான் ஸே (முகமது ரஃபி) ஆகிய இரண்டு பாடல்களும் ஹிட்டானது. 1956ம் ஆண்டுக்கான சிறந்த திரைப்படத்திற்கான பிலிம்பேர் விருது ஜாக்ரிதி படத்துக்கு வழங்கப்பட்டது. ஹேமந்த் பெரும்பாலும் தேவ் ஆனந்துக்காக குரல் கொடுத்தார். தேவ் ஆனந்துக்காக 11 பாடல் களைப் பாடினார். அவற்றில் பெரும்பாலான பாடல்கள் ஹிட்டானது. 1962ல் பாத் ஏர் ராத் கி படத்துக்காக நா தும் ஹமே ஜானோ பாடலை ஹேமந்த் பதிவு செய்தபோது தேவ் ஆனந்த் அவரை ஆரத்தழுவி, எனது காதல் ரசமான நடிப்புக்கு புதிய பரிமாணத்தை கொடுத்துள்ளீர்கள் என்று கூறி பாராட்டினாராம்.

1950களின் நடுப்பகுதி ஹேமந்தின் திரைவாழ்க்கையில் செழிப்பான கட்டமாக இருந்தது. தொடர்ந்து 15 ஆண்டுகள் அவர் எல்லாத் துறைகளிலும் வெற்றிகண்டார். தோல்வியும் இல்லாமல் இல்லை. டிரினிடாட், டுபாகோ, ஃபிஜி, சூரிநாம் என பல நாடுகளுக்குச் சென்று இசை நிகழ்ச்சிகளை நடத்தி ரசிகர் களை மகிழ்வித்தார். ஹேமந்த பேலா என்னும் தயாரிப்பு நிறுவனத்தை தொடங்கி படத் தயாரிப்பாளர் ஆனார். அவர் நீல் அக்ஷர் நீச்சே என்னும் பெங்காலி மொழிப்படத்தை முதல் முதலாக தயாரித்தார். மிருனாள் சென் இயக்கிய அந்தப் படம் அந்த ஆண்டே சிறந்த திரைப்படத்துக் கான குடியரசுத்தலைவர் விருதைப் பெற்றது. கீதாஞ்சலி புரொடக்ஷன்ஸ் என்ற பெயரில் பல ஹிந்தி திரைப்படங்களையும் அவர் தயாரித்தார். அனைத்து படங்களுக்கும் அவரே இசை அமைத்திருந்தார்.

இந்த படங்களில் பீஸ் ஸால் பாத் (1962) வெற்றி பெற்றிப் படமாக அமைந்தது. கோஹ்ரா (1964) மற்றும் காமோஷி (1968) இரண்டும் சுமாரான வெற்றியைப் பெற்றன. ஆனால், இந்த மூன்றுபடங்களிலும் மறக்கமுடியாத பாடல்கள் இடம்பெற்றன. லதா பாடிய கஹின் தீப் ஜலே கஹின் தில் (பீஸ் ஸால் பாத்) என்னும் பாடல் அவருக்கு சிறந்த பாடகிக் கான பிலிம்பேர் விருதை பெற்றுத்தந்தது.

தற்செயலாக, விஷ உணவால் உடல்நலம் பாதிக்கப்பட்டு மூன்று மாத இடைவெளிக்குப் பிறகு லதா பாடிய முதல்பாடல் இது. இந்த நெருக்கடியான காலகட்டத்தில்

ஹேமந்த் ஆதரவாக இருந்ததாக லதா குறிப்பிட்டிருந்தார்.

1962ல் வெளிவந்த குருதத்தின் ஷாஹிப் பீபி அவுர் குலாம் படத்துக்கு ஹேமந்த் இசை அமைத்திருந்தார். அந்தப் படம் அவரை புகழின் உச்சிக்கு கொண்டு சென்றது. இந்த படத்தில் ஆஷா போஸ்லே, கீதா தத் இருவரும் மிகவும் உணர்ச்சி பொங்க பாடியிருந்தனர். இருவரின் திறமையையும் ஹேமந்த் நன்கு பயன்படுத்திக் கொண்டார். பன்வாரா படா நாதன் ஹை (ஆஷா), நா ஜாவோ சையான் சுதா கே பையன் (கீதா) ஆகிய இரண்டு பாடல்களும் பிரபலமானது.



*கீதா தத் மற்றும் R D பர்மன் ஆகியோருடன்.*

1960களில் ஹேமந்த் ஹிந்தி, பெங்காலி மொழிப்படங்களின் தயாரிப்பாளர், இசையமைப்பாளர், பாடகர் என மிகவும் பிஸியாக இருந்தார். மேலும் இசை நிகழ்ச்சி களையும் நடத்தி வந்தார். பல இசை நிகழ்ச்சிகள் மாலையில் தாமதமாகவே தொடங்கின. ஹேமந்த்தான் கடைசி பாடகராக இருப்பார். அவரது முறை வரும்போது அதிகாலை 5 மணியாக இருக்கும். இந்தியாவின் கிராமபோன் நிறுவனம் தாகூருக்காக அவர் பாடிய பாடல் தொகுப்பை தயாரித்து வெளியிட்டது. 60களில் ஹேமந்த் கொல்கத்தாவுக்கும் மும்பைக்கும் இடையே விமானத்தில் பறந்த வண்ணமே இருந்தார்.

இதனால், தூக்கமின்மை, சரிவர உணவு சாப்பிடாதது மற்றும் மன அழுத்தம் அவரது உடல்நலத்தை பாதித்தது. அவருக்கு ஏற்கெனவே நீரிழிவு நோயும், இரத்த அழுத்த நோயும் இருந்தது. இதுபோதாது என்று முதுகுத் தண்டுவட பிரச்னை யாலும் அவர் அவதிப்பட்டு வந்தார். மேலும் அவர் ஒரு நாளைக்கு 60 சிகரெட்டுகள் புகைத்து வந்ததினால் அவரது உடல் நலம் பாதித்தது. ஆனால், சிகரெட் புகைத்த பின்னர் தான் குரல் வளம் சரியாக இருப்பதாக கூறிவந்தார். 1970-களில் மெல்ல மெல்ல அவரது செயல்பாடுகள் குறைந்து கொண்டே வந்தன.

பிலிம்பேர் விருது, தேசிய விருது, பெங்கால் திரைப்பட பத்திரிகையாளர்கள் சங்க விருது என பல விருதுகளை ஹேமந்த் பெற்றுள்ளார். 1970-களில் மத்திய அரசு அவருக்கு பத்மஸ்ரீ விருது கொடுக்க முன்வந்தது. ஆனால், காலம் தாழ்த்திய விருது எனக்கூறி அதை ஹேமந்த் மறுத்துவிட்டார். 1980-களில் அவருக்கு பத்மபூஷண் விருது கிடைக்கலாம் என பேசப்பட்டது. ஆனால், அவர் விருப்பம் காட்டவில்லை. 1989ம் ஆண்டில் வங்கேதசம் சென்று திரும்பிய அவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டு இறந்தார். அவரது மறைவை சத்யஜித்ரே, ரவீந்திர சங்கீத் மறைந்துவிட்டது என்று கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.



*பெங்காலி பாடகர்கள் ப்ரதீமா, அல்பனா, சந்தியா மற்றும் பேலா ஆகியோருடன்.*

எழுத்தாளர் மூத்த பத்திரிகையாளர் மற்றும் ரோட்டரி கிளப் ஆஃப் மெட்ராஸ் சவுத் உறுப்பினர்

வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்

# சங்கங்களின் மக்கள் நல திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

### மருத்துவமனைகளுக்கு மருத்துவ உதவி வண்டிகள்



*DG குல்பகார் சிங் ரெடோலே மருத்துவ உதவி வண்டிகளை வழங்குகிறார்.*

RID 3090 DG குல்பகார் சிங் ரெடொலெ இந்த மாவட்டத்தில் உள்ள 5 ரோட்டரி சங்கங்களுக்கு ரூ.34.69 லட்சம் மதிப்புள்ள 5 மருத்துவ உதவி வண்டிகளை வழங்கினார். PDG ராஜீவ் கர்க் தலைமையில் 2019ல் நடைபெற்ற GG திட்டத்தின் நிறைவாக வழங்கப்பட்ட இந்த வண்டிகளை ஆதரித்தோர் RID 7255, USAஐச் சேர்ந்த சங்கங்கள், RC பொக்ரான், RID 3292, நேபாளம், TRF, RID 3090.■

### தேவையுள்ள குடும்பங்களுக்கு நீர்த் தொட்டிகள்



*PDG கணேஷ் பட் மற்றும் சங்கத்தினர் நீர்த் தொட்டிகளை வழங்குகின்றனர்.*

ஹூப்ளியில் உள்ள சேரிப்பகுதியான ஜக்தீஷ் நகரில் குடிக்க, வழக்கமான வீட்டு வேலைகளைச் செய்யத் தூய நீர் கிடைக்காமல் தடுமாறும் 30 குடும்பங்களுக்கு PDG கணேஷ் பட் முன்னிலையில் ரூ.90,000 மதிப்புள்ள 500 லிட்டர் நீர்த் தொட்டிகளைக் கொடையளித்தது RC ஹூப்ளி நார்த், RID 3170.■

### உக்ரைன் போரால் பாதிக்கப்பட்டோருக்கு உதவும் ஆனெட்கள்



*குலுக்கல் சீட்டு விற்று உக்ரைனுக்காக உதவும் RC மதுரை மெட்ரோ ஹெரிட்டேஜ் ஆனெட்கள்.*

RC மதுரை மெட்ரோ ஹெரிடேஜ், RID 3000ன் ஆனெட்கள் சங்கம் ஒரு நிகழ்ச்சியின் போது உறுப்பினர்களுக்குப் பரிசுக் குலுக்கல் சீட்டுகளை விற்று, உக்ரைனுக்கு உதவுவதற்கு ரூ.25,500 (300) திரட்டியது. இந்த நிதி RC ட்னிப்ரோ, RID 2232, உக்ரைனுக்கு அனுப்பப்படும்.■

### பன்னாட்டு இளைஞர் நாள் கொண்டாட்டம்



*DG இளங்குமரன் மற்றும் சங்க உறுப்பினர்கள் உலக இளைஞர் நாள் விழாவில்.*

RC ஈரோட் நார்த், RID 3203, ஈரோட்டில் உள்ள பள்ளிகளைச் சேர்ந்த 2,000க்கும் மேற்பட்ட மாணவர்களுடன் பன்னாட்டு இளைஞர் நாளைக் கொண்டாடியது. DG இளங்குமரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், முதியோரைப் பராமரிப்பதுபற்றிய அக்கறை அவசியம் என்ற புத்தகம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.■

# வார்த்தைகளின் அதிசய உலகின் வழியாக ஒரு பயணம்




சந்தியா ராவ்

இந்த முறை நான் பகிர்வதற்காக தேர்ந்தெடுத்த புத்தகங்களில் ஒன்று மோனி மொஹ்சின் எழுதிய பீட்வீன் யு, மீ அண்ட் தி ஃபோர் வால்ஸ். சோசியல் பட்டர்ஃபளை கதை வரிசையில் அதிகம் எதிர்பார்க்கப்பட்ட இந்தத் தலைப்பு இப்போதுதான் வெளியிடப் பட்டுள்ளது, மேலும் இது மோனி மொஹ்சின் இதுவரை எழுதிடாத அளவுக்கு பொழுதுபோக்காகவும், நையாண்டியாவும் உள்ளது.

“சோசியல் பட்டர்ஃபளை” பாகிஸ்தானில் பொது மற்றும் தனியார் வாழ்க்கை பற்றிய கலப்படமற்ற பதிவுகளை பதிவு செய்யும் ஒரு டையரிஸ்ட். இந்த புத்தகம் 2014–2021 ஆண்டு களை உள்ளடக்கியது. ‘அவரது கடைசிப் பயணத்திலிருந்து உலகம் ரயில் வேகத்தில் நகர்ந்திருக்கலாம், ஆனால் லாகூர் இலக்கியவாதிகளின், துபாயின் மினுமினுப்புவாதிகளின் மற்றும் லண்டனின் தேசிய புலம்பெயர்ந்தவாதிகளின் வாழ்க்கை முறை அந்த வேகத்திற்கு இணையாக தன் வேகத்தையும் தக்க வைத்துள்ளன.’ என பின் அட்டையில் பதிவு செய்துள்ளார். டிசம்பர் 2015 தேதியிட்ட ஒரு இடுகை ‘இந்திய வெளியுறவுதுறை அமைச்சர், உறவுகளை மேம்படுத்து வது குறித்து பேச்சுவார்த்தை நடத்த திட்டம்/ மும்பை சென்ற பட்டர்ஃபளை’ ஆகியவை வாச கர்களை இரண்டு நாடுகளுக்கும் இடையே சந்தோசம் நிலவிய நாட்களை நினைவுகூர்ந்தது. “எங்கே சென்றேன் என்று யூகியுங்கள்?” என்ற இடுகை தொடங்குகிறது. “மும்பை! மேலும் நான் எங்கே தங்கியிருந்தேன் என்று யூகியுங்கள்? ஷாருக்கானின் பின்புறம்! ஆம். அது உண்மை. என் ஹோட்டல் அவர் பின்புறம் இருந்தது.’ அவர் தாஜில் உணவு உண்டு, கடைக்குச் செல்கிறார் மேலும், “நான் அம்பானியின் வீட்டைப் பார்த்தேன், பீட்வீன் யு, மீ அண்ட் தி ஃபோர் வால்ஸ் அது பல மாடி கார் பார்க்கிங் போல் இருக்கிறது”. எனக்கு தெரிந்தவரை உலகின் இந்தப் பகுதியில் மோனி மொஹ்சின் போன்ற அரசியல் நையாண்டிகளை இவ்வளவு தைரியமாகவும், நேர்த்தியாகவும் யாரும் எழுதியதில்லை. வேறு ஒன்றும் இல்லை என்றாலும், உங்களுக்கு ஆரோக்கியமான மற்றும் தேவையான அளவு தைரியத்தை செலுத்துகிறார்.

எனது சிறிய சேகரிப்புகளை சல்லடை செய்து, சினுவா அச்செபேவின் “தேர் வாஸ் எ கன்ட்ரி: எ பெர்சனல் ஹிஸ்டரி ஆஃப் பியாஃப்ரா”வை மீண்டும் கண்டுபிடித்தேன். பியாஃப்ரா, பெரும் பாலும் இக்போ பழங் குடியினரால், நைஜீரியா விலிருந்து பிரிந்து, ஜூலை 1967 மற்றும் ஜனவரி 1970க்கு இடையில் ஒரு தேசமாக இருந்தது. நைஜீரியாவில் மட்டுமல்லாமல், உலகிலும் மிகவும் பிரபலமான எழுத்தாளர்களில் ஒருவரான அச்செபே, லட்சக்கணக்கான மக்களைப் பாதித்த வன்முறைப் போராட்டத்தின் வழியாக அவர் செய்த பயணத்தை வரலாற்று, சமூக, பொருளாதார, இலக்கிய, உணர்ச்சி, அறிவுசார் மற்றும் பிற கண்ணோட்டங் களில் இருந்து நோக்கி இந்த புத்தகத்தில் நேர்த் தியான மற்றும் அழுத்தமான உரைநடை மூலம் பதிவு செய்துள்ளார்.




ஸ்பெக்ட்ரமின் மறுமுனையில் ஆமிஷ், பெரும்பாலும் அமெரிக்காவில் வாழும் ஒரு சமூகம். அவர்கள் கிராமப்புற வாழ்க்கை, எளிமை, அமைதி மற்றும் தங்கள் மதத்தின் மேல் விசுவாசம் ஆகியவற்றை பேணுகின்றனர். தொழில் நுட்பத்தைத் தவிர்க்கிறார்கள், மாறாக தங்கள் கைகளையும் தங்கள் நிலங்களையும் கடினமாக உழைக்க விரும்புகின்றனர்; ஒரு எளிய ஆடை முறையை பின்பற்றுகிறார்கள், பெரிய குடும்பங்களைக் கொண்டுள்ளனர் மற்றும் பொதுவாக தங்களுக்குள் பழகிக்கொள்கிறார்கள். அவர்கள் சுவிஸ், ஜெர்மன் மற்றும் அல்சேஷியன் வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் மற்றும் டயட்ச் என கூறப்படும் பென்சில்வேனியா டச்சு, சுவிஸ்-ஜெர்மன் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளை பேசுகின்றனர்.

ஜோடி பிகோல்ட் ஒரு பிரபலமான புனைகதை எழுத்தாளர், அவர் சுமார் 28 நாவல்கள் மற்றும் பல்வேறு எழுத்துக்களைக் படைத்துள்ளார்.

இலக்கிய விமர்சகர்களின் கூற்றுப் படி, அவர் இலக்கிய நோபல் பரிசு பெற வாய்ப்பில்லை, ஆனால் அவரது புத்தகங்களின் சுமார் 40 மில்லியன் பிரதிகள் உலகம் முழுவதும் கிடைக்கின்றன, மேலும் அவர் 34 மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளார். அது அவரின் பிரபலத்தின் அடையாளம் இல்லை என்றால் வேறேது அவரது 2000ம் ஆண்டு நாவலான ப்ளைன் ட்ரூத், ஆமிஷ் சமூகத்தில் அமைக்கப் பட்டது. பிறந்த குழந்தை ஒன்று இறந்து கிடக்கிறது; இளம் தாய், கேட்டி, தான் கர்ப்பமாக இருந்ததை உறுதியுடன் ஏற்க மறுக்கிறாள், இறுதியாக பிரசவம் பார்த்ததை ஒப்புக்கொள்கிறாள், ஆனால் குழந்தையை தான் கொல்லவில்லை என கடுமையாக மறுக்கிறாள். வழக்கு விசாரணைக்கு முன்னதாக, சிறுமியின் வழக்கறிஞர் ஆமிஷ் சமூகத்தில் உள்ள கேட்டியின் நிலைமையை புரிந்துகொள்வதற்காக அவளின் குடும்பத்துடன் வாழ்கிறார். ஒன்று தெளிவாக உள்ளது: ஆமிஷ் அமைதியான மக்கள், அவர்கள் ஒருபோதும் வன்முறையை நாட மாட்டார்கள், கொலை செய்ய மாட்டார்கள். ஆனால், குழந்தை இறந்ததை எப்படி விளக்குவது? ஜோடி பிகோல்ட், கதையில் உள்ள பல்வேறு புதிர்களின் முடிச்சிகளை அவிழ்க்க, வாசகர்கள் ஆமிஷ் மனதை ஆராய்கிறார்கள்.





பிகோல்ட் தனது நாவல்களை 'பிரச்சினைகளை' சுற்றி உருவாக்குவதற்கு பெயர்பெற்றவர், அதற்காக அவர் மிகப்பெரிய அளவிலான ஆராய்ச்சிகளை செய்கிறார். சுமால் கிரேட் திங்க்ஸ்-ல் கரு இன உறவுகள், தி பேக்ட்-ல் தற்கொலை, ஹவுஸ் ரூல்ஸ்-ல் ஆட்டிசம். இதற்கு ப்ளைன் ட்ரூத் விதிவிலக்கல்ல, அதில் உள்ள விவரங்களின் அளவு உங்களை சோர்வடையச் செய்யும். ஆனால், புத்தகங்களைப் படிப்பது ஒரு உள்ளமைக்கப்பட்ட பாதுகாப்பு அம்சத்துடன் வருகிறது: நீங்கள் சிலவற்றை தவிர்த்து படிக்கலாம்! ஆனால் ஒரு எச்சரிக்கை, தவிர்ப்பது என்பது ஒரு பயின்று பெறும் திறமை: நீங்கள் முக்கியமான விஷயங்களை லேசாகத் தவிர்த்துவிட்டு, தேவை யற்றவை என்று நீங்கள் கருதுவதைத் கதையில் தலையிடாமல் தவிர்க்க வேண்டும்.

சில ஆண்டுகளுக்கு முன்பு தி அப்சர்வரில் எழுதிய லூயிஸ் பிரான்ஸ் இவ்வாறு குறிப்பிட்டார்: 'பிகோல்ட் ஒரு சூத்திரத்தைக் கொண்டுள்ளார்: விரைவில் சர்ச்சைக்குரியதாக போகும் ஒரு விஷயத்தைத் தேர்ந்தெடுத்து, சுழலும் கதாபாத்திரங்களின் மூலம் கதையைச் சொல்லுவார். ஸ்டெம் செல் ஆராய்ச்சி, டேட்டிங் பலாத்காரம், குடும்ப வன்முறை, பாலியல் துஷ்பிரயோகம், டீனேஜ் தற்கொலை - நம் காலங்களின் பல தார்மீக சிக்கல்கள் இங்கே விமான நிலைய நாவலுக்கானது என்று பொதுவாக நிராகரிக்கப்பட்ட மென்மையான சிக்கல்களுடன் பிணைத்து கொடுக்கப்பட்டுள்ளது.' எனவே, அவரது பல நாவல்கள் திரைப் படங்களாக உருவாக்கப்பட்டுள்ளது அச்சரியமில்லை, அவற்றில் மிகவும் பிரபலமானது மை சி ஸ்டர்ஸ் கீப்பர் (2009) அபிகாயில் ப்ரெஸ்லின் மற்றும் கேமரூன் டயஸ் நடித்தது.

தற்போது, ரீலில் இருந்து நிஜ வாழ்க்கைக்கு செல்வோம்: K ஸ்ரீலதாவின் திஸ் கைண்ட் அஃப் சைல்ட்: தி டிஸ்எபிலிட்டி ஸ்டோரி. ஸ்ரீலதா ஒரு கவிஞர், புனைகதை எழுத்தாளர், மொழி பெயர்ப்பாளர் மற்றும் கல்வியாளர், அவர் முன்பு ஐஐடி-மெட்ராஸில் இலக்கியப் பேராசிரியராக இருந்தார், இப்போது சென்னை சாய் பல்கலைக்கழகத்தில் படைப்பு எழுதல் மற்றும் மொழிபெயர்ப்பு மையத்திற்கு தலைமை வகிக்கிறார். திஸ் கைண்ட் அஃப் சைல்ட்டில், ஸ்ரீலதா, "ஊனமுற்றோர் மற்றும் அவர்களை நேசிப்பவர்களின் உலகம்" பற்றிய முதல் நபர் கணக்குகள், நேர்காணல்கள் மற்றும் புனைக்கதைகளை கொண்டு தொகுக்கிறார்.

நான் இப்போதுதான் இந்த புத்தகத்தைப் படிக்க ஆரம்பித் திருக்கிறேன். "சமத்துவத்திற்கு அப்பால்" என்ற தலைப்பில் ஒரு அத்தியாயத்தில் ஓவியக்கலைஞர் தாத்திரி வெங்குநாடு மேனன் எழுதுகிறார், "சில சமயங்களில், இருளில் சூரிய ஒளி ஒருவருக்கு எல்லாத்தையும் உணர்த்தும். என் பள்ளி நாட்களில் என்னை ஊக்குவித்து என் கையைப் பிடித்து வழிநடத்திய ஆசிரியர்களுக்கு... என்னை இசைக்குழுவில் சேர்த்த மாஸ்டர்... தங்கள் சிவப்பு பேனாவை ஒதுக்கி என் காகிதங்களை நீல நிறத்தில் குறித்த ஆசிரியர்களுக்கு ... நான் நன்றியுள்ளவனாக இருப்பேன். என் டிஸ்லெக்ஸியா எதிர்காலத்தில் எப்போதாவது போய்விடும் என நான் நினைத்தேன், ஒருவேளை எனது இருபது வயதில். ஒரு கட்டத்தில், வாழ்க்கை கொஞ்சம் எளிதாக மாறும் என்று நினைத்தேன். ஆனால் விஷயம் என்னவென்றால், எனக்கு இப்போது இருபது வயதாகியும், சிரமங்கள் இன்னும் நீங்கவில்லை.' இந்தப் புத்தகத்தின் பக்கங்களில் பல குரல்கள் பேசு வதை நான் கேட்கும் போது, இருள், சூரிய ஒளி மற்றும் என்னை பற்றி நான் அதிகம் அறிந்து கொள்கிறேன்.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.



# இந்திய உணவின் பன்முகத்தன்மையைக் கொண்டாடுதல்

கிரண் ஜெஹரா

தலைப்பு

தி கிரேட் இந்தியன் தாலி

ஆசிரியர்
நந்திதா ஐயர்

பதிப்பாளர்
ரோலி புக்ஸ்

192 பக்கங்கள்
விலை
₹1,140

நீங்கள் தென்னிந்தியத் திருமணத்திற்கோ அல்லது திருவிழாக் கொண்டாட்டத்திற்கோ சென்றிருந்தால், அங்கே மக்கள் வரிசையாக தரையில் கால்களை மடித்து அமர்ந்திருப்பதை பார்த்திருப்பீர்கள் – அவர்களுக்கு முன்னால் வாழை இயில் உணவு பரிமாறப்படும். முதலில் உப்பு, அதைத் தொடர்ந்து பொரியல், கூட்டு, ஊறுகாய், அப்பளம் மற்றும் ஒரிரு இனிப்பு போன்ற பல்வேறு சுவையான பக்க உணவுகள் வைக்கப்படும். அடுத்து, வேகவைத்த சாதம் மற்றும் சூடான சாம்பார் பரிமாறப்படும். அடுத்து காரா குழம்பு, ரசம் அல்லது மோர் ஆகியவற்றை நீங்கள் தேர்வு செய்யலாம். பின்னர் சுவையான பாயாசத்தை ருசிக்கலாம். தென்னிந்திய உணவு உங்கள் நாவிற்கு மறக்க முடியாத சுவையையும், காரம் புளிப்பு மற்றும் இனிப்பு சுவைகளையும் வழங்குகிறது.

வட இந்திய உணவைப் பற்றியும் நீங்கள் இதையே சொல்லலாம். பக்க உணவுகளை பரிமாற சிறிய கிண்ணங்களைக் கொண்ட பெரிய தட்டு அதில் தரப்படும். நீங்கள் நாட்டின் எந்தப் பகுதியில் உணவருந்தினாலும், உணவானது சைவ மற்றும் அசைவ வகைகளில் கிடைக்கும், ஏனெனில் இந்தியாவின் உணவுக் கலாச்சாரத்தின் இரண்டுமே உள்ளார்ந்த பகுதிகளாக இருக்கிறது. இந்த மிகச்சிறந்த உணவு அனுபவம், அதன் மிக விரிவான வடிவத்தில், அதன் பிரகாசமான மற்றும் வண்ணமயமான உணவுகளுடன் உங்கள் கண்களுக்கு ஒரு விருந்தாக இருக்கும்.

உலகில் சைவ உணவை அதிகம் பயன்படுத்துபவர்களில் ஒருவராக இருக்கும் இந்திய சமூகங்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பலவகையான ஆரோக்கியமான காய்கறிகள், பழங்கள், கொட்டைகள் மற்றும் தானியங்களைச் சார்ந்துள்ளன. ஒவ்வொரு தறுவாய்க்கும், பருவத்திற்கும், திருவிழாவிற்கும், காலத்திற்கும், பிராந்தியத்திற்கும் மற்றும் வாரத்தின் நாளுக்கும் கூட குறிப்பிட்ட அல்லது சிறப்பு உணவுகளை நாம் வைத்திருப்பதில் ஆச்சரியமில்லை!

ஊட்டச்சத்து நிபுணரான நந்திதா ஐயரின் தி கிரேட் இந்தியன் தாலி என்ற புத்தகத்தில் கதைகள் வாழை இலை அல்லது வட்டமான தட்டில்





# இஷ்டு

கேரளக் காய்கறி ஸ்டூ (stew)

சமையல் நேரம்: 30 நிமிடங்கள்
4 பேருக்குப் பரிமாறலாம்

**உட்பொருட்கள்**

- ❖ 1 + 1 மேசைக் கரண்டி தேங்காய் எண்ணெய்
- ❖ 2 பச்சை ஏலக்காய்கள்
- ❖ 3 அல்லது 4 கிராம்புகள்
- ❖ 1 துண்டு பட்டை (1”)
- ❖ 5 அல்லது 6 கருப்பு மிளகுகள்
- ❖ 20 கி இஞ்சி, துருவியது
- ❖ 1 கிளை கருவேப்பிலை
- ❖ 1 பெரிய துண்டாக்கப்பட்ட வெங்காயம்
- ❖ 1 பெரிய, தோல் உரிக்கப்பட்ட கேரட்
- ❖ துண்டாக்கப்பட்ட 2 உருளைக் கிழங்குகள்
- ❖ ½ கோப்பை (60 கி) பச்சைப் பட்டாணிகள்
- ❖ 12 அல்லது 14 பீன்ஸ் மெல்லிதாக நறுக்கியது
- ❖ 1½ தேக்கரண்டி உப்பு
- ❖ ½ தேக்கரண்டி வெள்ளை மிளகுத் தூள் (தேவைப்பட்டால்) 400 மிலி தேங்காய்ப் பால்
- ❖ 2 பச்சை மிளகாய்கள்


**செய்முறை**

1. ஒரு கடாய் அல்லது பிரஷர் குக்கரில் எண்ணெயைச் சூடாக்குங்கள். முழு மசாலாப் பொருட்களைச் சேர்த்து, மணம் வரும்வரை 30 விநாடி வறுங்கள்.
2. இஞ்சியில் பாதி மற்றும் கருவேப்பிலை ஒளிர் பச்சையாக மாறும் வரை வறுங்கள்.
3. நறுக்கப்பட்ட வெங்காயத்தைக் 3லிருந்து 4 நிமிடங்களுக்கு அளவு வெப்பத்தில் வறுங்கள்.
4. மீதமுள்ள காய்கறிகளைச் சேர்த்துச் சில விநாடிகள் வறுங்கள். அரைக் கோப்பை நீர், உப்பு, வெள்ளை மிளகுப் பொடி சேருங்கள்.
   1 விசில் வரும் வரை பிரஷர் குக்கரில் சமையுங்கள்
   எலக்ட்ரானிக் பிரஷர் குக்கரில் 10 நிமிடங்கள் (பிரஷர் குக் முறையில்) சமையுங்கள்.
5. தேங்காய்ப் பால், பச்சை மிளகாய், மீதமுள்ள இஞ்சியைச் சேருங்கள். இதமாகக் கொதிக்கவிடுங்கள். பாத்திரத்தை அடுப்பிலிருந்து எடுத்துவிடுங்கள். தேங்காய் எண்ணெய், பச்சைக் கருவேப் பிலை மூலம் மேலும் நறுமணம் சேருங்கள். சாதம், மெலிதான ஆப்பம் அல்லது இடியாப்பத் துடன் சூடாகப் பரிமாறுங்கள்.

- சில சமையல் குறிப்புகள் முழு மசாலாப் பொருட்களைப் பயன்படுத்துவதில்லை, அவற்றில் மணமானது இஞ்சி, மிளகாய், கருவேப்பிலை, தேங்காய்ப் பாலிலிருந்துமட்டும் பெறப்படுகிறது. ஏலக்காய், கிராம்பு, பட்டை போன்ற மசாலாப் பொருட்கள் கேரளத்தில், குறிப்பாக மலபார்ப் பகுதியில் நிறைய விளைகின்றன. அதனால், சமையல் குறிப்பில் கூடுதல் மணத்துக்கு அதைப் பயன்படுத்துவது நல்லது. நீங்கள் முழு மசாலாப் பொருட்களைத் தவிர்த்து இந்தச் சமையல் குறிப்பை இன்னும் எளிமையாக்கலாம்.
- இந்தச் சமையல் குறிப்பு மொத்தம் 400 கிராம் நறுக்கப்பட்ட காய்கறிகளைப் பயன்படுத்து கிறது. உங்களிடம் உள்ள புதிய காய்கறிகளை விருப்பம் போல் பயன்படுத்துங்கள்.

சுவையை சந்திக்கின்றன. வசந்த காலம், கோடை காலம், மழைக்காலம் மற்றும் குளிர்காலம் ஆகிய நான்கு முக்கிய பருவங்களுக்கு இந்திய வீடுகளில் இருந்து குறிப்பிட்ட சமையல் குறிப்புகளை எடுத்து – உங்கள் சமையலறையில் இருந்து சுவையான, சுலபமாக செய்யக்கூடிய 70 சைவ உணவு வகைகளை எப்படி உருவாக்குவது என்பதை இந்த புத்தகம் காட்டுகிறது. எளிதில் கிடைக்கக்கூடிய பொருட்கள் மற்றும் சுவையை அதிகரிக்கவும் நேரத்தை மிச்சப்படுத்தவும் உதவும் நுட்பங்களைப் பயன்படுத்தி சமையலுக்கு ஒரு நடைமுறையான அணுகலை ஆசிரியர் வழங்கியுள்ளார்.

அதே பழைய ஆலு (உருளைக் கிழங்கு), கோபி (காலிபிளவர்), பிண்டி (வெண்டைக்காய்) பொரியல் போன்றவற்றைத் தயாரித்துச் சாப்பிட்டு அலுத்துப் போனவர்களுக்கானது இந்தப் புத்தகம். ஆரோக்கியமான காய்கறி ரெசிபிகள் இந்திய நிலப்பரப்பின் சமையல் சுற்றுப்பயணத்தை உங்களுக்கு வழங்கும், உங்கள் வாயில் நீரை வழியச் செய்யும் மற்றும் இந்தியாவின் ஆயுர்வேத உணவு வரலாற்றை பற்றி உங்களுக்கு அறிவூட்டும். “உணவு இந்தியாவை ஒன்றிணைக்கிறது” என்ற கோஷம், துணைக்கண்டத்தின் உண்மையான சமையல் குறிப்புகளை வாசகர்களுக்கு தெரிவிக்கவும், மகிழ்ச்சியடையச் செய்ய வைக்கும் இந்த புத்தகத்தின் நோக்கத்தை சுருக்கமாக சொல்கிறது. ■



# மோட்டார்ஷுடிர் கொச்சூரி

புதிய பச்சைப் பட்டாணி ஸ்டஃப் செய்யப்பட்டு
நன்கு வறுக்கப்பட்ட தட்டை ரொட்டிகள்

**சமையல் நேரம்:** 50 நிமிடங்கள்;
10 பேருக்குப் பரிமாறலாம்

குளிர்காலத்தில் பச்சைப் பட்டாணி கிடைக்கும், அது இந்தக் கொச்சூரிகளில் சேரும், இந்த நேரத்தின் போது நடைபெறும் வங்காளத் திருமண விருந்து களில் இது கண்டிப்பாக இடம்பெறும். இதை ஆலூர் தோம் (உருளைக்கிழங்குக் கறி) உடன் பரிமாறினால் எல்லாருக்கும் பிடித்த ஜோல்காபார் (தின்பண்டங்களைக் குறிப்பிடும் வங்காளச் சொல்) ஆகும். முந்தைய இரவு மாவையும் திணிக்கும் பொருளையும் தயாரித்துவைத்து விட்டால், இது ஓரளவு எளிதில் செய்யக்கூடிய பண்டிகை நேரக் காலை உணவாகும்.

**உட்பொருட்கள்**

**மாவுக்கு**

- 1 கோப்பை (150 கி) மைதா
  ½ தேக்கரண்டி உப்பு
- 1 தேக்கரண்டி சர்க்கரை
- 4 தேக்கரண்டி சமையல் எண்ணெய்
  ஸ்டஃப் பொருளுக்கு
- 1 கோப்பை (150 கி) தோல் உரிக்கப்பட்ட பட்டாணிகள் (புதியவை) 3 பச்சை மிளகாய்கள்
- 2 தேக்கரண்டி நன்கு நறுக்கப்பட்ட இஞ்சி
- ½ தேக்கரண்டி அரைக்கப்பட்ட சீரகம்;
  ½ தேக்கரண்டி உப்பு; 1 தேநீர்க் கரண்டி சர்க்கரை
- 2 தேக்கரண்டி எண்ணெய்
- ½ தேக்கரண்டி கருஞ்சீரகம்
- 1/8 தேக்கரண்டி பெருங்காயம்
- பொறிப்பதற்கு 2 கோப்பை எண்ணெய்

**செய்முறை**

1. மாவுக்கான உட்பொருட்களை ஒரு கிண்ணத்தில் சேருங்கள். எண்ணெய் மாவுடன் நன்கு கலப்பதை உறுதிப்படுத்துங்கள். வெதவெதப்பான நீரைச் சிறிது சிறிதாகச் சேர்த்து இதமான மாவாக ஆக்குங்கள். கிண்ணத்தை மூடி 15லிருந்து 30 நிமிடங்கள் ஓரமாக வைத்துவிடுங்கள்.
2. இதனிடையில், ஸ்டஃப் பிங்கை தயாரியுங்கள். ஒரு சாஸ்பேனில் 2 கோப்பை நீரைச் சேர்த்துப் பட்டாணியை அது மென்மையாகும்வரை 3லிருந்து 4 நிமிடங்கள் கொதிக்கவையுங்கள். நன்கு வடிகட்டுங்கள். இத்துடன் மிளகாய், இஞ்சி, சீரகத் தூள், உப்பு, சர்க்கரையைச் சேர்த்து, எந்தக் கூடுதல் நீரும் சேர்க்காமல் நன்கு விழுதுபோல் அரைத்துக் கொள்ளுங்கள்.
3. ஒரு பாத்திரத்தில் 2 தேக்கரண்டி எண்ணெயைச் சூடாக்குங்கள். நிஜெல்லா விதைகள், பெருங்காயத்தைச் சில விநாடி வறுங்கள். தயாரிக்கப் பட்ட விழுதை எண்ணெயில் போடுங்கள். குறைந்தது முதல் நடுத்தர அளவு சூட்டில் கலக்கி ஈரப்பதத்தை உலரவிடுங்கள். இதன் மூலம், ஸ்டஃபிங்க் சொதசொத என்று ஆகாமல் இருக்கும். இந்தக் கலவை ஒரு பந்துபோல் ஆகும்வரை கலக்குங்கள். அதை ஒரு பாத்திரத்துக்கு மாற்றிக் குளிரவிடுங்கள்.
4. மாவையும் திணிக்கும் பொருளையும் தலா 10 பகுதிகளாகப் பிரியுங்கள். மாவைத் தட்டையாக்கி, அதை உங்கள் உள்ளங்கையில் ஒரு கோப்பையாக ஆக்குங்கள். ஸ்டஃபிங்கை சேர்த்து நன்கு மூடுங்கள், ஒரு பந்தாக உருட்டுங்கள். எண்ணெய் தடவிய சப்பாத்திக் கட்டையைப் பயன்படுத்தி, 5” விட்ட அளவு கொண்ட தடிமனான பூரியாக இடுங்கள்.
5. ஒரு பாத்திரத்தில் எண்ணெயைச் சூடாக்கி, நல்ல வெப்பத்தில் ஒவ்வொரு கொச்சூரியையும் உப்பி வரும் வரை தனித்தனியாக பொறியுங்கள். துளை உள்ள கரண்டியால் அதைத் திருப்பிப்போடுங்கள், மற்ற பக்கத்தையும் 20லிருந்து 30 விநாடிகள் பொறியுங்கள்.
6. சமையலறைத் தாள் ஒன்றில் அதைப் போட்டுக் கூடுதல் எண்ணெயை உறிஞ்சுங்கள்.
7. ஆலூர் தோம் (வங்காள பாணியில் சமைக்கப்பட்ட சிறு உருளைக்கிழங்குக் கறி) உடன் பரிமாறுங்கள்.



# பாகற்காய்க் கறி

சமையல் நேரம்: 50 நிமிடங்கள்; 4 பேருக்குப் பரிமாறலாம்

கொஜ்ஜு என்பது கர்நாடகத்திலிருந்து வருகிற காரமான, புளிப்பான, இனிப்பான தயாரிப்பு. பொதுவாக இதைச் சாதம், நெய்யுடன் உண்பார்கள். இது பல காய்கறிகளைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது, அன்னாசி, திராட்சை போன்ற பழங்கள்கூட இதில் பயன்படுத்தப்படுவதுண்டு. நீங்கள் சமையலில் உப்பு, இனிப்பு மணங்களை விரும்புகிறவர் என்றால், இதைக் கண்டிப்பாக முயன்று பாருங்கள்.

**உட்பொருட்கள்**

- 3 அல்லது 4 நடுத்தர அளவு (225 கி) பாகற்காய்கள்/
- 2 கோப்பைகள் நறுக்கப்பட்டது (கரேலா)
- ¼ கோப்பை (40 கி) புளி + 2 கோப்பை நீர்
- 2 மேசைக் கரண்டி கடலை எண்ணெய்
- 1 தேக்கரண்டி கடுகு
- 1 தேக்கரண்டி பிளக்கப்பட்ட, தோல் உரிக்கப்பட்ட உளுத்தம்பருப்பு
- ½ தேக்கரண்டி அரைக்கப்பட்ட மஞ்சள்
- 2 கிளை கருவேப்பிலை
- 2 தேக்கரண்டி உப்பு
- 2 தேக்கரண்டி ரசத்தூள்
- 2 தேக்கரண்டி சிவப்பு மிளகாய்த் தூள்
- ¼ கோப்பை (50 கி) வெல்லம்

**செய்முறை**

1. பாகற்காயை நெட்டுக்குத்தாக நறுக்குங்கள். விதைகள், உள்ளே இருக்கும் வெள்ளைப் பகுதியை நீக்கிவிட்டு, மீதியுள்ள பகுதியை நன்கு பொடியாக நறுக்குங்கள்.
2. புளியை 20 நிமிடங்களுக்கு நீரில் ஊறவிடுங்கள். ஊறவிட்ட புளியை கரைத்து சாறு எடுத்து அதை தனியாக வையுங்கள்.
3. ஒரு பாத்திரத்தில் எண்ணெயைச் சூடாக்குங்கள். கடுகு வெடிக்கும்வரை வறுங்கள். உளுத்தம்பருப்பைச் சேர்த்து, அது பொன்னிறப் பழுப்பு ஆகும்வரை நடுத்தர அளவு நெருப்பில் வறுங்கள்.
4. இதில் நறுக்கிய பாகற்காயைச் சேருங்கள், குறைந்தது முதல் நடுத்தர அளவு வெப்பத்தில் 15 நிமிடங்கள் வறுங்கள். இது இன்னும் மங்கலான பச்சை நிறத்துக்கு மாறும், பாகற்காய் பகுதியளவு சமைக்கப்படும். மஞ்சளைத் தெளித்துக் கருவேப்பிலையைச் சேர்த்துக் கலக்குங்கள். நன்கு கலக்கி மேலும் 5 நிமிடங்கள் சமையுங்கள்.
5. இப்போது, புளிச் சாறு, ½ கோப்பை கொதிக்கும் வெந்நீர் சேருங்கள், அதிக வெப்பத்தில் அதைக் கொதிக்கவிடுங்கள். 5 முதல் 7 நிமிடங்கள் கொதிக்கவிடுங்கள், புளிச் சாறு சேர்த்துக் கெட்டியாக்குங்கள். உப்பு, ரசத்தூள், மிளகாய்த் தூள், வெல்லப் பொடி சேருங்கள். கொஜ்ஜுவை மேலும் 2லிருந்து 3 நிமிடங்கள் கொதிக்கவிடுங்கள். கொஜ்ஜுவின் தன்மை தாலைவிட மேலும் கெட்டியாக இருக்கும். அதனால், நிறையத் தண்ணீர் சேர்த்து விடாதீர்கள்.
6. நறுக்கப்பட்ட வெண்டைக்காய் அல்லது பச்சைத் திராட்சையைப் பயன்படுத்தியும் நீங்கள் இதைச் செய்யலாம்.

- கொஜ்ஜுவின் நிறம் பயன்படுத்தப்படும் புளியைப் பொறுத்து அமையும். மேலும் கருத்த, நாளான வகைப் புளி அடர் பழுப்பு கொஜ்ஜுவை வழங்கும்.
- அமிலத்தன்மை புளியைப் பொறுத்து மாறுகிறது, அதனால், சுவை பார்த்து மிளகாய், வெல்லம், உப்பைச் சேருங்கள்.
- நிறைவாக, 1 மேசைக் கரண்டி நன்கு பொடியாக்கப்பட்ட வெள்ளை எள்ளைச் சேர்க்கலாம். ■

# தெலங்கானா பெண்களுக்கு
# நீர் சக்கரங்கள் புத்தாண்டு பரிசு!

V முத்துகுமரன்

மகாராஷ்டிர மாநிலத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விதர்பா-மராத்வாடா பகுதியில் வசிக்கும் கிராமப்புற பெண்களின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படுத்த அவர்கள் எளிதில் குடிநீர் எடுத்துவர நீர் சக்கரங்கள் வழங்கப்பட்ட செய்தியை படித்திருக்கிறேன். இப்போது தெலங்கானா கிராமங்களில் வசிக்கும் பழங்குடியின பெண்கள் தண்ணீருக்குகாக தொலை தூரம் செல்லாமல் அவர்களின் சுமையை குறைக்கும் வகையில் பிளாஸ்டிக் உருளைகள் (நீர் சக்கரங்கள்) வழங்க முடிவு செய்துள்ளோம் என்கிறார் RID 3150-க்கு உட்பட்ட குளோபல் சாம்பியன்ஸ் ரோட்டரி சங்கத் தலைவர் நரசிம்ம மேதா கோட்டாரு.

தண்ணீர் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ள பழங்குடியின பெண்களுக்கு முதன் முறையாக நாங்கள் நீர்ச்சக்கரங்கள் வழங்குகிறோம். அவர்கள் ஆழ்துளை கிணறுகள் அல்லது நீரோடைகளிலிருந்து தண்ணீர் எடுத்துவர சுமார் 10 கி.மீ. பயணிக்க வேண்டியுள்ளது. தூய்மையான குடிநீர் என்பது இன்றளவும் நல்கொண்டா கிராமப்புற குடும்பங்களுக்கு ஒரு கனவாகவே இருந்து வருகிறது என்றார் அவர்.

ஹைதராபாதிலிருந்து 150 கி.மீ. தொலைவில் உள்ள நல்கொண்டா மாவட்டத்தில் உள்ள கம்பலபள்ளி கிராமத்தின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் ஒரு முன்னோடி திட்டத்தை தொடங்கினோம். அடுத்து ஹைதராபாதிலிருந்து 370 கி.மீ. தொலைவில் அதிலாபாதில் உள்ள கிராமங்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. கடந்த நவம்பரில் நல்கொண்டாவில் 42 நீர் சக்கரங்கள் வழங்கப்பட்டன. பின்னர் டிசம்பர் 24ம் தேதி அதிலாபாதில் உள்ள இரு கிராமங்களுக்கு 137 நீர்ச் சக்கரங்கள் வழங்கப்பட்டன.




DG *ராஜசேகர் ரெட்டி (இடமிருந்து 4வது) நீர் சக்கரங்கள் வழங்கும் விழாவில்.*

ஒவ்வொரு தண்ணீர் உருளையும் 45 லிட்டர் கொள்ளளவு கொண்டது. கடினமான நிலப்பரப்பிலும் இந்த உருளைகளை பயன்படுத்த முடியும். இதன் மூலம் பெண்கள் இடுப்பிலும், தலையிலும் தண்ணீர் குடத்தை சுமந்து கொண்டு நீண்ட தொலைவு செல்வது தடுக்கப்பட்டுள்ளது என்கிறார் கோடாரு. இதுவரை 179 பிளாஸ்டிக் உருளைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. தண்ணீர் தட்டுப் பாடுள்ள கிராமங்களைக் கண்டறிந்து நீர் சக்கரங்களை விநியோகிக்கும் திட்டங்களை தற்போது செயல்படுத்தி வருகிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அடிப்படை வேலைகள் மற்றும் பயனாளிகளை தேர்வு செய்வதற்காக பழங்குடியினரின் உரிமைகள் மற்றும் வாழ்வாதாரத் திற்காக பணிபுரியும் வனவாசி கல்யாண் பரிஷத் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தை கோட்டாரு இணைத்துக்கொண்டுள்ளார்.

அமெரிக்காவில் விடுமுறைக்குச் சென்ற கோட்டாரு மற்றும் அவரது மனைவி சுசீலாவும் கலிபோர்னியாவில் உள்ள மகன் கிருஷ்ண சைதன்யா மற்றும் டெக்ஸாஸ் மாநிலம் ஆஸ்டினில் உள்ள மற்றொரு மகன் சக்கரவர்த்தி அவர்களின் மருமகள்கள் ஆகிய ஐந்து பேரும் (அனைவரும் சங்கத்தின் உறுப்பினர்கள்) மிலாப் நிகழ்ச்சி மூலம் ரோட்டரிக்கு நிதி சேர்த்தனர். வெளிநாடு வாழ் இந்திய நண்பர்கள் 19 பேர் மற்றும் சிலர் எங்களின் முன்னோடி திட்டத்துக்கு 6,000 டாலர் நிதியளித்தனர். இந்த நீர் சக்கரங்கள் ஒரு யூனிட் ரூ.2,400 என்ற விலையில் நீல்கமல் சில்வாஸா ஆலையிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டன என்று கோட்டாரு தெரிவித்தார்.

கிராமப்புற பெண்கள் பயனடையும் வகையில் நீர் சக்கரங்களை மாவட்டத் திட்டமாக மாற்ற DG விரும்புகிறார்.■

# நல்ல ஆரோக்கியத்திற்கான சிறிய அடிகள்

பரத் - ஷலன் சவூர்

43 வயதான ஒருவர் Dr ரங்கன் சாட்டர்ஜியின் கிளினிக்கிற்குள் நுழைந்தார். அவர் சற்று அதிக எடை மற்றும் குறைந்த ஆற்றலுடன் இருந்தார். 43 வயதான அந்த நபர் ஸ்டெப்-அப்ஸ் உடற்பயிற்சி செய்ய விரும்புவதாகத் தெரிகிறது. “வாரத்துக்கு மூன்று முறை 40 நிமிடம் செய்யட்டுமா?” என்று கேட்கிறார். அதற்கு பதிலாக மருத்துவர், “சரி, உங்களால் அதைச் செய்ய முடியும் என்று நினைக்கிறீர்களா?” ‘நிச்சயமாக,’ அந்த மனிதர் மிகவும் உற்சாகமாக தோன்றுகிறார். “சரி, செய்யுங்கள். மூன்று வாரங்களுக்குப் பிறகு மீண்டும் வந்து என்னைப் பார்க்கவும்,” என்கிறார் Dr சாட்டர்ஜி.

மூன்று வாரங்களுக்குப் பிறகு சோர்வாக வந்தார். அவர் ஸ்டெப்-அப்களை செய்யவில்லை என்று கூறுகிறார். Dr சாட்டர்ஜி 40 நிமிட பயிற்சிமுறை அதிகமாக இருப்பதை உணர்கிறார். எனவே, வீட்டிலேயே வாரத்திற்கு இரண்டு முறை, ஐந்து நிமிடங்கள் செய்யக் கூடிய இரண்டு பயிற்சிகளை அவருக்குக் கற்றுக்கொடுக்கிறார்.

## இது செய்யக்கூடியதே!

ஒரு மாதம் கழித்து வந்தவர் முகத்தில் புன்னகை இருக்கிறது, தன்னம்பிகையுடன் காணப்படு கிறார், அவரது தோரணை நேர்த்தியாக இருக்கிறது. விஷயம் என்ன வென்றால், அந்த பயிற்சி களை அவர் தினமும் இரவு உணவிற்கு முன் செய்திருக்கிறார். “வாரத்துக்கு 10 நிமிடம் என்றேன். வாரத்தில் 70 நிமிடங்கள் செய்திருக்கிறார்!” என்று மகிழ்ச்சி யுடன் கூறுகிறார் Dr சாட்டர்ஜி.

இங்கிலாந்தைச் சேர்ந்த இந்த மருத்துவர், உண்மையான தீர்வைக் கண்டுபிடித்துள்ளார். உடற்தகுதி ஒரு இழுபறியாக இருக்க வேண்டியதில்லை. கால அளவை குறைவாக அமைக்கவும். 10 நிமிடங்கள் என்றால், அது செய்யக்கூடியது என்று உணர்கிறோம், அதைச் செய்கிறோம். அரை மணி நேரம் என்றால், அது மிகப்பெரியது, அதனால் செய்ய தவறுகிறோம்.



## 5 நிமிட சமையலறை உடற்பயிற்சிகள்

Dr சாட்டர்ஜி தனது புத்தகமான The 4-Pillar Plan-ல் சில எளிய, பயனுள்ள பயிற்சிகளை பரிந் துரைக்கிறார். அவை “5 நிமிட சமையலறை உடற்பயிற்சிகள்” என்று அழைக்கப்படுகின்றன. அவை அனைத்தும் சமையலறை கவுண்டர்-டாப் அல்லது சுவரில் செய்யப்படுபவை.

**குந்துகைகள்:** சமையலறை கவுண்டரை இரண்டு கைகளாலும் பிடித்துக் கொண்டு, உங்களால் முடிந்தவரை அமர்ந்து, மீண்டும் எழுந்திருங்கள்.

**குதிகால் உயர்வு:** நிற்கவும். தரையில் இருந்து உங்கள் குதிகால்களை உயர்த்தவும். அவற்றைக் இறக்கவும்.

**பிரஸ்-அப்ஸ்:** நிற்கவும், கைகளை நேராக வெளியே நீட்டி, உள்ளங்கைகள் சுவரில் வைக்கவும். மார்பை சுவருக்கு நகர்த்தி, முழங்கைகளை வளைத்து, அதேநேரம் உங்கள் குதிகால்களை உயர்த்தவும். மீண்டும் முதல் நிலைக்கு திரும்பவும்.

**கைகளை வலுப்படுத்துல்:** சமையலறை கவுண்டருக்கு முன்னால் திரும்பி நிற்கவும், கவுண்டரை பிடித்துக் கொள்ளவும். உங்கள் எடையை கைகள் தாங்க, முதுகை நேராக வைத்துகொண்டு கீழே சென்று,மேலே வரவும்.

**எகுறுதல்கள்:** சமையலறை கவுண்டருக்கு பக்கவாட்டாக நிற்கவும், அதை வலது கையால் பிடிக்கவும். உடலை நேராக வைத்துகொண்டு, வலது காலை முன்னோக்கி நகர்த்தி இடது காலால் குதியுங்கள். இப்போது இடது கையால் பிடித்து, இடது காலை முன்னோக்கி நகர்த்தி, வலது காலால் குதிக்கவும்.ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு உடற்பயிற்சி யையும் இரண்டு முறை செய்யவும்.

### 12 மணிநேர உணவு உண்ணும் சாளரம்

நீரிழிவு மற்றும் அதிகப்படியான கொழுப்பை வெளியேற்றுவது போன்ற 'ஆழ்ந்த சக்தி வாய்ந்த விளைவுகளைக் கொண்ட' நேரக் கட்டுப்படுத்தப்பட்ட உணவருந்துதலை Dr சாட்டர்ஜி பரிந்துரைக்கிறார். அவர் 12 மணிநேர உண்ணும் சாளரத்தை பரிந்துரைக்கிறார்: நீங்கள் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை மட்டும் சாப்பிடுங்கள். இரவு 8 மணி முதல் காலை 8 மணி வரை சாப்பிட வேண்டாம். அதாவது, 24 மணி நேரத்தில் 12 மணி நேரம் சாப்பிட வேண்டாம். அந்த சாப்பிடாத 12 மணிநேரங்களில், கல்லீரல் குளுக்கோஸை இரத்த ஓட்டத்தில் வெளியிடாமல், செல்களை சரிசெய்ய பயன்படுத்தும்.

**விளைவு:** இரத்த சர்க்கரை அளவு கட்டுப்படுத்தப்படுகிறது. இந்த உண்ணாவிரத நேரங்களில், இது கொலஸ்ட்ராலை உடைத்து அமிலங்களாக மாற்றும் என்ஜய்ம்ஸ்களை சுரந்து கொழுப்பை எரிக்கிறது.

**முடிவு:** எடை இழப்பு.இன்னும் விவேகமான அளவிலான குறைந்த கொழுப்பு உணவு.

கரையக்கூடிய நார்ச்சத்து கொண்ட கார்போஹைட்ரேட்டுகள் – சிவப்பு அரிசி, ஓட்ஸ்,சர்க்கரை வள்ளிக்கிழங்கு. நார்ச்சத்து நுண்ணுயிர் எதிர்ப்பிகளை மிகவும் பயனுள்ளதாக்குகிறது, நமது அமைப்பை சுத்தப்படுத்துகிறது, வயதான காலத்தில் டிமென்ஷியா அபாயத்தைக் குறைக்கிறது என இரைப்பைக் குடலியல் நிபுணர் Dr வில் புல்சிவிச் கூறுகிறார்.

முழு பருப்புகளிலிருந்து புரதம் – பாசிப்பருப்பு, ராஜ்மா, மொச்சை, மசூர். இவை இரத்த சர்க்கரை சமநிலை மற்றும் ஆற்றலைக் கட்டுப்படுத்த உதவுகின்றன.

புளித்த உணவு – முக்கியமாக தயிர். இது குடலைச் சமநிலைப் படுத்த உதவுகிறது, செரிமானத்தை ஆதரிக்கிறது, வீக்கத்தைக் குறைக்கிறது, உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது, நல்ல கொழுப்பான HDLஐ அதிகரித்து இதயத்திற்கு நன்மை விளைக்கிறது என்று மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

கேரட், பீட்ரூட், தக்காளி, காலி ஃபிளவர், பட்டாணி, வெங்காயம் பூண்டு, பிரஞ்சு பீன்ஸ், இஞ்சி , உப்பு, மூலிகைகள், சாஸ்கள் மூலம் ஒரு சூடான சூப்பாக காய்கறிகள் இருக்கலாம்., மசாலா கலந்த வறுத்த வெண்டைக்காய் ஒரு சிறந்த உணவாகும். இவை அனைத்திலும் ஏராளமான வைட்டமின்கள் உள்ளன மற்றும் தினமும் சாப்பிடலாம்.

### தூக்கத்தை போற்றிப் பாடுங்கள்

உங்களின் உணவு அருந்தும் கட்-அஃப் நேரம் இரவு 8 மணி எனில், இரவு 10 மணிக்குத் தூங்குவதற்கு முன், உங்கள் குடும்பத்தினருடன் வேடிக்கையான இரண்டு மணிநேரங்கள் செல விடலாம். தூக்கம் ஒரு முக்கியமான வாழ்க்கை முறை காரணியாகும், இது மன அழுத்தத்தை குறைக்கும்.

### ஒரு நாள் ஒரு வாழ்க்கைக்கு சமம்

ஒரு நாள் ஒரு வாழ்க்கைக்கு சமம் என்பதைப் புரிந்துகொள்வது அவசியம். இது ஒவ்வொரு நாளையும் நம் வாழ்க்கையில் நல்ல நாளாக உருவாக்க உதவுகிறது. புதிய தொடக்கத்திற்கு காலை இன்றியமையாதது. மரங்களும் தாவரங்களும் உலகிற்கு அமைதியைக் கொடுப்பதைக் காண இது ஒரு சிறந்த நேரம். எறும்புகள் மற்றும் சிட்டுக்குருவிகள் தங்கள் செயல்பாடுகளால் உலகை இயங்க வைக்கும் நேரம். பறவைகள் பாடி, பறந்து உலகத்தை மகிழ்ச்சியுடன் வைத்திருக்கும் நேரம். தியானம், எழுதுதல், நடப்பது, ஓடுவது, பாடுவது, வண்ணம் தீட்டுவது மற்றும் சுவாசிப்பது போன்ற பயிற்சிகள் மூலம் இந்த உயிருள்ள மெல்லிசைகளுக்கு எற்றவாறு நம்மால் அசைய முடியும்.

### இறுதியாக மூன்று உதவிக்குறிப்புகள்:

- கவனச்சிதறல் ஆவதை தவிர்க்கவும். திசைதிருப்பப் பட்ட மக்கள் எல்லா நேரத்திலும் தங்களைத் தாங்களே நிலை தடுமாற செய்வார்கள், கவனம் செலுத்துபவர்கள் நிலையானவர்களாகவும் அமைதியாகவும் இருப்பார்கள். மற்ற எதுவும் செய்யவோ அல்லது சிந்திக்கவோ இல்லாதது போல் ஒரு நேரத்தில் ஒரு செயலை முழு கவனத்துடன் செய்யுங்கள்.
- எளிய சிறிய தினசரி நடை முறைகளைப் பின்பற்றவும். அவை நமது நோக்கமாக இருக்கலாம். ஒரு நோக்கம் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக ஆக்குகிறது. அதில் சலவை செய்தல், குப்பைகளை அகற்றுதல் போன்றவை அடங்கும்.
- நீங்கள் பெரிதும் நேசிக்கும் நபர்களை பொக்கிஷமாக கருதுங்கள். பழகுங்கள். கேளுங்கள். ஏற்றுக்கொள்ளுங்கள். அப்படித் தான் நாம் அன்பை ஒரு நல்ல வாழ்க்கையில் பிணைத்து அதை மகிழ்ச்சியானதாக ஆக்குகின்றோம்.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

# சுற்றுச்சூழலுக்கு உகந்த நிகழ்ச்சிகள்

**ப்ரீதி மேஹரா**

‘பசுமை நிகழ்வுகள்’ என்று கூறப்படும் நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்களை நாம் அனைவரும் ஏதோ ஒரு கட்டத்தில் பெற்றிருப்போம். திட்டமிடல் முதல் செயல்படுத்துவது வரை பரந்த நிலைத்தன்மை வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதாக அமைப்பாளர்கள் கூறும் நிகழ்வுகள் இவை. மக்கள் அதிக அளவில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உணர்ந்து வருவதால் இது புரிந்துகொள்ளத்தக்கது. கலந்துகொள்வது மட்டுமல்லாமல், மாநாடுகள், கருத்தரங்குகள், அலுவலக நிகழ்வுகள் மற்றும் சில சமயங்களில் குடும்ப சந்திப்புகள் கூட நாம் நடத்த வேண்டியிருக்கும். எனவே, நாம் அமைப்பாளர்களாக இருக்கும்போது நாம் பின்பற்ற வேண்டிய நிலைத்தன்மை நெறிமுறை என்ன?

என் எண்ணங்கள் உடனடியாக கடந்த நவம்பருக்குத் திரும்பிச் செல்ல, அப்போது டிசம்பரில் பெங்களூருவில் நடைபெறவிருந்த “இந்தியாவின் சுற்றுச்சூழலுக்காக வடிவமைக்கப்பட்ட ஒரே இசை விழா”பற்றி கேள்விப்பட்டேன். ‘எக்கோஸ் ஆஃப் எர்த்’ என்ற தலைப்பில் நடைபெற்ற அந்த நிகழ்வின் அனுபவ கூட்டாளியாக ஐகியா இருந்தது. மேலும், ஒரு வட்டப் பொருளாதாரம் பற்றிய யோசனைக்கு ஊக்கமளிக்கும் வகையில், திருவிழா விளம்பர தாரர்கள், நிராகரிக்கப்பட்ட IKEA மரச்சாமான்கள் மற்றும் தயாரிப்புகளைப் பயன்படுத்தி நிலையான வாழ்க்கை அளவு நிறுவல்கள் மற்றும் அலங்கார அமைப்பைகளை பயன்படுத்து வதாகக் கூறினர். மேடை மற்றும் பிற பாகங்கள் அனைத்தும் மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்களால் ஆனது.

ஒரு இசைக் கச்சேரியை வடிவமைக்க அல்லது இதேபோன்ற பொழுதுபோக்கு மாலையை அரங்கேற்ற என்ன செய்ய முடியும் என்பதை இந்த நிகழ்வு எனக்கு காட்டியது. ஒரு நிகழ்வின் கார்பன் நடுநிலையான அம்சத்தை மனதில் கொண்டு திட்டமிடுதல் இருக்க வேண்டும். இது என்னை சிந்திக்க வைத்தது.

முதலில், ஒரு முக்கியமான அம்சம் இடத்தைத் தேர்ந்தெடுப்பது என்பதை உணர்ந்தேன். இயற்கை யுடன் இணக்கமாக இருக்கும் ஒரு அமைப்பை அடையாளம் காண வேண்டும். இது ஒரு திறந்தவெளி அரங்கமாக இருந்தால், கார்பன் தடம் மிகவும் குறைவாக இருக்கும் மற்றும் கூடாரங்கள் அல்லது ஷாமியானாக்கள் அமைப்பதில் சேமிப்பு ஏற்படும்.

ஆனால், அந்த இடத்தை நிகழ்வுக்கு முன்பு இருந்ததை போலவே அல்லது அதை விட சிறப்பாக விட்டு வெளியேறுவது மிகப்பெரிய பொறுப்பாக இருக்கும்.

அதுமட்டுமின்றி, மக்கள் அதிகம் கூடும் இடத்தில் கண்டிப்பாக கழிவுகள் உருவாகும். இந்த



அம்சத்தை கணக்கில் எடுக்கா விட்டால், பசுமையான நிகழ்வை நடத்துவதாக நீங்கள் ஒருபோதும் நேர்மையாகக் கூற முடியாது. எனவே, கழிவுகளை அகற்றுவது மட்டுமின்றி அந்த இடத்திலேயே பிரிக்கவும் திட்டமிடுவது நல்லது. குறிப்பாக, உங்களிடம் தன்னார்வலர்கள் குழு இருந்தால், மக்கள் தங்கள் கழிவுகளை சரியான தொட்டியில் வீசுமாறு அவர்கள் பணிவுடன் வழிகாட்டினால், பின்னர் அகற்றுவதைக் கையாள வேண்டியவர்களுக்கு நீங்கள் ஒரு பெரிய உதவியைச் செய்திருப்பீர்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, கும்பமேளா முதல் எந்தப் பொதுப் பேரணி வரையிலும் பல பெரிய கூட்டங்களில் கழிவுகள் அலட்சியமாக சிதறிக்கிடக்கின்றன, மேலும் கவலைப்படாத மனப் பான்மைக்கு சோகமான சாட்சியமாக உள்ளது.

நீங்கள் தேர்ந்தெடுக்கும் இடத்தைப் பொதுப் போக்குவரத்து மூலம் சென்றடைய முடியுமானால், பார்க்கிங் மற்றும் எரிபொருளின் பயன்பாடு குறைக்கப்பட்டு ஒரு நிலையான விளிம்பை வழங்கும். மக்கள் அந்த இடத்திற்கு சைக்கிளில் செல்ல முடிந்தால் அது சிறந்ததாக இருக்கும், ஆனால் நகர்ப்புற திட்டமிடல் சைக்கிள் டிராக்குகளுக்கான ஏற்பாடுகளை செய்யாததால் அந்த சாத்தியம் பெரும்பாலும் நம் நகரங்களில் நிராகரிக்கப்படுகிறது.

பசுமையான நிகழ்வுகளுக்கு மாறுவதை சாதாரணமாக நிராகரிக்க முடியாது.கார்பன் உமிழ்வைக் குறைப்பதற்கும், காலநிலை மாற்றத்தைத் தணிப்பதற்கும் நம் முயற்சியில் இது மிகவும் முக்கியமானது, 2021ல் கிளாஸ்கோ காலநிலை மாற்ற மாநாட்டின் போது, ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம், ஒரு ஆன்லைன் பசுமை நிகழ்வுகள் கருவியை (GET) அறிமுகப்படுத்தியது. இது பொது மக்கள் மற்றும் அமைப்புகள் அவர் களின் நிகழ்வுகளை பசுமைப்படுத்த உதவும் வகையில் அனைவராலும் அணுகக்கூடியதாக அமைக்கப் பட்டுள்ளது.

GETன் உதவியுடன், திட்டமிடல் நிலையிலேயே ஒரு நிகழ்வின் GHG உமிழ்வு விவரம் மற்றும் நிலைத்தன்மை தாக்கத்தை அமைப்பாளர்கள் மதிப்பீடு செய்ய லாம். உண்மையில், பசுமையான நிகழ்வுகளில் ஆழ்ந்த ஆர்வமுள்ள எவருக்கும் GET ஒரு அடிப்படையான கருவியாக இருக்கும், குறிப்பாக இது பெரிய அளவில் நடத்தப்பட்டு அதிகாரப்பூர்வமாக பயன்படுத்தப் பட்டால் பெரும் பலனை அளிக்கும்.

கடந்த மாதம், புக் மைஷோ போர்ட்டல் இணைந்து தயாரித்த லோலாபலூசா இந்தியா 2023 என்ற உலகளாவிய இசைக் களியாட்டத்தின் மற்றொரு தகவல் தாளைப் பெற்றேன். அவர்களின் நிகழ்வு நிலையானது மற்றும் சுற்றுச்சூழல் உணர்வுடன் இருந்தது என்று ஏற்பாட்டாளர்கள் வலியுறுத்தினர். கார்பன் நியூட்ரல் மியூசிக் ஃபெஸ்ட்டுக்கு எந்த அளவுக்கு அவர்கள் திட்டமிட்டிருந்தார்கள் என்று ஆர்வத்துடன் ஏற்பாட்டாளரின் பட்டியலைப் பார்த்தேன். நுணுக்கமான விவரங்களுக்கு கவனம் செலுத்தி, ஒரு முழுமையான செயல் திட்டம் மேற்கொள்ளப் பட்டதை கண்டுபிடித்ததில் நான் மகிழ்ச்சியடைந்தேன்.

- ❖ பிளாஸ்டிக் மற்றும் மறுசுழற்சி செய்ய முடியாத பொருட்களை குறைக்கும் நடவடிக்கைகளை செயல்படுத்துதல்.
- ❖ பார்வையாளர்கள் கழிவுகளை அகற்றும் போது பிரித்து வைக்கும் வகையில், மைதானம் முழுவதும் குப்பைகளை பிரிக்கும் நிலையங்களை அமைக்கவும். முக்கிய கழிவுகள் உற்பத்தி செய்யும் பகுதிகளில், தன்னார்வலர்கள் திருவிழாவில் கலந்து கொள்பவர்களுக்கு கழிவுகளை பிரிக்கும் செயல்முறை குறித்து வழிகாட்ட வேண்டும்.
- ❖ ஒரு குழு 15 வகைகளுக்கு மேல் கழிவுகளை வகைப்படுத்தும் பகுதியை பின்பகுதியில் நிறுவவும். அனைத்து மக்கும் மற்றும் மறுசுழற்சி செய்யக்கூடிய கழிவுகள் பதபடுத்த உரம் தயாரிக்கும் நிலையங்கள் அல்லது உலர் கழிவு மையங்களுக்கு கொண்டு செல்லப்படும்.
- ❖ கழிவு வகைகளில் காகிதம், பிளாஸ்டிக், கேன்கள், கண்ணாடி பாட்டில்கள், அட்டை, உணவுக் கழிவுகள், மக்கும் தட்டுகள் மற்றும் மின்-கழிவுகள் போன்ற பொருட்கள் அடங்கும்.
- ❖ நிகழ்ச்சியில் அதிகப்படியான உண்ணக்கூடிய உணவுகள் அனைத்தும் சேகரிக்கப்பட்டு, குறைந்த வருமானம் கொண்ட சமூகங்களுக்கு விநியோகிக்க உள்ளூர் NGOகளுடன் பகிர்ந்து கொள்ளப்படும்.
- ❖ கழிவுகளை குறைக்க, பயிர் கழிவுகளில் இருந்து மீண்டும் பயன்படுத்தக்கூடிய கோப்பைகள் வழங்கப்படும், சுற்றுச்சூழல் நட்பு கோப்பைகளை பயன்படுத்து வோருக்கு சிறிய தள்ளுபடி கூட வழங்கப்படும்.
- ❖ நீர் விநியோகிப்பு திட்டம் நடைமுறையில் இருக்கும். இந்நிகழ்ச்சியில் பிளாஸ்டிக் பாட்டில்களின் பயன்பாட்டைக் குறைக்க, பல பகுதிகளில் இலவச தண்ணீர் வழங்கும் நீர் நிலையங்கள் மூலம் சேவை செய்ய வேண்டும். தங்களுடைய தண்ணீர் பாட்டில்களை எடுத்துச் செல்லாத பங்கேற்பாளர்களுக்கு, 150 ரூபாய்க்கு மீண்டும் பயன் படுத்தக்கூடிய கண்ணாடி பாட்டில்கள் விநியோகிக்கப்படும். அந்த பாட்டில்களை திரும்பப் பெறும்போது நுகர்வோருக்கு ரூ.50 திருப்பித் தரப்படும்.

இந்த நடவடிக்கைகள் ஒரு நிகழ்வைத் திட்டமிடும்போது பின்பற்றக்கூடிய நன்கு சிந்திக்கப் பட்ட உத்திகளாகத் தோன்றுகின்றன. எனவே, இப்போது உங்கள் அடுத்த பெரிய மாநாடு, அல்லது இசைக் கச்சேரியை நீங்கள் திட்டமிடும் போது, அதை நிலையானதாகவும் பசுமையாகவும் மாற்ற என்ன செய்ய வேண்டும் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.

## RC **நாகப்பட்டினம்** — RID 2981




நகராட்சி நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற பல மருத்துவ முகாமில் சுமார் 230 மாணவர்கள், ஆசிரியர்கள் பரிசோதிக்கப் பட்டார்கள்.

## RC **வைஜாக் கப்புள்ஸ்** — RID 3020

சாந்தி ஆசிரமத் துக்கு ரூ.40,000 மதிப்புள்ள 2 மேசைக் கணினிகள், 10 மின் விசிறிகள், 1 அச்சிடும் இயந்திரம் கொடையளிக்கப் பட்டன.



## RC **புதுக்கோட்டை சிட்டி** — RID 3000



Be Well மருத்துவ மனை ஆதரவுடன் நடத்தப்பட்ட நல முகாமில் 150க்கும் மேற்பட்ட மக்களுக்கு ரத்தச் சர்க்கரை, BP போன்ற நோய் களுக்குப் பரிசோதனை நடைபெற்றது.

## RC **நாசிக் வெஸ்ட்** — RID 3030

கண் பார்வைக் குறைபாடு கொண்ட 45 பெண்களுக்குத் தற்காப்பு, கராத்தே பயிற்சி வழங்கப் பட்டது.



## RC **தில்லி மயூர் விகார்** — RID 3012



யமுனை ஆற்றின் கரையில் உள்ள பன்ஃபூல் பள்ளியில் விவசாயி களுடைய குழந்தை களுக்கு Rtn ராஜீவ் குப்தா, அவருடைய துணைவர் ஷஷி ஆதரவில் கம்பளி வழங்கப்பட்டன.

## RC **ஹல்வாத்** — RID 3060

இச்சங்கம் ஹல்வாதில் ஒரு ரோட்டரி தோட்டத்தை அமைத்துள்ளது. சிறுவர் பூங்கா, உடற்பயிற்சி கூடம், நடை பாதை, பிற வசதிகள் இடம்பெறும்.



# செய்திகள்

## RC **கரார்** — RID 3080



பஜ்ஹேதி கிராமத்தில் பல் பரிசோதனை, தூய்மை முகாம் நடத்தப்பட்டது. Dr நீது கோயல் நல்ல உண்ணும் பழக்கங்கள் மற்றும் வாய்த் தூய்மைபற்றிப் பேசினார்.

## RC **கான்பூர் கிரீன்** — RID 3110

MP சத்யதேவ் பசௌரி அவர்களுடைய கோரிக்கையைத் தொடர்ந்து, இந்தச் சங்கம் ஏழைச் சிறுமிகளின் பள்ளிக் கட்டணத்தை ஆதரித்தது.



## RC **ஃபரீத்கோட்** — RID 3090



ஃபரீத்கோட்டில் உள்ள தஷ்மெஷ் மருத்துவ மனையில் நடத்தப்பட்ட மருத்துவ முகாமில் முதியவர்கள் பரிசோதிக்கப் பட்டனர்.

## RC **குஷிநகர்** — RID 3120

காசியா-வில் உள்ள சமூக நல மையத்தில் 26 TB நோயாளிகளுக்கு ஊட்டச்சத்து மிக்க உணவுப் பொதிகள் கொடை அளிக்கப் பட்டன.



## RC **மொராதாபாத்** — RID 3100



புத்தாண்டை முன்னிட்டு ரோட்டரியன்கள் விரித்தா ஆசிரமம் என்ற முதியோர் இல்லத்துக்குச் சென்றார்கள், அங்கு உள்ள 120 பேருக்குத் தின்பண்டங்கள், தேநீர், பழங்களை வழங்கினார்கள்.

## RC **புணே திலக் ரோட்** — RID 3131

உலக நீரிழிவு நாளை முன்னிட்டு, 13 இடங்களில் நீரிழிவு விழிப்புணர்வு, கண்டறிதல் முகாம் நடை பெற்றது.



## RC **கராட்** — RID 3132



புணே-யில் உள்ள சன்செடி மருத்துவ மனை ஆதரவுடன் நடத்தப்பட்ட எலும்பு மருத்துவ முகாமில் 250க்கும் மேற்பட்ட மக்கள் பரிசோதிக்கப் பட்டார்கள்.

## RC **மங்களூர் சிட்டி** — RID 3181

RC ஷெரெவில்லெ, RID 6540, ஆதரவுடன், ரூ.34 லட்சம் மதிப்புள்ள ICU வசதி ஒன்று மங்களூரில் உள்ள லேடிகோஷென் மருத்துவ மனைக்குக் கொடையளிக்கப்பட்டது.




## RC **ஹிராநந்தானி எஸ்டேட்** — RID 3142



இரண்டு கட்டங்களில் செயற்கைக் கை, கால் பொருத்தும் முகாம் ஒன்றில் 107 பேர் பலன் பெற்றார்கள், இயல்பான வாழ்க்கையை வாழும் மகிழ்ச்சியைப் பெற்றார்கள்.

## RC **கோயம்பத்தூர் கிரீன் சிட்டி** — RID 3201

பெர்சொனிவ் ரோட்டராக்ட் சங்கத்துடன் இணைந்து, 52 அரசுப் பள்ளிகளில் கணினி ஆய்வகங்கள் நிறுவப் பட்டன. ரூ.80 லட்சம் மதிப்புள்ள இந்தத் திட்டத்தை DG ராஜ்மோகன் நாயர் தொடங்கிவைத்தார்.



## RC **கோல்ஹாபூர் சிட்டி** — RID 3170



கோல்ஹாபூரில் உலக இளம்பிள்ளைவாத நாளை முன்னிட்டு, மற்ற சங்கங் களுடன் இணைந்து நடத்திய இரு சக்கர வண்டிப் பேரணியை DG வெங்கடேஷ் தேச்பாண்டெ தொடங்கிவைத்தார்.

## RC **திருப்பூர் செலிப்ரேஷன்** — RID 3203

இந்தச் சங்கத்தின் குடைக்குள் மழை திட்டத்தின் கீழ், மழைக்காலத்தில் குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல உதவியாகச் சுமார் 300 குடைகள் வழங்கப்பட்டன.



# செய்திகள்

## RC **ஆலப்பே காயர் சிட்டி** — RID 3211



பூம்காவுனில் உள்ள மேரி இம்மாகுலேட் உயர்நிலைப் பள்ளியில், சங்கத் தலைவர் சிஜூ ஜாய், AG தாமஸ் ஆன்டோ முன்னிலையில் ஆய்வாளர் சலீனா பீவி சானிட்டரி நாப்கின் எரியூட்டி ஒன்றை நிறுவினார்.

## RC **ஜாம்ஷெட்பூர் ஈஸ்ட்** — RID 3250



திருநங்கை யருக்கான காசநோய் மற்றும் மருத்துவ முகாம் ஒன்றை சங்கம் ஜாம்ஷெட்பூரில் ஏற்பாடு செய்தது.

## RC **போர்ட் சிட்டி கொலச்செல்** — RID 3212



பொதுமக்களுக்குப் புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்று நடத்தப் பட்டது, 100 மரக் கன்றுகள் வழங்கப் பட்டன.

## RC **புபனேஸ்வர் மீடோஸ்** — RID 3262



சான்டகா கிராமத்தில் உள்ள 80 ஆதிவாசி களைக் குளிரில் இருந்து பாதுகாக்கப் போர்வைகள் வழங்கப் பட்டன.

## RC **தர்மாநகர்** — RID 3240



மிகப் பெரிய நல முகாம் ஒன்று நடத்தப்பட்டு முதியவர்கள், குழந்தை களுடைய பொது நலப் பிரச்சனைகள் பரிசோதிக்கப் பட்டன.

## RC **சால்ட் லேக் மெட்ரோபாலிட்டன்** — RID 3291



வடக்கு 24-பர்கனாஸ்-ல் உள்ள நவோபரா கிராமத்தில் நடை பெற்ற GG நிதி உதவியுன், பெண்களுக் கான இரத்த சோகைப் பரிசோதனை முகாம் நடத்தப் பட்டது.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# ஆக்ஸ்போர்டு நினைவலைகள்!

TCA ஸ்ரீனிவாச ராகவன்

கடந்த மாதம் நான், 1983ம் ஆண்டு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் குறுகிய காலமாக மூன்று மாதம் தங்கியிருந்தது தொடர்பாக ஒரு புத்தகம் எழுதினேன். லத்தீன் அமெரிக்க கடன் நெருக்கடி பற்றி ஒரு கட்டுரை எழுத நான் அங்கு சென்றிருந்தேன். அதற்கு 6 ஆண்டுகளுக்கு பிறகு நான் விண்ணப்பித்தபோது ஆக்ஸ்போர்டில் உள்ள ராணி எலிசபெத் மாளிகையிலிருந்து எனக்கு அழைப்பு வந்தது. இந்திய பொருளாதாரம் பற்றி புத்தகம் எழுதுவதற்காக ஒருவருடம் செலவிட இருந்தேன். நான் புத்தகம் எழுதத் தொடங்கியபோதிலும் அதை முடிக்க முடியவில்லை. ஏனெனில் 1991 ஆம் ஆண்டு இந்திய பொருளாதாரத்தில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டது. பழைய தகவல்கள் பொருத்தமற்றவையாக மாறிவிட்டன.

ஆக்ஸ்போர்டு முற்றிலும் மாறுபட்ட அனுபவமாக இருந்தது. ராணி எலிசபெத் மாளிகை (QEH) இந்திய அதிகாரிகளுக்கும், இந்திய அரசாங்கத்தின் இதர ஊழியர்களுக்கும் பெரிய அளவிலான சர்வதேச திட்டத்தை கொண்டிருந்தது. நாங்கள் அனைவரும் புகழ்பெற்ற பான்பரி சாலையில் உள்ள நார்த் ஆக்ஸ்போர்டு ஓவர்சீஸ் சென்டர் (NOOC) என்ற இடத்தில் ஒரு கட்டடத்தில் அறைகளில் தங்கவைக்கப் பட்டிருந்தோம். அந்த இடம் ஒன்றும் அவ்வளவு சௌகரியமாக இல்லை. மேலும் எனது மனைவி மற்றும் இரண்டு மகன்கள் என்னுடன் சேர்ந்து கொண்டதால் அங்கிருந்து வேறு இடத்திற்கு செல்ல விரும்பினேன். ஆனால், எனது தோலின் நிறம் குறுக்கிட்டதால் என்னால் ஒரு வீட்டை வாடகைக்கு எடுக்க முடியவில்லை. எனவே நாங்கள் நான்குபேரும் அதே கட்டடத்தில் ஒரு பெரிய அறையில் சூழ்நிலையை அனுசரித்து தங்கியிருந்தோம். அந்த அறையில் ஒரு சிறிய சமையல் அறையும், அறைக்குள்ளேயே குளியலறை மற்றும் கழிப்பறை இணைக்கப்பட்டிருந்தது. ஒருநாள் அதிகாலை 3 மணி அளவில் யாரோ எங்கள் அறை ஜன்னல் மீது கற்களை வீசினார்கள். ஜன்னல் கண்ணாடிகள் சிறுதுண்டுகளாக சிதறின. ஜன்னலில் திரைச்சீலை இருந்தால் நாங்கள் காயமின்றி தப்பித்தோம். ஆக்ஸ்போர்டில் வெளிப்படையாகவும், மறை முகமாகவும் இனவெறி நிறைய இருந்தது. அதைப்பற்றி சொல் வதானால் என்னிடம் பல கதைகள் உள்ளன. சுருக்கமாகச் சொன்னால் ஆக்ஸ்போர்டு கேம்பிரிட்ஜிலிருந்து வித்தியாசமானது.

ஒரு சனிக்கிழமை காலை நான் வழக்கமான வெள்ளை குர்தா, சல்வார் மற்றும் கதர் ஜாக்கெட் அணிந்துகொண்டு கடைக்குச் சென்று பொருள்கள் வாங்கிவிட்டு திரும்பிக் கொண்டிருந்தேன். அந்தப் பகுதியே ஆள்நடமாட்டம் இல்லாமல் வெறிச்சோடிக் கிடந்தது. அப்போது சாலையின் எதிர்புறத்தில் ஒரு டாக்ஸி வந்து நின்றது. அந்த காரை ஓட்டிவந்த தெற்கு ஆசியாவைச் சேர்ந்த டிரைவர், உங்களை எங்காவது இறக்கிவிட வேண்டுமா? என்று கேட்டார். எனது வீட்டை நெருங்கிவிட்டதாக நான் அவரிடம் கூறினேன். ஆனால், அவர் என் உடைகளை பார்த்துவிட்டு தொடர்ந்து வற்புறுத்தியதால் காரில் ஏறிக்கொண்டேன். அரை கி.மீ. தொலைவில் உள்ள எனது இருப்பிடத்தை அடைந்ததும் அந்த டிரைவருக்கு பணம் கொடுத்தபோது வாங்க மறுத்துவிட்டார். வீட்டுக்கு வாங்க டீ குடிக்கலாம் என்று அழைத்தேன். அப்போது அவர் என்னிடம் நான் பாகிஸ்தானைச் சேர்ந்த மாணவன். பணத் தேவையால் வார இறுதி நாட்களில் கார் ஓட்டி சம்பாதிக்கிறேன் என்றார். அவர் என் மனைவியிடம் வார இறுதியில் நான் கார் ஓட்டுவேன். உங்களுக்கு இலவசம். எப்போது வேண்டுமானாலும் கூப்பிடுங்கள் என்றார். 1990ல் இந்தியா-பாகிஸ்தான் இடையே பதற்றம் நீடித்த நிலையில் அவர் சொன்ன வார்த்தை இது.

அந்த சாலையின் ஒருபுறத்தில் வங்கதேசத்தைச் சேர்ந்த ஒருவர் சிறிய கடை வைத்திருந்தார். அவர் எப்போதும் கோபக்காரர் போலவே இருப்பார். அவருக்கு பெங்காலியைத் தவிர வேறு எந்த மொழியும் தெரியாது. இங்கிலாந்தில் மொழி தெரியாமல் ஒருவர் எப்படி கடை வைத்திருக்கிறார் என்பதை கற்பனை செய்து பாருங்கள். கடைக்கு தேவையான பொருள்களை வாங்குவதற்கு இரண்டு வங்கதேச மாணவர்கள் மூலம் ஆர்டர் கொடுப்பார். அவர் இந்தியர்களிடம் அதிகவிலை கேட்பதே இல்லை. ஆனால், பாகிஸ்தானியர்கள் உள்ளூர்க்காரர்களைப் போலவே நியாயமாக இருப்பார்கள். வங்கதேசத்தைச் சேர்ந்த அந்த நபர் காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை திறந்துவைத்திருப்பார்.

இந்தியர்கள் எப்படி தங்கள் இருப்பிடத்துக்கு எதிரில் உள்ள பெரிய மருத்து வமனையில் இலவசமாகவோ அல்லது சலுகை விலையிலோ உணவு வாங்கி வயிறு நிறைய சாப்பிடுவதில் வல்லவர்கள். சுருக்கமாகச் சொன்னால் மருத்துவமனை புகார் தெரிவித் ததால் அவர்கள் தர்ம சங்கடத்தை சந்திக்க நேர்ந்தது.■

# செய்தித் துளிகள்



### 365 நாள் மாரத்தான் ஓடியவர்

வடக்கு இங்கிலாந்தில் வசிக்கும் கேரி மெக்கீ என்பவர் புற்றுநோய்ச் சிகிச்சைக்குப் பணம் திரட்ட 2022ல் ஒவ்வொரு நாளும் மாரத்தான் ஓடியுள்ளார். நாள்தோறும் வேலைக்குச் செல்லுமுன் அவர் 26.2 கிமீ ஓடினார், ஆண்டில் மொத்தம் 15,300 கிமீ ஓடினார், இதன் மூலம் வடக்கு இங்கிலாந்தில் உள்ள மெக்மில்லன் புற்றுநோய் ஆதரவு மற்றும் மேற்கு கும்ப்ரியா ஹாஸ்பைஸுக்கு £1 மில்லியன் திரட்டியுள்ளார்.■



### இந்தியாவில் பெண்களுக்கு மிகப் பாதுகாப்பான நகரம் சென்னை

அவ்தார் என்ற திறன் வியூக அறிவுறுத்தல் நிறுவனம் நகரங்களைப் பல அளவீடுகளில் ஆராய்ந்தது: வாழ்தல் எளிமை, பாதுகாப்பு, பெண்கள் பிரதிநிதித்துவ விகிதம், பெண்களுக்கு ஆற்றல் அளிக்கும் முன்னெடுப்புகள். இதில் மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்ட நகரங்களில் 78.41 மதிப்பெண்ணுடன் சென்னை இந்தியாவில் பெண்களுக்கு மிகப் பாதுகாப்பான நகரமாக மதிப்பிடப் பட்டுள்ளது. இந்த வரிசையில் அடுத்து வரும் மற்ற நகரங்கள்: புனே, பெங்களூரு, ஹைதராபாத் மற்றும் மும்பை.■



### சூரிய ஒளியில் இயங்கும் கார்

டச்சு நிறுவனமான லைட்இயர் 4 முதல் 5 பேர் செல்லக்கூடிய, பகல் ஒளி உள்ள போதெல்லாம் (வண்டி நிறுத்தப்பட்டிருந்தாலும், சென்று கொண்டிருந்தாலும்) மின்னேறுகிற மின் வண்டி ஒன்றைத் தயாரிக்கத் தொடங்கியுள்ளது. லைட் இயர் 0 என்று பெயரிடப்பட்டுள்ள, நீண்ட தொலைவு செல்லக் கூடிய இந்தச் சூரிய ஒளிக்காரின் தொடக்க விலை £250,000, இது செல்லும் வழியில் தானாக மின்னேறிக்கொள்ளும், ஒரு நாளைக்கு 70 கிமீ வரை செல்லும் திறனைச் சூரியனிடமிருந்து பெறும்.■



### நலிந்த இளைஞர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்குதல்

லண்டனைச் சேர்ந்த மனித ஆற்றல் நிறுவனமான ரேர் ரெக்ரூட்மெண்ட் நலிந்த இளம் பிரிட்டன் மக்களுக்கு UKன் மிகவும் மதிப்புமிக்க நிறுவனங்களில் வாய்ப்புகளை உருவாக்கு கிறது. இந்த நிறுவனம் "பின்னணி கொண்ட ஆட்சேர்ப்பு அமைப்பு" என்ற ஒரு தீவிரமான வழிமுறையைப் பயன்படுத்தி, நலிந்த பின்னணிகளைக் கொண்ட திறமையாளர்களை அடையாளம் காணுகிறது. 2015லிருந்து இதுவரை 1.7 மில்லியன் விண்ணப்பங்களில் "பின்னணியைச் சேர்த்துள்ளது".■



### பெருங்கடலைப் பாதுகாக்கும் நீலப் பட்டைகள்

கடனிலும் குறைந்த வரி வருவாயைக் கையாளுதலிலும் தடுமாறிக்கொண்டிருக்கும் தீவு நாடாகிய பார்படோஸுக்கு இயற்கைக்குக் கடன் மறு நிதியளித்தல் திட்டத்தின்கீழ் இயற்கைப் பாதுகாப்பு அமைப்பின் பெருங்கடலுக்கு நீலப் பட்டைகள் பாதுகாப்பு வியூகம் 50 மில்லியனைப் பெற்றுத்தரும். தான் கூட்டாளர்களுடன் இணைந்து பணியாற்றி பார்படோஸின் நாட்டுக் கடனில் ஒரு பகுதியை வாங்குவதாகவும், அதன் எல்லைப்புற நீர்ப்பரப்பில் 30%ஐப் பாதுகாக்கும் அந்த நாட்டின் இலக்குக்கு வழிசெய்ய அதற்கு மறு நிதி அளிப்பதாகவும் இயற்கைப் பாதுகாப்பு அமைப்பு அறிவித்தது.■

*ஒருங்கிணைப்பு: கிரண் ஜெஹரா; வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்*

Registered No. TN/CCN/677/2022-2024
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-24
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month

Advt

# ரோட்டரி நியூஸில் விளம்பரம் செய்யுங்கள்




*1.45 லட்சம் சந்தாதாரர்கள், 6 லட்சம் வாசகர்களுடன் இணைவதால், பத்திரிகையில் உங்கள் விளம்பரம் மிகவும் செல்வாக்கு மிக்க தொழிலதிபர்கள், வணிகர்கள், நிதி வல்லுநர்கள், மருத்துவர்கள் மற்றும் வழக்கறிஞர்களை சென்றடைகிறது.*

| Tariff (per insert) | |
|---|---|
| Back cover | ₹1,00,000 |
| Inner Front Cover | ₹60,000 |
| Inner Back Cover | ₹60,000 |
| Inside Full Page | ₹30,000 |
| Half Page | ₹20,000 |

| Specifications | |
|---|---|
| 17 x 23 cm | Full page |
| 17 x 11 cm | Half page |

**Advertisements in colour only**

மூன்று மாதங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட விளம்பரங்களுக்கு கவர்ச்சிகரமான தள்ளுபடிகள் உண்டு.

## ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட்

**தொலைபேசி:** 044 42145666, **ஈமெயில்:** rotarynews@rosaonline.org